இலங்கை
மெதடிஸ்த திருஅவை

# இருநூற்றாண்டு விழா
# 1814-2014

## கிறிஸ்துவில் முன்செல்வோம்

### ஜெப தியானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பேரவை தலைவரின் செய்தி

வெகு விரைவில் நமது திருச்சபை சரித்திர பூர்வமான இருநூற்றாண்டுக்கூடாக கடந்து செல்லவிருக்கின்றது. ஆண்டவரின் கரம் இவ்வருடத்திற்கூடாக கடந்துசெல்லும் எம் ஒவ்வொருவரோடும் கூட இருக்கவேண்டும் என்பதை எமது பிரார்த்தனைகளில் நினைவு கூற அழைக்கப்படுகின்றோம்.

மெதடித்த திருச்சபையின் 200வது ஆண்டு நினைவுகூரலின் ஒரு பகுதியாக இத்தியான நூல் உங்கள் கைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் உள்ள தியானங்கள் குருமார்களினால், நற்செய்தி பணியாளர்களினால், உள்ளூர் அருளுரையாளர்களினால் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தியானத்தோடும் அத்தியானத்தோடு தொடர்புள்ள வேதபகுதியும் ஒவ்வொரு வாரத்திலும் நீங்கள் ஜெபிக்க வேண்டிய விடயங்களுக்கான தலைப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜுன் 2013 முதல் ஜுன் 2014வரை உங்கள் இல்லங்களில் வைத்து இலங்கை மெதடித்த திருச்சபையின் பணிக்காகவும், இலங்கை மெதடித்த திரு அவையை நடத்தி வந்த ஆண்டவரின் கரம் தொடர்ந்து இருக்க வேண்டுமென ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். இலங்கை மெதடித்த திருச்சபை அங்கத்தவராக இருக்கும் நீங்கள் ஆண்டவரில் மேலும் பெலப்பட தேவையான தலைப்புகளும் இத்தியான நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இத்தியான நூல் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமுள்ளதொன்றாக இருக்க ஆண்டவரை பிரார்த்திக்கின்றோம்.

அருட்திரு பென்ஜமின் கிளவ், அருட்திரு வில்லியம் ஹவாட் அவர்களும் மனைவியும், அருட்திரு ஜேம்ஸ் லின்ஞ், அருட்திரு ஜோர்ஜ் இரெஸ்கின், அருட்திரு தோமஸ் ஸ்குவான்ஸ் அருட்திரு வில்லியம் ஓல்ட் அவர்களும் மனைவியும், அருட்கலாநிதி தோமஸ் கோக் அவர்களின் தலைமையில் இலங்கை பணிக்கான பயணத்தை 30 டிசம்பர் 1813ல் மேற்கொண்டனர். இப் பயணத்தில் அருட்கலாநிதி தோமஸ் கோக் அவர்களும் திருமதி ஓல்ட் அவர்களும் இறைபதம் அடைய மற்றவர்கள் 1814ம் ஆண்டு 29 ஜுன் மாதத்தில் இலங்கையில் காலடி பதித்தனர். இன்றைய தினம்தான் மெதடித்த திருஅவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வருடத்தில் நடைப்பெறவேண்டிய நிகழ்வுகளுக்கு ஆயத்தங்கள் பலசெய்ய வேண்டி இருப்பினும் இவ் ஆயத்தங்களுக்கு அப்பால் ஆண்டவரின் வழிநடத்துதல் எம்மோடு கூட இருக்க பிரார்த்தனை செய்ய அழைக்கப்படுகின்றோம். இவ்வருடத்தில் நடைப்பெறும் நிகழ்வுகளுக்கூடாக ஆண்டவர் திருச்சபையின் வாழ்விலும் மாற்றங்களை உருவாக்க வேண்டி நிற்போம்.

அருட்கலாநிதி அ.வி ஜெபநேசன்
திருப்பேரவைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Contributors

Rev. Dr.A. W. Jebanesan, Rev. A.J. Anpurajah, Rev. A.R. Mahendran, Rev. Asiri P. Perera, Bro. Bennette Kalimutthu" Mr. Chinthaka Warnakulasuriya, Mr. D.P. Srinath Perera, Rev. Duleep Fernando, Rev. G.Anthony Satish, Sis. Indika Fernando" Rev. J.Anandarajah" Rev. J.C.S. Rohitha de Silva, Rev. J.W. Jogarajah, Rev. K. Karunasekera, Rev. Lakpriya de Silva, Bro. Lalith Fernando, Rev. Lalitha Gunaratne, Bro. Newman Suthan" Rev. Noel Fernando, Rev. Norman Fernando, Rev. P. H. Piyasena, Rev. P. Shihan Fernando, Sis. Prashanthi Karunaratne, Bro. Priyantha Fernando, Mrs. Puvaneaswary Sasitharan, Mrs. Rajini Jegasothy, Rev. Rohan Gogerly, Rev. S. Devadasan" Rev. S. J. Kathiresapillai" Rev. S. S. Gnanarajah" Rev. Sumith Weeramunde.

## Proof readers & translators

Mrs. Jessie Thavarajasingham,Rev. K.J.Arulrajah , Miss. Lakmini Kaushalya, Mrs. Lakshmi Alexander, Bro. Newman Suthan"Miss. Prasangi Fernando, Mrs. Priya Jebanesan, Sis. Pushpalatha Suthan" Mrs. Rajini Kathiresapillai, Mrs .Vanaja Victor

## Cover Design

Dan Alagarajah

## Prepared by

Methodist Church Prayer Ministry
Department of Evangelism
Methodist Headquarters"
252"Galle road"
Colombo 03"

**Telephone : 011 2575179" Fax : 0112436090"**

**Email : prayer _m@methodistsrilanka"org**

## Published by

The Ceylon Bible Society

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


வாரம் 01- கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை
வாரம் 02- சிறிதளவில் செயற்பட்டு பெரிதளவில் சாதிப்போம்
வாரம் 03- உலகில் உருவாகும் கடவுளின் ராஜ்யம்
வாரம் 04- மனித வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள்
வாரம் 05- எமக்கு உகந்தவை
வாரம் 06- ஜெபிக்க (மன்றாட) முடியவில்லை?
வாரம் 07- தேவையானவைகள் எவை?
வாரம் 08- விதைத்தலும் அறுத்தலும்
வாரம் 09- இறைவனைப் பிரதிபலித்தல்
வாரம் 10- துன்பமும் கவலையும்!
வாரம் 11- பாவத்திற்கு எதிரான போர்
வாரம் 12- சபையின் பிள்ளைகள்
வாரம் 13- நேரான சிந்தனை
வாரம் 14- எனது சுற்றாடல்
வாரம் 15- மலைகளை அசைக்கும் நம்பிக்கை
வாரம் 16- கடவுளில் வைக்கும் பற்றுறுதி
வாரம் 17- கர்த்தருடைய இருதயத்தை நோகப்படுத்தாதே
வாரம் 18- இறைவன் தேடும் மனிதன்
வாரம் 19- கருத்துள்ள வாழ்க்கை
வாரம் 20- எமக்கு உதவி செய்பவர்களை அறிந்து கொள்ளல்
வாரம் 21- சூதாட்டம்
வாரம் 22- மெதடித்த திருச்சபையின் 200வது ஆண்டுவிழா
வாரம் 23- பிழையற்றது
வாரம் 24- திருச்சபையும் வாலிபனும்
வாரம் 25- ஒரு சீடனின் உத்தரவாதம்
வாரம் 26- சலனங்களே தோல்வியின் காரணிகள்
வாரம் 27- இறைவன் தேடும் அனுமதியைத் தேடல்
வாரம் 28- என் பின் பக்கத்தைக் காண்பாய்
வாரம் 29- சில துன்பங்கள் புரியாத புதிர்களே
வாரம் 30- கடவுளின் கோபம்
வாரம் 31- இச்சையடக்கமுள்ள சரீரம்
வாரம் 32- லேயாள் அழகற்றவள்
வாரம் 33- இன்னும் மயக்கமா?
வாரம் 34- விழிப்புணர்வுள்ளவர்களாக வாழ்தல்
வாரம் 35- நீ எங்கே இருக்கிறாய்?
வாரம் 36- கடவுள் படைத்த உலகம்
வாரம் 37- கிறிஸ்தவ பெற்றோரும், கிறிஸ்தவ பிள்ளைகளும்
வாரம் 38- இறைவன் தரும் விடுதலை
வாரம் 39- தேவ ஜனங்களுக்கு பாவ மன்னிப்பு கொடுத்தல்
வாரம் 40- பிறர் குற்றங்களை மன்னித்தல்
வாரம் 41- புரிந்து கொள்ளமுடியாத மன்னிப்பு
வாரம் 42- நேர்மையான மனிதன் தாவீது
வாரம் 43- ஆறுதலின் கரம்
வாரம் 44- சபையாக முன்செல்ல...
வாரம் 45- தோல்வி வாழ்வின் பின்னடைவா?
வாரம் 46- யுத்தம்
வாரம் 47- தேவ ஊழியனின் சிந்தனைகள்
வாரம் 48- நாமே ஜெபிக்கலாம்
வாரம் 49- புதிய ஏற்பாட்டின் ஜெபம்
வாரம் 50- எதிர்மறையான சிந்தனை
வாரம் 51- எமது ஆயுசு நாட்கள் எவ்வளவு?
வாரம் 52- தேவசாயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 01

# கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை

அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர் ...
(ஏசாயா 40:22)

நாம் வாழும் இவ்வுலகமானது 510 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டு, வளி மண்டலத்திலே, அந்தரத்திலே கோளவடிவமாக சூரியனை சுற்றி பல கோள்களுடன் வலம் வருகின்றது, என்பதை விஞ்ஞானிகளான தொலமி, கலிலியோ, கொப்பனிக்கஸ் போன்றோர் கூறுகின்றனர். எனினும் வேதாகமத்தில் இதற்கு முன்பே ஏசாயா தீர்க்கத்தரிசி பூமி உருண்டையானது என்றும், அதனை தேவன் நடத்துகின்றவர் என்றும் அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர் என்றும் கூறுகின்றார். இந்த புவியிலே தான் மானிடர்கள் வானைத் தொடும் கட்டிடங்களையும், கோபுரங்களையும் போட்டி போட்டு அமைக்கின்றனர். இப் போட்டியினால், ஆண்டவர் உருவாக்கிய இயற்கை படைப்புக்களுக்கு பல பாதிப்புகள் உருவாகுவதை நாம் உணர்ந்து கொள்வதில்லை.

வேதாகமத்தில் மாசற்றவனும், நேர்மையானவனும், கடவுளுக்கு அஞ்சி நடப்பவனுமாயிருந்த யோபுவினுடைய வாழ்வில் பிசாசானவன் போராட்டங்களை உண்டு பண்ணுகின்றான். யோபுவோ அதனை சவாலாக எதிர் கொண்டு கடைசி வரை உத்தமனாக இறைவனை தூற்றாதவனாக இருக்கிறான். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் படிப்பினைகளை வைத்து கிறிஸ்துவுக்குள் இறுதிவரை நிலை நிற்பவராக நம்மை மாற்றிக் கொள்ளவும், கிறிஸ்தவர்களாகிய நாம் கடவுள் உருவாக்கிய இப்படைப்பில் முன்னோக்கி போகவும் அழைக்கப்படுகிறோம்.

வேதாகமத்தில் யோபு பக்தனுடைய வாழ்க்கையில் பல போராட்டங்கள் வந்தபோதும் அவற்றை சவாலாக எதிர் கொண்டு அவன் கடைசிவரை மாசற்றவனாக இருக்கிறான். நம்முடைய வாழ்க்கையில் சவால்களை சந்திக்கும் போதும், குழப்பங்களுக்கு முகம் கொடுக்கும் போதும், இவை எல்லாவற்றிற்கூடாகவும் இறைவன் நம்மை முன்னோக்கி செல்ல அழைத்திருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வு மற்றவர்களுக்கு ஒளியாக இருக்க வேண்டியதொன்று என்ற எண்ணத்தை மனதில் வைத்து, கிறிஸ்துவில் முன்னோக்கிச் செல்ல தேவன் உங்களை வழி நடத்துவாராக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் மனிதருக்கு கொடுத்திருக்கின்-
ற ஞானம், அறிவு அனைத்திற்காகவும் நன்றி
செலுத்துகின்றோம்.

திங்கள் : இறைவா! நீர் திருமறையில் தருகின்ற
விசுவாசத்தின் உறுதிகளுக்காக உம்மைப்
போற்றுகின்றோம். எமது இயற்கையைப்
பாதுகாக்கும் உத்வேகத்தை தாரும்.

செவ்வாய் : இறைவா! எம் கருமங்களை சரிவரச் செய்து
உமக்கு ஏற்றவர்களாக வாழ எமக்கு உதவி
யருளும்.

புதன் : எம்வாழ்வில் போராட்டங்கள் வருகின்ற போது
நாம் உத்தமமாய் நடந்து உம்மை
மகிமைப்படுத்த எங்களை ஏவியருளும்.

வியாழன் : இறைவா! நாங்கள் முகம் கொடுக்கின்ற
அனைத்து சூழ்நிலைகளிலும் நீர் எங்களோடு
இருக்கிறீர் என்பதை உணர்ந்துக் கொள்ள
உதவி செய்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே! நீர், எங்களுடைய வாழ்வில்
தோல்வியை சந்திக்கும் போது அதனூடாக நீர்
எங்களுக்கு கற்றுக் கொடுக்கின்ற
பாடங்களுக்காக நன்றி செலுத்துகிறோம்.

சனி : ஆண்டவரே! எம்மை இவ்வுலகிற்கு உப்பாக
இருக்க கட்டளையிட்டீர். அவ்வாறே நாம் சமூக
வாழ்வில் செயல்பட எமக்கு
உதவியருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 02

# சிறிதளவில் செயல்பட்டு பெரிதளவில் சாதிப்போம்

இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்கு போதாதே (யோவான் 6:7)

கல்வி கற்போர் கல்வியில் பெரிதளவில் சாதிக்க வேண்டும் எனவிரும்புவர். அலுவலகத்தில் வேலை செய்வோர் சாதாரண நிலையில் இருந்து உயர்மட்டத்தை அடையவேண்டும் என்று விரும்புவர். விற்பனையாளர்கள் அதிகளவு இலாபத்தை அடையவேண்டும் என்று முயற்சிப்பர். திருச்சபைகள் அநேக அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவர். அரசியல் அமைப்புக்கள் அதிக மக்கள் ஆதரவை பெறவேண்டும் என்றும் விரும்புவர். எனவே மனித மனம் என்பது சிறிய அளவுகளில் எப்போதுமே திருப்பதியடைவதில்லை. ஆனாலும் சிறிதளவில் ஆரம்பிக்கும் எமது முயற்சிகளே பெரிதளவிலான ஒன்றை அடைவதற்கு உதவியாக அமைகின்றன.

எனவே மனித வாழ்வில் சிறிய அளவிலான ஆரம்பங்கள் இன்றி அமையாதவை. இதையே இயேசு கடுகு விதையையும், புளித்த மாவையும் இறையரசிற்கு ஒப்பிட்டு கூறுகிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் இறையரசின் பணிகளில் ஈடுபடுகின்றபோது பெரிதளவிலான வெற்றியை பெறவேண்டும் எனின் நாம் சிறிதளவிலான பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

இதற்கு சிறிதளவான இலக்குகள், விருப்புகள், முயற்சிகள், செயற்பாடுகள் எமது திருச்சபைக்கு இன்றியமையாதவைகள் ஆகும். நாம் பெரிதளவில் சிந்தித்து சிறிதளவிலேனும் செயல்படாது இருப்பதைவிட, சிறிதளவில் சிந்தித்து பெரிதளவில் செயல்படுவதே திருமறை கூறும் செய்தி. ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களையும் வைத்திருந்த சிறுவன் இயேசுவின் பெரிதளவிலான ஒரு அற்புதத்திற்கு ஊடகமாக இருந்தான்.

ஆகவே எம்மிடத்தில் இருப்பவைகளை பயன்படுத்தியே இறை பணியை ஆரம்பிக்க வேண்டும். இது கிறிஸ்தவ விழுமியங்களில் ஒன்றாகும். இதையே ஏழை விதவை தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் கடவுளுக்கு கொடுத்து பெரியளவிலான எடுத்துக்காட்டாக, திருமறையில் உயர் கதாபாத்திரமாக காட்டப்படுகின்றாள். நாமும் நம்மிடத்தில் இருப்பதை இறைவனுக்கு கொடுத்து சிறிதளவேனும் இறையரசுக்காக செயல்பட முயற்சிப்போமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நாம் சிறியவற்றில் நம்பிக்கை வைத்து செயல்பட எங்களுக்கு உதவியருளும்.

திங்கள் : எங்கள் திருஅவையில் இருப்பதைக் கொண்டு திருப்தியடைய அவற்றில் இருந்து எமது பணிகளை ஆரம்பிக்க உதவியருளும்.

செவ்வாய் : ஆண்டவரே! என் வாழ்வில் முடியாது, போதாது எனும் வார்த்தைகளை எடுத்துப் போட்டு விசுவாசத்தின் ஊடாக செயல்பட என்னை ஏவியருளும்.

புதன் : எங்கள் சிறிய ஆரம்பங்கள் பெரிதான மாற்றத்தை சமூகத்தில் ஏற்படுத்த எமது செயல்பாடுகளை ஆசீர்வதித்தருளும்.

வியாழன் : நாம் எப்போதும் மற்றவர்களில் தங்கி இருப்பதைவிடுத்து எப்போதும் உம்மிலேயே தங்கி இருக்க உதவியருளும்.

வெள்ளி : எம்மிடத்தில் உள்ள சிறியவைகளை உம்மிடத்தில் தந்து அவற்றை ஆசிர்வதிக்க உதவியருளும்.

சனி : எமது குறைவுகளில் இருந்து உமக்கு தருவதை உம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டும் என மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 03

# உலகில் உருவாகும் கடவுளின் இராட்சியம்.

பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத்தேயு 13:33)

இயேசுகிறிஸ்து கடவுளின் அரசை புளித்தமாவுக்கு ஒப்பிட்டுள்ளார். எல்லா ஊர்களிலும் பல்வேறு உணவுகளை தயாரிக்கும் வெதுப்பகங்கள் இருக்கின்றன. வெதுப்பகங்களிலே புளித்தமாவைப் பயன்படுத்தி பல்வேறு வகையான உணவு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வகையான உணவு பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மாவுக்குள் சிறிதளவு புளித்தமா சேர்க்கும் போது அந்த மா முழுவதுமே புளிப்படைந்து விடுகிறது.

அவ்வாறே கடவுளின் அரசின் விழுமியங்களாகிய அன்பு, நீதி, சமாதானம், இரக்கம் இன்னும் சகமனிதர்களுக்கு நன்மை தரக் கூடிய ஏதாவது ஒரு காரியத்தை நாம் சிறிய அளவில் செய்யும் போது அது மனித இனத்தையே மாற்றிவிடக் கூடிய ஒரு பெரும் செயலாகி விடுகின்றது. கடவுளின் அரசை இவ்வுலகிலே கட்டியெழுப்புவது என்பது இதுதான். நாம் இவ்வுலகில் வாழும் போது செய்யும் செயல்களினாலே தான் மனித சமுதாயம் முன்னோக்கி பயணிக்கிறது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் செய்கின்ற சிறு சிறு தீமைகளால் இதரமக்களும், நாடும், சமூகமும் பாதிக்கப்படுவதை உணர்ந்துக் கொள்வதில்லை. இதனால் நமது வாழ்க்கையில் நற்காரியங்களை மட்டும் சிறிய அளவிலாவது செய்து கடவுளின் இராஜ்யத்தை இவ்வுலகில் அமைக்கும் மக்களாக வாழ முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளுக்குச் செல்ல ஆயத்தமாகிறார்கள், வளர்ந்தவர்கள் தமது கடமைகளைக் கவனிக்கப் புறப்படுகின்றார்கள். ஒவ்வொரு நாளும் நமது நாளை ஆரம்பிக்கின்ற போது, இன்றைய நாளில் நான் செய்யப்போகின்ற நன்மையென்ன? என்ற வினா நமக்குள்ளே உருவாகுமானால் அந்நாள் நமக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமுள்ள நாளாக அமையும். இந்தநாட்டின் இயற்கை வளங்களுக்கும் சக மனிதர்களுக்கும் ஏதாவது ஓர் சிறிய நற்செயலைச் செய்து கடவுள் விரும்பும் ஆட்சியை இவ்வுலகிற்குக் கொண்டு வர முயற்சிப்போமாக. இதுவே எமது நோக்காக அமையட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : எமது வாழ்வினால் மற்ற மக்கள் பாதிக்கப்படா -மல் இருக்க எம்மை வழிநடத்தும்.

திங்கள் : என் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நன்மை செய்கிறவராக இருக்க உதவி செய்யும்.

செவ்வாய் : நான் இவ்வுலகில் புனித்தமாவாக வாழ உதவி செய்யும்.

புதன் : கடவுளின் அரசை இவ்வுலகிலே கட்டியெழுப்ப என்னையும் பயன்படுத்தும்.

வியாழன் : நான் செய்கின்ற செயல்கள் என்னையும் மற்றவர்களையும் முன்னேற்ற பாதையிலே வழி நடத்தி செல்ல உதவி செய்யும்.

வெள்ளி : கடவுளரசின் விழுமியங்களை அன்பு, நீதி சமாதானம் என் வாழ்வின் விழுமியங்களாக மாறட்டும்.

சனி : நான் உலகில் காண விரும்புகிற மாற்றம் என் மூலமாக உலகில் உருவாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 04

# மனித வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள்

ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி..
(ஏசாயா 11:1)

ஈசாய் என்னும் பெயர் கொண்டமரம் உலகத்தில் இல்லை. ஈசாய் தாவீது அரசனின் தந்தை. ஈசாய் என்பதற்கு கடவுள் வாழ்கிறார், கடவுளின் கொடை என்ற பொருள் உண்டு. தாவீதின் ஆட்சியில் இஸ்ரவேல் மக்கள் சிறந்த வழியில் எழுச்சியும் மாட்சியும் பெற்றனர்.

ஆனாலும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்த அவரது பரம்பரை இஸ்ரவேல் இரண்டாகப் பிரிவதற்கும், கடவுளைவிட்டு விலகுவதற்கும் காரணமாயிற்று. அத்தோடு அணடை நாடுகளினால் படையெடுக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு சந்ததியே அழிந்துபோகும் நிலைக்குள் தள்ளப்பட்டது. ஒரு பெரிய மரத்தைச் சாய்த்து அதில் அடிமரம் மட்டும் இருப்பதைப் போன்ற ஒரு காட்சியை நாம் கற்பனை செய்ய முடியும்.

தாவீதின் ஆட்சி போன்ற ஆட்சி திரும்பி வராதா என்ற ஏக்கத்தில் மக்களின் அங்கலாய்ப்பு இருந்தது. இறைவாக்குநரான ஏசாயா வெட்டப்பட்ட பெரிய விருட்சமாகிய இஸ்ரவேலர்கள் மீண்டும் வளருவார்கள் என்னும் நம்பிக்கையைக் கொடுக்கின்றார். ஈசாய் என்னும் அந்த அடியில் இருந்து சிறந்த ஆட்சி வரும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறார்.

இவ்வாறே நமது மனித வாழ்விலும், எமது குடும்ப வாழ்விலும், பிள்ளைகளின் வாழ்விலும் எதிர்பார்ப்புக்கள் அற்று நாம் வெட்டப்பட்டுவிட்டோம். இனியாவும் முடிந்தது என்ற உணர்வுகளுடன் சோர்ந்து போகும் நம் அனைவருக்கும் ஏசாயா தீர்க்கன் சொல்லும் நற்செய்தி நம் வாழ்விலும் ஓர் துளிர், ஓர் வெளிச்சம் கிடைக்கும் என்பதாகும்.

இந்த நம்பிக்கையோடு நாம் புதிய காரியங்கள் இடம் பெறவேண்டுமென்று காத்திருப்போமாக. நாம் நம்பிக்கை கொள்ளும் இறைவன் இயேசு எங்களை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. அவர் எம்மோடு, எப்போதும் இருக்கின்றார். இந்தப் பற்றுறுதியோடு எமது எதிர்காலத்தைத் தொடர்வோமாக. எமது வாழ்வில் கடவுள் ஒரு துளிரை முளைக்கப்பண்ணுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : வாழ்வில் பாதிப்புகளை சந்திக்கும் போது நம்பிக்கையை இழந்து போகாமல் இருக்க உதவி செய்யும்.

திங்கள் : நஷ்டப்பட்டு விட்டோம் என நினைக்கிறவர்கள் வாழ்க்கையை நம்பிக்கையோடு பார்க்க பெலன் தாரும்.

செவ்வாய் : ஆண்டவரே! நீர் எப்போதும் எம் வாழ்க்கையில் கூட இருக்கின்றீர். உமது வழிநடத்தல் எம்மை பெலப்படுத்தும்.

புதன : எம்மால் தாங்குவதற்கு மேலாக சோதனைக-ளை சந்திக்காமல் எம்மை காப்பாற்றும்

வியாழன் : இஸ்ரவேல் மக்களின் ஆண்டவரே! உம்மால் அழைக்கப்பட்ட சந்ததியாகிய எமக்கும் உமது பாதுகாப்பை வேண்டி ஜெபிக்கின்றோம்.

வெள்ளி : கர்த்தரை! நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்று சொன்ன ஆண்டவரே உம்மில் நாம் நம்பிக்கையாக இருக்கின்றோம்.

சனி : உலகெங்கும் சமாதானமும் மனிதர் மேல் பிரியமும் என தேவதூதர்கள் சொன்ன செய்தி நம் நாட்டையும் நிறைக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 05

# எமக்கு உகந்தவை

கடவுள் தரும் கட்டுப்பாடு நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்.
(ஆதியாகமம் 2:16.)

முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் எல்லாப் படைப்புக்களினதும் மகுடமாகப் படைக்கப்பட்டனர். அவர்கள் கடவுளின் எல்லாப் படைப்புகளையும் ஆண்டு கொள்ளும் அளவிற்கு அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் கடவுள் அவர் கொடுத்த சுதந்திரத்துக்குள்ளும் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருந்தார்.

நமது நாட்டிலும் வீட்டிலும் எமக்குச் சுதந்திரம் உண்டு. ஆனாலும் அவற்றுக்குள் கட்டுப்பாடு இருப்பதனை அறிகின்றோம். இவ்வாறே கடவுளும் முதல் மனிதர்களாகிய ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருந்தார். கடவுள் ஏதேன் தோட்டத்திலுள்ள எல்லாக் கனிகளையும் உண்ண முடியும் எனவும், ஆனால் ஒரு மரத்தின் கனியை மாத்திரம் உண்ணக் கூடாது எனவும் கட்டளையிட்டார்.

ஆனால் ஆதாமும் ஏவாளும், எங்களைப் போலவே எதையெல்லாம் செய்யக் கூடாதோ, அதனையே செய்து எமக்கும் எங்கள் குடும்பத்துக்கும், நாம் வாழும் உலகத்துக்கும், தீமையைக் கொண்டு வருவது போல, தமக்கும், மனித படைப்புக்கும் பாவம் எனும் சட்ட மீறுதலின் பாவத்தைக் கொண்டுவந்தனர்.

பாவம் என்பது எமது சுதந்திரத்தை மீறுவதும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையினால் இலக்குகளிலிருந்து விலகுவது மாகும். இவற்றை நாம் இனங்கண்டு அவற்றிலிருந்து விலகி வாழ்வதே எமக்கும் எமது மனித இனத்திற்கும் விடிவைக் கொண்டு வரும்.

ஏவாள் கனியைத் தந்தாள். நான் சாப்பிட்டேன் என ஆதாம் சொன்ன காரணத்தைப் போல ஏவாள், சர்ப்பம் வந்து இக் கனியை உண்டு பார்க்கச் சொன்னது என்று காரணம் சொல்வது போன்று நாம் செய்யும் தவறுகளுக்கு இன்னும் ஒருவர்தான் காரணம் என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. நண்பர்களுக்கும், சகோதரர்களுக்கும், எமது சமூகத்திற்கும் எதிரான பாவங்களைச் செய்து விட்டு இது நான் செய்த பாவமல்ல. அவர் செய்த பாவமென சாட்டுப் போக்குச் சொல்லமுடியாது. நாம் கடவுளின் வெறுப்பையும் தண்டனைகளையும் சம்பாதிக்காமல் நல்ல மனிதர்களாக பாவமற்ற புனிதமுள்ள மனிதர்களாக வாழ எங்களைத் தயார்படுத்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! எம் வாழ்வின் தீர்மானங்களை உமது சமூகத்தில் வைக்க உணர்த்தியருளும்.

திங்கள் : இறைவா! எப்போதும் உமது கட்டளைகளை மீறாது செயல்பட உதவியருளும்.

செவ்வாய் : ஆண்டவா! உமது சித்தமே எம் வாழ்வின் முதலிடத்தை பெற கிருபை செய்தருளும்.

புதன் : எம் வாழ்வின் விலக்கப்பட வேண்டிய காரியங்களை விலக்கி வாழ கற்றுத்தாரும்.

வியாழன் : உம் கிருபை எம்மை வழி நடத்தி உமக்குள் வாழ வழி செய்யும்.

வெள்ளி : எம் வாழ்வின் சாக்கு போக்குகளை தவிர்த்து நேர்மையோடு செயற்பட பெலன் தாரும்.

சனி : ஆண்டவா! தவறுகளிலே எம்மை காத்து உமது மன்னிப்பை ஈந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 06

# ஜெபிக்க (மன்றாட) முடியவில்லையா?

நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோமர் 8:15)

ரவியிடம் ஜெபம் பண்ணும்படி அவனின் அம்மா சொன்னார்கள். எனக்கு ஜெபிக்க தெரியாது என்றான் எனது நண்பன் ரவி. ஆனால் ரவி தன் அப்பாவிடமும், அம்மாவிடமும் நன்றாக கதைப்பான், அக்காவிடம் அதிகமாக கதைப்பான். நண்பர்களிடம் கதைக்க ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டான். ஆனால் அது போல கடவுளிடம் கதைப்பது தான் ஜெபம் என்பது ரவிக்கு தெரியவில்லை.

ஏன் ரவிக்கு ஜெபிக்க முடியவில்லை தெரியுமா? ரவிக்கு அப்பா, அம்மா, அக்கா நண்பர்கள் எல்லோரும் நன்றாக தெரிந்த உறவுகள். எனவே அவனால் எந்த பயமுமின்றி, வெட்கமுமின்றி தைரியத்துடன் கதைக்க முடிகின்றது. அதே போல ரவி இயேசுவை தனது சொந்த இரட்சகராக தனது இதயத்திலே ஏற்றுக்கொண்டால் இயேசுவும் ரவிக்கு நெருங்கின உறவினராக மாறிவிடுவார் அல்லவா?

அப்போது எப்படி ரவி தனது அப்பா, அம்மா, அக்கா, நண்பர்கள் ஆகியோரிடம் தடையின்றி பயப்படாமல் கதைக்க முடியும். இப்படியாக நமது நெருங்கிய உறவுகளிடம் கதைப்பதை போல கடவுளிடம் கதைப்பது தான் ஜெபமாகும். இது போல நீங்களும் கடவுளிடம் கதைக்கின்றீர்களா? அதாவது ஜெபிக்கின்றீர்களா? நீங்கள் உண்மையிலேயே இயேசுவை உங்கள் இதயத்தில் ஏற்றுக்கொண்டிருந்தால் நிச்சயம் உங்களால் கடவுளிடம் நன்றாக ஜெபிக்க முடியும். காரணம் கடவுள் எமது நெருங்கிய உறவினராவார். மோசே ஒரு நண்பனிடம் கதைப்பதை போல கடவுளிடமும் கதைத்தார் என இறைவார்த்தை எமக்கு கூறுகின்றது.

கடவுளோடு எமக்கு ஒரு நெருங்கிய உறவு வேண்டும். அப்போது தான் எம்மால் அவரிடம் அதிகமாக கதைக்க (பேச) முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! உமது பிள்ளைகளாக எங்களை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தி உமக்கு ஏற்றவர்களாக வாழ உதவியருளும்.

திங்கள் : எம் வாழ்வில் ஜெப வாஞ்சை அற்றுப்போகும் வேளையில் ஜெபத்தின் ஆவியை தந்தருளும்.

செவ்வாய் : எம் வாழ்வில் நீதியுடையவர்களாக நடந்து மற்றவர்களும் உம்முடைய நீதிக்குள் வர எம்மை உபயோகப்படுத்தியருளும்.

புதன் : ஆண்டவரே! எமக்கு நன்மை செய்பவர்க்கே நாமும் நன்மை செய்யாமல் எமக்குதீமை செய்பவருக்கும் நன்மை செய்ய கற்றுத்தாரும்.

வியாழன் : ஆண்டவரே தாய் தமது பிள்ளையை நேசிப்பது போல எம்மை நேசித்து நாம் உம்மோடு நெருங்கி வாழ எம்மை உபயோகித்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே நாம் அடிமைத்தனத்தின் ஆவிக்குள்ளாகாமல் விடுதலைப் பெற்ற உமது பிள்ளைகளாக எம்மை மாற்றியருளும்.

சனி : ஆண்டவரே இவ்வுலக கவர்ச்சிகளுக்குள் நாம் சிக்கிவிடாது உமது ஆவியின் வழி நடத்துதலுக்குள் எம்மை வழிநடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 07

# தேவையானவைகள் எவை?

எங்களை சோதனைக்குட்படபண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சியும் (லூக்கா 11:4)

நாம் உண்மையிலேயே நன்றாக ஜெபிக்க தெரிந்தவர்கள். ஜெபம் என்றாலே எமக்கு அதிக விருப்பமாக இருக்கும். ஆனால் எமது ஜெபங்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கின்றது என்பதை நாம் சிந்திக்க மறந்து விடுகிறோம்.

நாம் ஜெபம் செய்கின்றோம். அது ஒரு சிறந்த விடயமாகும். ஜெபத்தில் நாம் கடவுளிடம் பல நன்மைகளை கேட்கின்றோம். அது முற்றாக பொருள்களை கடையில் வாங்க தயாரிக்கப்பட்ட பட்டியலை போல இருக்கின்றது.

எமது அன்றாட ஜெபங்களில் நாம் கடவுளிடம் கேட்பவைகள் எவை? நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். இறைவனிடம் உம்முடைய உறவை தினமும் எனக்கு தந்தருளும் எனவும் உம்மை நான் எனக்குள் கண்டிட உதவியருளும் என்றும் எனக்கு நல்ல குணங்களையும், சுபாவங்களையும் தாரும். என வேண்டுதல் செய்து, நாம் கடவுளின் வழியில் தினமும் நடக்க முயற்சித்து எமது பாவங்களை தவிர்த்துக் கொண்டு பிறர் மீது அன்பும் தயவும் வைக்க எம் இறைவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். இறைவனின் விருப்பப்படி நடக்க நல் இதயங்களை இறைவனிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இவையே நாம் பிறருக்கு ஒரு முன்மாதிரியான வாழ்வை வாழ உதவிசெய்யும். இது நம் ஒவ்வொருவருக்குமே ஒரு அமைதியின் கருவியாக உலகில் வாழ வழி செய்யும். இவ்விதமான வாழ்வும் ஜெபமுமே எம்மிடம் உள்ளதை நாம் பிறருடன் பகிர்ந்துக் கொள்ளுவதற்கு சமமாக அமையும். இவை எம் வாழ்வில் உள்ளபோதே போதும் எனும் மனநிறைவு உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : கடவுளே உம்முடைய உறவை தினமும் எனக்கு தந்தருளும்

திங்கள் : இறைவா! உம்மை நான் எனக்குள் கண்டிட உதவியருளும்

செவ்வாய் : இயேசுவே! எமக்குள் நல்ல குணங்களையும், சுபாவங்களையும் தாரும்

புதன் : தேவனே! நாம் உம்முடைய வழிகளில் தினமும் நடக்க உதவி செய்யும்

வியாழன் : பரிசுத்தரே, எம்மை பாவங்கள் செய்யாமல் பாதுகாத்துக் கொள்ளும்

வெள்ளி : தேவரீர் நாம் பிறரிடம் அன்புக் கொள்ளவும், அவர்களை ஏற்றுக்கொள்ளவும் உதவிசெய்யும்.

சனி : உம் விருப்பப்படி நடக்க நல்ல இதயத்தை தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 08

# விதைத்தலும் அறுத்தலும்

நீர் விதைக்காத இடத்தில் அறுப்பவரும்...
(மத்தேயு 25:24)

மூன்று பணியாளர்கள் பற்றிய உவமையில் ஒரு தாலந்து வாங்கியவன் தனது தாலந்தினை முதலிடாததற்கு காரணம் கூறும்போது எஜமானனைப்பார்த்து தனது செயலுக்கு காரணம் எஜமானனே எனக் குற்றம் சாட்டும் வார்த்தைகள்.

விதைக்காத இடத்தில் அறுப்பவர் என எஜமானனைப் பார்த்துக் குற்றம் சாட்டும் போது "நீர் உதவி செய்யாத இடங்களில் இருந்து பலனை எதிர் பார்க்கும் பண்புடையவர்" என்று மறைமுகமாக சுட்டிக்காட்டுகின்றான். பொதுவாக நாம் நமக்குத்தேவைகள் ஏற்படும் போது நாம் யாருக்கு உதவி செய்திருக்கிறோமோ அவர்களிடம்தான் போய் உதவி கேட்போம். உதவி செய்யாதவர்களிடம் அல்லது எதிரிகளிடம் உதவி கேட்பதில்லை. அப்படிக் கேட்பது நாம் விதைக்காத இடத்தில் அல்லது மற்றவர்கள் விதைத்த இடத்தில் அறுப்பது போன்றது. இது ஒரு ஈனத்தனமான செயலாகும். நமது எதிரிகளுக்கும் உதவி செய்கின்ற பண்பினை வளர்த்துக் கொண்டால் இது போன்ற சம்பவங்களை நிச்சயம் தடுத்து நமது தேவைகளில் நமது எதிரிகளுக்கு முன் துணிந்து நிற்க முடியும்.

ஜெபித்தல் என்பதும் ஒரு விதைக்கின்ற அனுபவம். நாம் யாருக்காக ஜெபிக்கின்றோம் அல்லது ஜெப விதைகளைத் தூவுகிறோம். (மத் 5-24) எப்போதாவது நமது எதிரிகளுக்காக ஜெபித்திருக்கிறோமா? ஆனால் உதவிகள் தேவைப்பட்டால் மட்டும் அவர்களுக்கு முன் போய் தயக்கமின்றி நிற்கின்றோமே!

இந்நாட்டில் வாழும் இந்துக்களை, முஸ்லிம்களை எமக்கு வேண்டாதவர்களாக, சிலவேளை எதிரிகளாகக் கூடக் கருதுகிறோம். ஆனால் அரிசி வாங்க மரக்கறி வாங்க இறைச்சி வாங்க மட்டும் அவர்களுக்கு முன் போய் நிற்கிறோமே, என்ன நீதி? நமது ஜெபப் பட்டியலை எடுத்துப்பார்த்தால் இவர்கள் நிச்சயமாக இருக்க மாட்டார்கள். காரணம் இவர்கள் நமக்கு வேண்டப்படாதவர்கள்!

அவர்களுக்காகவும் ஜெபம் செய்வது இயேசுவின் போதனைப்படி நடப்பதாகும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவா! திருமறையில் உள்ள உமது மகத்துவங்களை அறிந்துக் கொள்ள உதவி செய்தருளும்.

திங்கள் : தேவனே! குற்றம் சாற்றும் மனநிலையில் இருந்து எங்களை மாற்றியருளும்.

செவ்வாய் : இறைவா! எமக்கு உதவி செய்யாதவர்களுக்கு அவர்கள் தேவையை அறிந்து உதவிசெய்யும் மனப்பான்மையை தந்தருளும்.

புதன் : இயேசுவே! உம்மை எதிர்த்தவர்களில் அன்பு கொண்டது போல நாமும் அன்புள்ளவர்களாய் வாழ உதவி செய்தருளும்.

வியாழன் : இறைவா! ஜெபத்தினூடாக நாம் மற்றவர்களின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த ஜெப ஆவியை தந்தருளும்.

வெள்ளி : நம் நாட்டில் வாழும் ஏனைய மதத்தினரோடு ஒற்றுமையாக வாழும் மனப்பக்குவத்தை தாரும்.

சனி : இறைவா! என் ஜெபங்களில் அனைவருக்காகவும் உருக்கமாக ஜெபிக்கிற ஒரு மனப்பக்குவத்தை தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 09

# இறைவனைப் பிரதிபலித்தல்

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி 1:26-27)

கடவுளின் சாயலை பிரதிபலிப்பது என்பது நமது வாழ்வின் இலக்கு. ஆதியாகமத்தில் கடவுள் எல்லாவற்றையும் படைத்து மனிதனை படைக்கும் போது தமது சாயலாக என்று திருமறையில் எழுதப்பட்டுள்ளது. மனிதர்களாகிய நம்மிடம் நமது பெற்றோரின் சாயல் எம்மில் காணப்படுவது போல இறைவனின் சாயலும் இறைமக்களாகிய எம்மில் பிரதிபலிக்க வேண்டும். இறைவன் தாம் உண்டாக்கிய எல்லாவற்றையும் பார்த்து அவையாவும் நன்றாக இருந்தது என்று வேதம் கூறுகின்றது. (சங்கீ 8:5) கூறுகிறபடி நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர் எல்லாவற்றிலும் பிரதான மனிதர்களாகிய நாங்கள் இறைவனை பிரதிபலிப்பது மட்டுமல்ல அவருக்கு மகிமையை கொண்டு வரவும் அத்தோடு அவரை கனம் பண்ணி நடப்பதும் எமது கடமையாகும்.

நாம் மட்பாண்டங்கள். நம்மிலே அவருடைய சுவிசேஷ மாகிய பொக்கிஷம் உள்ளே வைக்கப்பட்டிருக்கிறது என்று தூய பவுல் சொல்கிறார்.

இன்றைய நாகரீக உலகிலே பல இழப்புக்களோடும் இன்னும் நிறைவேறாத அங்கலாய்ப்புக்களோடும் வாழும் காலத்தில் இறைவனை பிரதிபலிப்பது என்பது மிகவும் அரிதாகவே மக்களிடையே காணப்படுகிறது. திருச்சபைகள் இறைவனை பிரதிபலிப்பதிலே பல துறைகளிலும் இறங்கி சமுதாயத்திலே காணப்படும். அநேக தேவைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் திருப்பணியாற்ற அழைக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர்கள் ஆதி திருச்சபையின் பணியில் பரிசுத்த ஆவியும் ஞானமும் பெற்றவர்களாக செயலாற்றினார். அவர்களுடைய வாழ்வும் வழிபாடும் வேறு வேறு அல்ல.
அவர்கள் தமது வாழ்வு முறையினால் மக்கள் மத்தியில் இறைவனைப் பிரதிபலித்தார்கள்.

நாம் எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபையில் அங்கத்தவர்களாக இருக்கும் போது கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே நம்மிலும் காணப்பட வேண்டும். ஆகையால் இறைவனின் நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவரும்படியாக அழைக்கப்பட்ட நாம் அவருக்கு அவதூறான காரியங்களை செய்யாமல், சுயாதீனம் உள்ளவர்களாய் நாம் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கிறவர்களாக இறைவனைப் பிரதிபலிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : அன்பான தகப்பனே உம்முடைய சாயலில் என்னைப் படைத்தபடியினால் உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

திங்கள் : என் ஜீவியம் உம்மை பிரதிபலிக்க உதவி செய்தருளும்.

செவ்வாய் : எங்கே இருள் உண்டோ அங்கே ஒளிவீச எங்களுக்கு அருள் தாரும்.

புதன் : தனிமையில் அன்பற்று வாடுவோர் மத்தியில் உண்மையான அன்பைக் காட்டி உம்மை பிரதிபலிக்க உதவி செய்தருளும்.

வியாழன் : எமது நேசம் உயிரடைய உம் சாயல் முழுமையடைய அருள் தாரும்.

வெள்ளி : எங்கெங்கே பகைமையும் கசப்பும், வெறுப்பும், வன்முறையும் காணப்படுகிறதோ அங்கே உமது கருவியாக உமது சாயலை பிரதிபலிக்க உதவி செய்தருளும்.

சனி : இறைவா! நாங்கள் மற்றவர்களை மதித்து என்னிலும் அவர்கள் மேன்மையுள்ளவர்கள் என்று ஏற்றுக் கொள்ளும் மனோபாவத்தை தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 10

# துன்பமும் கவலையும்!

"அவன் துக்கம் மகாகொடிய துக்கம் என்று கண்டு ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையும் பேசாமல் இராப்பகல் ஏழு நாள் அவனோடு கூட தரையிலே உட்கார்ந்திருந்தார்கள். (யோபு 2:13)

துன்பம் என்பது பாவத்தையே எப்போதும் குறிக்கும் என்று யோபுவின் நண்பர்கள் நம்பினார்கள். கவலையும் துன்பமும் கிறிஸ்தவ வாழ்வின் முன்னோடிப் பயணம். எமது வாழ்க்கையிலே பல விதமான அனுபவங்களைக் கடந்து முன் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாம் இத் தியானத்தினூடாக யோபு பக்தனுடைய சரித்திரத்தை சற்று நின்று திரும்பி தியானித்துப் பார்க்கும் போது சகல சம்பூரணத்துடனும் வாழ்ந்து கொண்டிருந்த யோபு பக்தனின் வாழ்வில் ஏற்பட்ட துன்பமும் கவலையும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே நாம் துன்பத்தைக் காண்கின்றபோது ஆறுதலைக் கூற முற்படுகின்றோம். அல்லது அதை விரிவுபடுத்த விரும்புகின்றோம்.

யோபு பக்தனுக்கும் மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் யோபுவின் துன்பத்தைக் கேள்வியுற்றபோது அவனுக்காக பரிதவிக்கவும் அவனுக்கு ஆறுதல் கூறவும் வந்தனர். துன்பம் யோபுவின் வாழ்வில் இருக்கும் பாவத்தையே எப்போதும் குறிக்கும் என்று யோபுவின் நண்பர்கள் நம்பினார்கள். அவர்கள் மிகவும் முக்கியமான சில பாவங்களை எடுத்துக் கூறி அவற்றை ஒத்துக் கொள்ளச் செய்ய அவனைத் தூண்டுகின்றார்கள். ஆனால் தேவன் யோபுவின் நண்பர்களின் தவறுதல்களையே காண்பிப்பதையே நாங்கள் காண்கின்றோம். (யோபு 42:7)

நாம் கவலையிலும், துன்பத்திலும் மூழ்கிப் போகாமல் எம்மை மீட்டுக் கொள்ளவே எமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எம்மைத் தேடி வந்துள்ளார்.

நாம் எப்போதும் நடந்தவற்றையே எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால். நாம் செய்ய வேண்டிய பெரிய காரியங்களை விட்டுவிடுவோம். தேவன் எமக்குத் தந்த பொறுப்பை உணர்ந்தவர்களாக இறை மகிமைக்காக மேற் கொள்ள எமது வாழ்வை அர்ப்பணிக்கவேண்டும்.

துன்பமும், கவலையும் கிறிஸ்தவ வாழ்க்கையில் சொந்தமானதொன்றல்ல என்பதையும் இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையின் நடைமுறை அனுபவம் என்பதை யோபு பக்தனின் சரித்திரம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவா! எங்களுடைய வாழ்வின் துன்பத்தின் வழியாகவும் உம்முடைய அன்பை அறிந்துக் கொள்ள உதவி செய்தருளும்.

திங்கள் : ஆண்டவரே! வாழ்க்கையில் போராட்டங்கள் வருகிறபோது சோர்ந்து போகாமல் அவற்றை மேற்கொள்ள உதவிசெய்தருளும்.

செவ்வாய் : இறைவா! நீரும் துன்பத்திற்கூடாக கடந்துச் சென்றபடியினால் துன்பப்படுகிறவர்களுக்கு உதவி செய்தருளும்.

புதன் : இரவிற்கு பிறகு, பகல் வருவது போல கவலை, துன்பத்திற்கு பிறகு ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும் தந்தருளும்.

வியாழன் : இறைவா! வாழ்க்கையிலே போராட்டங்கள், துன்பங்களுக்கு முகம் கொடுக்கிற பொழுது முறுமுறுக்காமல் பொறுமையாக சகித்துக் கொள்ள உம்முடைய பெலத்தை தாரும்.

வெள்ளி : ஆண்டவரே! வாழ்க்கையில் துன்பத்திற்கூடாக கடந்து செல்லுகிற போது அவற்றில் நீர் கொடுக்கிற மேலான அனுபவத்தை உணரச் செய்யும்.

சனி : ஆண்டவரே! உம்முடைய பிள்ளைகளுக்கு எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதவாக மாற்றியமைக்க உதவி செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 11

# பாவத்திற்கு எதிரான போர்

பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே (எபி 12:4)

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்பது நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் உண்மை. அதில் நல்ல காரியமும் இடம்பெறலாம். தீயகாரியமும் இடம் பெறலாம். ஆனால் ஒவ்வொரு காரியமும் எமதுவாழ்வு வளம் பெறுவதற்கு ஒரு படிப்பினையைக் கூறுகிறது. எமது நாட்டில் முப்பதாண்டு யுத்தம் முடிவுற்றாலும் ஆயுதங்கள் மௌனமாகிபோன ஆதங்கங்கள் மக்களிடம் இருந்து கொண்டே வருகிறது. போரும் அதன் விளைவுகளும் மனிதவாழ்வை தாக்கினாலும் இனப்பிரச்சினை, இடப்பெயர்வு, இயற்கை, அனர்த்தங்கள், இழப்புக்கள், மக்களை இன்னலுக்குள் ஆக்கிய வேளைகளில் அவர்களின் வாழ்வு தொடர்ந்து கட்டியெழுப்புவதையும் வாழ்வின் பல வசந்தங்களையும் சாதனைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இன்னொருபுறம் அன்றாட வாழ்வில் நன்மைக்கும், தீமைக்கும் நேர்விரோதமாய் போர் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றனர். போராட்டத்தின் ஆவி எங்கெல்லாம் செல்கின்றதோ அங்கெல்லாம் அழிவை கொண்டுவரும். எனினும் அது இருக்கும் நிலையை அதன் அறிகுறிகளைக் கொண்டே நாம் உறுதியாக அறிந்து உணர்ந்திட முடியும். போர் என்பது கலகமிடுகிற, வாக்குவாதம் செய்கிற, வன்மையாய் மறுத்து நிற்கிற ஒருவகை அனல் பறக்கும் மனநிலையாகும்.

எம்மில் பலர் போராட்டத்தின் காரணமாக அழிவின் விளிம்பில் வாழ்ந்து வருகிறோம். அந்த அழிவின் காரணம் பாவமே ஆகும். பிசாசின் கிரியைகள், அது வருவதற்கான நிலைமையை நாம் அகல திறந்து வைத்திருக்கிறோம், என்பதை அறிவதில்லை. வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு யாத்3-16 திருவார்த்தை கூறுகின்றது. எனவே பிசாசின் கிரியைகள் எந்தெந்த வழிகளுக்கூடாக நம்மை ஆட்கொள்ளும் என்பதை நாம் இனம் கண்டு எமக்குள் இருந்து அழிக்க வேண்டியவைகளை அழிப்போம் ஆண்டவருடன் உள்ள உறவை ஜெபத்தின் மூலம் பெலப்படுத்தி வளர்த்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நான் உமது திருவுளத்தை அறிந்து செயல்பட உதவி செய்தருளும்.

திங்கள் : பிதாவே! நான் எப்பொழுதும் உம்முடைய பிள்ளை என்பதை உணர கிருபை செய்யும்

செவ்வாய் : இறைவா நீர் எங்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிற உம்முடைய வார்த்தையாகிய வேதாகமத்திற்காக நன்றி செலுத்துகிறோம்.

புதன் : ஆண்டவரே! நாங்கள் உம்முடைய வார்த்தையின படி நடக்க உதவி செய்தருளும்.

வியாழன் : இறைவா! உம்முடைய வார்த்தையை அறிவிக்கின்ற பணியிலே முன்னோக்கி நடக்க உதவி செய்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே உம்முடைய வார்த்தையிலே இருக்கின்ற சந்தோஷத்தையும், சுகத்தையும் அனுபவிக்க உதவி செய்தருளும்.

சனி : இறைவா! நாங்கள் உமது நாமத்தை மகிமைப்படுத்தி வாழ்கின்ற வாழ்வைத் தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 12

# சபையின் பிள்ளைகள்

நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கின்றீர்கள், மலையின் மேல் இருக்கின்ற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. (மத் 5:14)

பலஸ்தீனத்தில் மலை பிரதேசத்தில் கிராமங்கள் காணப்பட்டது. அது தூரத்திற்கு மிகவும் அழகாக காணப்படும். வழி தெரியாதவர்கள் கூட இலகுவாக செல்லக்கூடும். அந்த பட்டணங்கள் மலையுச்சியில் இருக்கின்றபடியினால் இயேசு அதை உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். இயேசு நாம் அதுபோல ஆகவேண்டும் ஆக கூடாது என்று சொல்லவில்லை. இயேசு சொல்கிறார் நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கின்றீர்கள். மலையின் மேலே இருக்கிற பட்டணம் போல. இயேசு இருக்கின்ற இடத்தில் வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. ஆகவே உலகம் அவரை காணும்படியாக வெளிச்சம் பிரகாசிக்கின்றது. மெதடித்த திருச்சபையின் பிள்ளைகளாக இயேசுவை நம்புகிறோம். விசுவாசிக்கின்றோம். இயேசு நம்முடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் தன்னை தியாகம் செய்து, எங்களை மீட்டுக் கொண்டார். இதே போல இயேசு திரும்பவும் உயிரோடு எழுந்தார்.

அந்த இயேசுவை நாங்கள் உண்மையாக பின்பற்றுவதினால் அந்த வெளிச்சம் எங்களுக்குள்ளேயும் பிரகாசிக்கிறது. நாம் மற்றவர்களுக்கு வெளிச்சமாக இருக்கின்றோம் என்றால் இயேசுவை பின் பற்றுகிற எங்களுடைய வாழ்க்கையில் எங்களைப் போல பிறரையும் நேசிக்க வேண்டும். எங்களுக்கு குற்றம் செய்தவர்களை நாம் மன்னிக்கிறது போல இயேசுவே எங்களுடைய குற்றங்களை மன்னியும் என்று கேட்க வேண்டும். இப்படியாக நாம் செயல்படுவோமானால் உண்மையாக எங்களுடைய வாழ்க்கைக்கூடாக மற்றவர்களுக்கு இயேசுவை காண்பிக்க கூடியதாக இருக்கும். நாங்கள் மலையின் மேலிருந்து பிரகாசமாயிருக்கின்ற பட்டணம் போல் பிரகாசமாயிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! உம்முடைய அன்பிலே நிலைத்து இருக்க உதவி செய்யும்.

திங்கள் : ஆண்டவரே! எங்களை துன்பப்படுத்துகிறவர்களையும் ஆசீர்வதியும்.

செவ்வாய் : பிதாவே! நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க நீர் உதவிசெய்யும்.

புதன் : இறைவா! தேவையில் உள்ளோரை அடையாளம் கண்டுக் கொள்ள உதவி செய்யும்.

வியாழன் : ஆண்டவரே! நான் உலகத்திற்கு வெளிச்சமாக உப்பாக திகழ பெலன் தாரும்.

வெள்ளி : தேவனே! என்னுடைய பாவத்தைக் குறித்து எனக்கு உணர்த்தியருளும்.

சனி : இறைவா! என்னுடைய வாழ்க்கை மூலமாக மற்றவர்கள் உம்மை கண்டு கொள்ளுவற்கு முன் மாதிரியாக வாழ கற்றுத்தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 13

# நேரான சிந்தனை

...நீ உயிரோடு இருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். (ஆதி 3:17)

பல நிறுவனங்கள் தமது பணியாளர்களின் திறமைகளை வளர்ப்பதற்காக நேரான சிந்தனையை பணியாளர்களிடையே உருவாக்கமுயற்சி செய்கின்றன. மனித வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் கடந்துபோகும் அனுபவங்கள் எப்போதும் நேரான சிந்தனையை உருவாக்குவதில்லை. மனவிரக்தி, மனநோய், தற்கொலை போன்றவை எல்லாம் நேரான சிந்தனை இல்லாத போது உருவாகின்ற வெளிப்பாடுகளே. எனவே தான் மனிதர் ஒருவர் தனது முழுமையான பங்களிப்பை தன்னை சுற்றியுள்ளோருக்கு கொடுக்க நேரான சிந்தனை மனித வாழ்க்கையில் முக்கியமானதொன்றாக கருதப்படுகிறது. கிறிஸ்தவ சிந்தனையில் நேரான சிந்தனையிலும் பார்க்க மனிதத்துவம் முக்கியமாக கருதப்படுகிறது.

கடவுள் சர்வவல்லமையுள்ள, மன உருக்கமுள்ள ஒருவர். இவ்வுலக முழுவதும் ஆண்டவரின் வார்த்தைகளினால் உருவாக்கப்பட்டது. உலகம் கடவுளின் சிந்தனையில் இருந்தும், திட்டங்களிலிருந்தும் மாறுப்படப் போகிறது என்ற அறிவு கடவுளுக்கு இருந்தபோதிலும், தாம் உருவாக்கிய உலகத்தை நல்லதென்று கண்டார். (ஆதி1:4,10,12,18,21). கடவுளின் இந்நிலைப்பாடு நேரான சிந்தனையை காட்டுகிறதல்லவா! மனிதன் பாவத்தில் நிறைந்து கடவுளுக்கு எதிர்த்து நின்ற போதிலும், கடவுள் கிருபை நிறைந்தவராய் தனது ஆரம்ப திட்டத்தில் உறுதியாக இருப்பது கடவுளின் நேரான சிந்தனையைக் காட்டுகிறது.

மனித வாழ்க்கை நல்லமுறையில் முன்னேறும் என்பது இயேசு மனிதரில் வைத்திருந்த நேரான சிந்தனையைக் காட்டுகிறது. நமது பற்றுறுதி மூலம் இயேசுவின் அழைப்புக்கு மறுமொழி கொடுக்கும் போது இந்நிலை சாதகமாகின்றது. நமது பாவக்கடலில் இருந்து விடுதலை இல்லை என்ற நிலையில் இருந்து வெளியேற வேண்டுமாயின் எமதுவாழ்வை இறைவனுக்கு அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். இறைவன் நம்மை இருநூறு ஆண்டுகளாக வழிநடத்தி வந்திருக்கின்றார். இறைவனின் நேரான சிந்தனைக்கு முழுமனதோடு நம்மை ஒப்படைக்க நமக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : நம் வாழ்க்கையில் சவால்களை சந்திக்கும் போது நேரான சிந்தையுள்ள ஒருவராக வாழ உதவி செய்யும்.

திங்கள் : நேரான சிந்தனை எம்மை முன்னேற்ற பாதையில் வழிநடத்தி செல்லுமென்பதை புரிந்துக் கொள்ள அருள் தாரும் ஆண்டவரே.

செவ்வாய் : மனவிரக்தி, மனநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு இருக்கிறவர்களுக்கு விடுதலை கொடுத்தருளும்.

புதன் : மனிதத்துவத்தை இழந்து உலக ஆசைகளால் அடிமைப்பட்டிருக்கும் மனிதர்களை கண்ணோக்கிப் பாரும்.

வியாழன் : மனித நேயம் அற்ற செயல்கள் எம்மை சுற்றி நடைபெறும் போது நீதிக்காக வாழ பெலன் தாரும்.

வெள்ளி : ஆண்டவரே நேரான சிந்தையுள்ள மனுகுலத்தை உருவாக்கும் பணியில் என்னையும் இணைத்துக் கொள்ளும்.

சனி : என்னுடைய வாழ்வு உமக்கு என அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வாக இருக்க வழி நடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம்
14

# எனது சுற்றாடல்

அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாயிருந்தது.(ஆதி 1:31)

ஒரு மனிதன் நீண்ட தூரம் பயணம் செய்த களைப்போடு பாதை அருகிலிருந்த ஆலமர நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். அவரது பார்வை விசாலமான அந்த ஆலமரத்தின் சிறிய சிறிய கனிகளைக் கண்டன. அத்தோடு அருகில் படர்ந்திருந்த ஒரு பூசணி கொடி ஒன்றையும் கண்டார். அதன் பெரிய பெரிய காய்களையும் கண்டு இவ்வளவு பெரியமரம் சிறிய காய்களை தாங்கி கொண்டிருக்கிறது. ஆனால் இச் சிறிய கொடியானது சுமக்க முடியாத பாரத்தை சுமப்பதை பார்த்து என்ன படைப்பு இது? என்று படைப்பாளியான கடவுளில் குறை காணத் தொடங்கினார்.

அந்த வேளையில் காற்றின் அசைவினால் ஆலம் பழங்கள் அவருடைய உடலில் விழுந்தன. அவை பூசணி காய்களை போல இருந்திருந்தால் நான் பெரிய ஆபத்தை சந்தித்திருப்பேன் என்று ஒரு இமைப் பொழுதில் அவர் உணர்ந்தார். இல்லை இல்லை படைப்பில் கடவுள் சர்வவல்லவர். எனது கணிப்பு பிழையானதும் தூர நோக்கு அற்றதும் என்ற தெளிவை அடைந்தார்.

கண்ணுக்குத் தெரியாத நுண் அங்கிகளிலிருந்து பெரிய திமிங்கிலங்களும், தொட முடியாத ஒளியிலிருந்து விசாலமான கற் பர்வதங்கள் அனைத்தும் நாம் வாழும் சூழல். ஆண்டவர் உலகை படைத்து 6 ம் நாள் அதன் அழகை ரசித்தார். ஆனாலும் அந்த நபரைப் போல நாமும் ஒரு பார்வையில் நியாயம் தீர்க்க முற்படுகின்றோம். மலை, குன்று, தரை, சமவெளி, ஆறு, கடல் இவைகள் மாத்திரமா? வானமண்டலம் அடங்க, சர்வ உலகமும் ஒழுங்கான முறையில் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையதாக கர்த்தரால் படைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த அறிவுள்ள மனிதன் அதன் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள திராணியற்றவனாக விளங்குகின்றான்.

அபிவிருத்தி என்ற போர்வையில் அழகான இயற்கையின் தோற்றத்தை அழித்துப்போடுகிற யுகத்தில் கிறிஸ்தவர்களாகிய எங்களது பங்களிப்பு என்ன?

இறைவன் படைத்த இந்த இயற்கை அழிந்துவிடாமல் முழு சுற்றாடலையும் பாதுகாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



 மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இயற்கைக்கு எதிராக செயல்படுகின்றவர்கள் மாற்றம் அடைய ஜெபம் செய்வோம்.

திங்கள் : ஆண்டவர்! படைத்த அழகான உலகத்துக்காக நன்றி கூறுவோம்.

செவ்வாய் : நாம் உயிர் வாழ தேவையான அனைத்து சூழல்களையும் ஏற்படுத்தி கொடுத்ததற்காக நன்றி கூறுவோம்.

புதன் : சூழலில் நாம் அனுபவிக்கும் அனைத்தும், கிரமமாக அமைந்துள்ளதற்காக நன்றி கூறி துதிசெலுத்துவோம்.

வியாழன் : இவ் இயற்கையானது கிரமமாக நடைமுறையில் செயல்படுகிறது. அதுபோல எமது வாழ்க்கையில் கிரமமாக நாம் செயல்பட கிருபையை பெறவேண்டுவோம்.

வெள்ளி : இயற்கையோடு எமக்கிருக்கும் உறவை வளர்த்துக் கொள்ள தேவகிருபையை வேண்டுகிறோம்.

சனி: : இயற்கை சூழலை பாதுகாக்க அனைவரும் தேவ கிருபையை வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 15

# மலைகளை அசைக்கும் நம்பிக்கை

நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.
(கொலோ 2:6-7)

பவுலடியார் விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று கூறுகின்றார். இங்கு "மரம்" உருவகமாக பயன்படுத்தப்படுகின்றது. கடவுளின் பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டவர்களாக இருக்கின்றோமா? இன்று பொதுவாக சபை மக்கள் குருவானவர்களை பற்றி இப்படி எண்ணம் கொள்கின்றனர். குருவானவர் என்றால் பக்தியானவர், பரலோக வாழ்வை எடுத்துரைப்பவர். இறைவனோடே நெருங்கிப் பழகுபவர் என்ற எண்ணத்தோடு அத்தகைய குருமாருக்கு முக்கியத்தும் கொடுக்கின்றனர். தங்கள் மதிப்புக்கு பாத்திரமான ஒரு சில பெரிய குருவானவர்களிடம் சாதாரண மக்களை போல் சில தவறுகளை அவர்கள் செய்யும் போது அப்பப்பா! இவரையா நான் முன்மாதிரியாக நம்பியிருந்தேன் பொய்யாகி விட்டதே என்று அங்கலாய்க்கும் நிலை வந்து விசுவாசத்தை ஆட்டம் கொள்ள செய்கின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரம் யார்? நாம் யாரில் வேர் கொண்டு இருக்கின்றோம்? என்ற கேள்வி எழுகிறது.

நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரம் குருவானவரா? பேராயரா? நம்மை சூழ்ந்துள்ள சகவிசுவாசிகளா? நாம் யாரில் நம்முடைய விசுவாசத்தை வேரூன்ற செய்திருக்கின்றோம்? "நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்புவதை பார்க்கிலும் தேவன் பேரில் பற்றுதலாயிருப்பது நலம்" என திருமறை கூறுகிறது. உங்கள் விசுவாசத்திற்கு மனிதன் அடிப்படையாக இருந்தால் உறுதியாக அந்த விசுவாசம் ஆட்டம் கொள்ளும், பிறரைச்சார்ந்து நாம் விசுவாசத்தை கட்டியெழுப்ப முடியாது. நம் விசுவாசம் கிறிஸ்துவில் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

நம்முடைய நம்பிக்கை கிறிஸ்துவின் உயிருள்ள உறவில் ஆழமானதாக இருக்கும் போது, அது மலைகளை அசைக்கும் நம்பிக்கையாக பரிணமிக்கும். லூக்கா 5:4-5ல் சீமோன் சொல்லுகின்றார் "ஐயா!மீன் பிடிப்பது பற்றி எனக்கு தெரியும் அறிவோடும், ஆற்றலோடும், அனுபவத்தோடும் இரவு முழுவதும் செலவிட்டேன்" என்கின்றார். ஆனால் இயேசுவின் சொற்படி வலையை வீசியபோது பெருந்திரளான மீன்கள் பிடிப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் என்னில் ஏற்படுத்தின விசுவாசத்திற்காக உமக்கு நன்றி.

திங்கள் : இறைவா! விசுவாசத்தை எந்த நிலைமையிலும் காத்துக்கொள்ள கிருபை தாரும்.

செவ்வாய் : ஆண்டவரே! என்னுடைய விசுவாசம் உம்மில் மாத்திரம் வைக்க உதவி செய்தருளும்.

புதன் : இறைவா! உம்மை விசுவாசிக்கிறதின் மூலமாக உம்முடைய வல்லமையை உணர்ந்துக் கொள்ள உதவிசெய்தருளும்.

வியாழன் : ஆண்டவரே! நீர் உம்மை விசுவாசிக்கிற வர்களை கொண்டு அற்புத அடையாளங்களை செய்கிறபடியினால் நன்றி.

வெள்ளி : இறைவா! என்னில் கடுகளவிலாவது விசுவாசத்தை நாளுக்கு நாள் வளரச்செய்யும்.

சனி : ஆண்டவரே! விசுவாசத்தை இறுதிவரை காத்துக் கொள்ள உதவிசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 16

# கடவுளில் வைக்கும் பற்றுறுதி

விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தான். (எபிரே11:17)

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என அழைப்பது எமது வழமையாகும். ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை ஆவதற்கு அவரின் வாழ்வின் அனுபவமே அடிப்படையாக இருந்தது. அவர் ஒரு ஆட்டுமேய்ப்பர். ஆதிக ஆடுகளை வைத்திருந்தவர். அவற்றிற்கு உணவு தேடி கிராமங்கள் பட்டிணங்கள் என ஒரு இடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு எங்கெங்கு புற்றரைகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஆடுகளை மேய்த்துச் செல்வார்.

இவ்வாறு ஆபிரகாம் இடத்திற்கு இடம் மாறிச் செல்லும் போது அவர் போகின்ற இடம் எப்படிப்பட்டது? மக்கள் எப்படிப்பட்டவர்கள்? அங்கு உணவு கிடைக்குமா? பாதுகாப்புக் கிடைக்குமா? என்னும் கேள்விகளுக்கு விடை தெரியாமல் செல்வது வழக்கம். ஆனாலும் அவர் செல்லும் இடங்களிலெல்லாம் கடவுளின் பாதுகாப்பு எல்லா ஆபத்துக்களிலிருந்தும் ஆபிரகாமைப் பாதுகாத்த அனுபவம் அவருக்குள் இருந்தது.

எதிரிகள் விலங்குகள் காலநிலை இவை அனைத்தாலும் ஆபத்துக்கள் ஏற்பட்ட போதிலும் அவற்றை ஆபிரகாம் எதிர் கொண்டார். இந்த வாழ்க்கை அனுபவம் ஆபிரகாமிற்கு ஒரு வித பற்றையும் கடவுளை உறுதியாகப் பற்றிப் பிடித்து வாழும் மன நிலையையும் கொடுத்தது. அவர் கடவுள் மீது பற்றுறுதி கொண்டவராக விசுவாசம் கொண்டவராக இருந்தார்.
இந்த அனுபவமே ஆபிரகாமைக் கடவுள் அழைத்து உனது நாட்டையும் குடும்பத்தையும் விட்டு கண்காண முடியாத தேசத்திற்கு போ என அழைத்தபோது கடவுளுக்குக் கீழ்ப்படிந்து சென்றார். இதனால் தான் ஆபிரகாமை விசுவாசத்தின் தந்தை என நாம் அழைக்கின்றோம். ஆபிரகாம் அநேக ஆபத்துக்களை எதிர்நோக்கினார்.

ஆனால் அவற்றிற்கூடாக கடவுளில் வைத்த தமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். இது போல எமது எதிர்காலம் இவ்வருடத்தில் எப்படி அமைந்திருக்குமென நாம் அறியமாட்டோம். ஆனாலும் நம் வாழ்வினூடாக நாம் பெற்ற அனுபவங்களை மனதிற் கொண்டு கடவுளில் பற்றுறுதி கொண்டு கடவுள் எங்களைப் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்தோடு எமது வாழ்க்கையில் முன்னேறிச் செல்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவா! எம் விசுவாச வாழ்வு வளர்ந்து வர உம்மை வேண்டுகிறோம்.

திங்கள் : உம்மில் வைத்துள்ள பற்றுறுதியில் ஆழமாயிருந்து எமது சவால்களை மேற் கொள்ள கிருபைத் தாரும்.

செவ்வாய் : எம் வாழ்வில் சந்தேகங்களோடும் கேள்வி களைக் கேட்டு வாழ்வில் முன்னேற்றம் அடையாத நிலையில் இருந்து எம்மை காத்துக் கொள்ளும்.

புதன் : எமது பற்றுறுதியில் குறைப்பாடுகள் இருப்பின் அவற்றை நிவிர்த்தி செய்யும்.

வியாழன் : எம்மிடம் உள்ள யாவற்றையும் இழந்த போதிலும் உமது நிறைவு எமக்கு கிடைக்கும் என்ற உறுதியைத் தாரும்.

வெள்ளி: : ஆண்டவரே! எதிர் காலத்தின் வாழ்வை உம்மிடத்தில் வைத்து ஆரம்பிக்கும் வாஞ்சையை தாரும்.

சனி: : இறைவா! உம் உதவியோடு வாழ்வின் சவால்களை வெற்றிக் கொள்ள ஆசீயைத் தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 17

# கர்த்தருடைய இருதயத்தை நோகப்படுத்தாதே

எப்பிராயிமே நான் உன்னை எப்படி கைவிடுவேன் இஸ்ரவேலே நான் உன்னை எப்படி ஒப்புக் கொடுப்பேன். என் இருதயம் எனக்குள்ளே குழம்புகிறது. என் பரிதானங்கள் ஏகமாய் பொங்குகிறது. (ஓசியா 11:8)

மனிதன் ஒருவன் துரோகியாக மாறும் போது ஏற்படும் உணர்வு எத்தகையது? வேறு ஒரு அழகான யுவதிக்காக காதலனை இழந்த ஒரு யுவதியிடம் கேட்டுப் பாருங்கள் அல்லது விரக்திப்பாடல் வரிசைகளை செவிசாய்த்துப் பாருங்கள் அல்லது தின செய்திதாள்களில் வரும் கொலைச் செய்திகளைப் பாருங்கள். கவனிக்கப் படவேண்டிய விடயம் என்னவென்றால் வெறுப்படைந்த காதலனுடைய சண்டையாகும்.

ஒருவனிடத்தில் முழு இருதயத்திலும் அன்பு செலுத்தி பிரதியுபகாரம் ஒன்றும் பெறாமல் ஏற்படுகின்ற உணர்வு பழைய ஏற்பாட்டிலே நேரடியாக ஓசியாவின் திருமணத்தின் போது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டவர் சர்வவல்லமை உள்ளவராய் இருந்தும் எந்த வித மனிதனையும் தன்னை நேசிக்கும் படி பலவந்தம் பண்ணவில்லை.

தேவன் புவியீர்ப்புசக்தி போன்று தனித்துவமல்லாத சக்தி என்று அநேகர் எண்ணுகின்றனர். ஓசியாவின் புத்தகம் முன்வைப்பது அதை விட வித்தியாசமானது. கோபம், கண்ணீர், அன்பு நிறைந்த வகையில் சித்தரிக்கின்றது. இஸ்ரவேல் கைவிடப்பட்டபோது அதற்காக பரிதவிக்கிற தேவன் ஒருவரே (ஓசியா 11:8)

மணவாளனான தேவன் தனது மணவாட்டியை இன்னொருவருடன் பங்கு போட்டுக் கொள்ளவிரும்பார். ஆனாலும் இஸ்ரவேல் கடவுளைக் கைவிட்டபோதும் அற்புதமான விதத்தில் தேவன் அவளோடு இருந்தார். மறுபடியும் ஒருநாள் அவள் தன்னிடத்தில் வருவாள் என்ற எதிர்ப்பார்ப்போடு அந்தவேளையை சகித்தார்.

தேவன் விரும்புவது தண்டணை கொடுப்பதற்காக அல்ல முழு இருதயத்தோடும் அன்பு செலுத்துவதற்கே என்று முதலாவது ஓசியாவும் பின்பு இயேசுகிறிஸ்த்துவும் நிரூபித்துள்ளார்கள். அவர் எம்மை எவ்வளவாய் நேசித்தார் என்பதை தெரிவிக்கும் பொருட்டு தன் குமாரனை அனுப்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : தேவன்! எம்மை முழு இருதயத்தோடு நேசிப்பதால் அன்பு செலுத்துவோம்.

திங்கள் : நாங்கள் அவருடைய இருதயத்தை காயப்படுத்திய வேளைகளுக்காக மன்னிப்புக் கேட்போம்.

செவ்வாய் : நாம் பிதாவை முழு இருதயத்தோடும் நேசிப்போம்.

புதன் : தேவன்! உலகத்தில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்று அறிக்கையிடுவோம்.

வியாழன் : நாங்கள் தினமும் எமது வாழ்வில் அன்பு கூறுவோம்.

வெள்ளி : தேவனே! அன்பு என்பதை விசுவாசிப்போம்.

சனி : அன்பான ஆண்டவரே! உம்முடைய இருதயத்தை வேதனைப்படுத்தாமல் அன்பிலே வாழ கிருபைதாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 18

# இறைவன் தேடும் மனிதன்

தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார். (பிரசங்கி 2:26)

நாம் உருவாக்கும் இல்லங்கள் நமது எதிர்கால சமுதாயம் உருவாகுவதற்கு அடித்தளங்களாக அமைகின்றன. இன்றைய இளைஞர்களிடையே பெருமளவு கிளர்ச்சிமனம் இருப்பதற்கான முக்கியமான காரணம் அவர்கள் வளரும் இல்லங்களே. ஒரு இல்லத்தின் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள், கிளர்ச்சிமனம் கொண்டோராக இருப்பதற்கான காரணம் அவர்கள் வளரும் சூழ்நிலை சரியாக இல்லாதிருப்பதுதான். உள்ளான மனநிலையில் ஏதோ ஒன்று சரியாக இல்லாதிருப்பதை அவர்கள் உணர்வதால், அதற்கு எதிராக கிளர்ச்சி எழுப்புகின்றனர்.

அவர்கள் வளர்ந்து வரும் வன் முறைவாழ்வு, அவர்களை கோபம் மிகுந்தவர்களாக ஆக்கிவிடுகிறது. அவர்கள் வாழ்வே அவர்களுக்கு குழப்பமாகி விடுகின்றது. ஒரு பிள்ளைக்கு நடைமுறைவாழ்வில் நற்பண்புகளைக் காட்டாது வாய்சொல்லில் அவற்றை கற்பிப்பது நன்மையை கொண்டுவராது. பெற்றோரிடம் காணப்படாத நற்பண்புகள் தங்களிடம் காணப்பட வேண்டும் எனபெற்றோர் விரும்புவதைக் காணும் பிள்ளைகள் குழம்பிப் போகின்றனர்.தாய் ஒருத்தி வீட்டை சுத்தம் செய்யும் பொறுப்பை மகளிடம் ஒப்படைத்துவிட்டு, அவளோ தொடர்ந்து ஒழுங்கில்லாமல் சுத்தப்படுத்தப்படும் பணியில் ஈடுபடாமல் இருப்பாளாயின், அந்த மகள் கட்டாயப்படுத்துவதினால் செய்தாலும், உள்ளத்தளவில் அவ்வேலைக்கு எதிராக கிளர்ச்சி மனப்பான்மை கொண்டவளாகி விடுகிறாள்.

ஓர் இல்லத்திற்குள் அன்பற்ற சமாதானமற்ற மனநிலை தொடருமானால் செயலாற்றமுடியாத சூழ்நிலை தோன்றிவிடுமல்லவா? எனவே எமது வாழ்வின் ஒவ்வொருபகுதியையும் சீரழித்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் புறப்பட்டு வருகிற ஆவிதான் போராட்டத்தின் ஆவி என்பதை நாம் நன்கு அறிந்து வெற்றியின் வாழ்வை வாழ விருப்பமுடையவர்களாக மாறவேண்டும். பிசாசின் கிரியைகளுக்கு எதிர்த்து நிற்க கற்றுக் கொள்ள வேண்டும். எபே:6-12 மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் வான மண்டலங்களிலுள்ள, பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு என கர்த்தரின் வாக்கு கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : பிதாவே! நாங்கள் நற்பண்புகள் கொண்டவர்களாக வாழ உதவி செய்தருளும்.

திங்கள் : ஆண்டவரே! நாங்கள் குடும்பத்திற்கும், திருச்சபைக்கும், சமூகத்திற்கும் பிரயோஜனமாக வாழ கற்றுத்தாரும்.

செவ்வாய் : இறைவா! திருச்சபை வளர என்னால் இயன்ற பணிகளை செய்ய என்னை ஊக்கப் படுத்தியருளும்.

புதன் : ஆண்டவா! நான் எப்போதும் உம்முடைய பிள்ளை என்பதை எனக்கு உணர்த்தியருளும்.

வியாழன் : பிதாவே! என்னுடைய செயல்பாடுகள் எப்பொழுதும் உம்மை பிரதிபலிக்க உதவி செய்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே! எனக்கு எதிராக வருகிற அனைத்து போராட்டங்களிலும், என்னுடைய வாழ்வின் சந்தோஷமான நிகழ்வுகளிலும் நீர் என்னோடு இருக்கின்றீர் என்பதை அறிந்துக் கொள்ள செய்யும்.

சனி : இறைவா! என்னுடைய வாழ்க்கையில் ஒழுங்கற்ற காரியங்களை ஒழுங்குப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம்
19

# கருத்துள்ள வாழ்க்கை.

... இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்...
(மத்தேயு 16:18)

பல வருடகாலம் திருப்பணியாளராய் பணியாற்றிய ஒருவரை எனக்கு தெரியும். இத்திருப்பணியாளர் ஓய்வு பெறும் வயதை அடைந்து ஓய்வு பெற்றார். பல வருடகாலம் ஊக்கமாய் திருப்பணியாற்றிய அவருக்கு ஓய்வு பெற்று வீட்டில் இருப்பது கடினமான அனுபவமாக மாறியது. தான் எவருக்குமே பயனில்லாதவன் என்ற உணர்வு உள்ளத்திலே தோன்றியது. எல்லோருடனும் தொடர்புகளை துண்டித்துக் கொண்டார். கிட்டத்தட்ட ஒரு வருடகாலம் ஒரு தனிமையான வாழ்க்கைக்குள் சென்றார். இச்சூழலில் ஒருநாள் திருச்சபை அங்கத்தவர் ஒருவரை சந்தித்தார். ஐயா உங்களோடு ஜெபம் பண்ண வந்திருக்கிறேன் என்று கூறினார். இந்த திருச்சபை அங்கத்தவர் கூறியதைக் கேட்ட அந்த வயது சென்ற திருப்பணியாளரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. இச்சம்பவம் இத் திருப்பணியாளரின் வாழ்க்கையை மெதுவாக மாற்றியமைத்தது. என்னாலும் பயனுள்ள வாழ்க்கை வாழ முடியும் என்ற உணர்வு தோன்றியது. வாழ்க்கையிலே நம்பிக்கை இழந்த பலர், இறைவனோடு தம் உறவை முறித்துக் கொண்டவர்கள் புதிய உற்சாகத்தோடு தமது வாழ்க்கையைத் தொடர இத்திருப்பணியாளர் உதவி செய்தார்.

நமது வாழ்க்கைப் பாதையிலே கருத்துள்ள வாழக்கையை உருவாக்கிக் கொள்ள எம்மைச் சுற்றி எத்தனையோ பாதுகாப்பு அரண்களை அமைத்துள்ளோம். சிலவேளைகளில் எமது பாதுகாப்பு அரண்கள் எல்லாமே உடைந்து, விழுந்து வாழ்க்கையில் வெறுமை நிலையை அனுபவிக்கின்ற சம்பவங்கள் நடப்பதுண்டு. யூதமக்களின் எதிர்பார்ப்பையோ, சீடர்களின் எதிர்பார்ப்பையோ இயேசு ஒரு மேசியாவாக, வழிகாட்டும் சமுதாய தலைவனாக முன்நின்று நிறை வேற்றவில்லை. மாறாக உரோம அரசாங்கத்தினால் பிடிக்கப்பட்டு சிலுவையிலே அறையுண்டு கொலை செய்யப்பட்டார். உலக நிகழ்வுகளிலே இது ஒரு தோல்வியின் வெளிப்பாடு. ஆனால் அத்தோல்வியில் இருந்துதான் இயேசுவின் திருப்பணியின் வெற்றி ஆரம்பமானது. கற்பாறையாகிய உன்மேல் என் திருச்சபையை கட்டுவேன் என்று இயேசுவால் பேதுருவுக்கு கூறப்பட்ட வார்த்தைகள் வெற்றி பெற்ற ஒரு மனிதனுக்கு கொடுக்கப்பட்ட புகழாரமல்ல, மாறாக தோல்வி பெறுகின்ற மனிதர்களுக்கு கூறப்படும் உறுதிமொழியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவனால்! உருவாக்கப்பட்ட ஒவ்வொருவரும் பயனுள்ள வாழ்க்கை வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்துக் கொள்ள உதவி செய்யும்.

திங்கள் : வாழ்க்கையில் தோல்விகளை சந்திக்கும் போது அவை வாழ்க்கையின் முடிவல்ல என்ற உறுதியை தந்தருளும்.

செவ்வாய் : விழுந்து போகும் சந்தர்ப்பங்கள் ஆண்டவர் கைவிடுகிற சந்தர்ப்பங்கள் அல்ல அந்நேரங்களில் எல்லாம் ஆண்டவரின் கரம் கூட இருக்கிறது என்பதை உணர்த்தியருளும்.

புதன் : ஆண்டவர்! நமக்கு கொடுக்கும் அழைப்பு எப்போதும் மற்ற மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற ஒன்றாக இருக்க முடியாது என்பதை கற்றுத் தாரும்.

வியாழன் : இயேசு! தன் வாழ்க்கையில் சிலுவையை சந்தித்தது போல ஆண்டவர் அழைப்பு, எப்போதும் சுமூகமான பாதையல்ல என்பதை காட்டியருளும்.

வெள்ளி : ஆண்டவா! நம்மை அழைக்கும் போது "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என சாமுவேல் சொன்னதுபோல ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை தாரும்.

சனி : இறைவனின்! திட்டம் தோல்வியடைவது போல தோன்றினாலும், சிலுவையில் மரணத்திற்கு பின் உயிர்தெழுதல் இருக்கிறது என்ற உறுதியைத் தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 20

# எமக்கு உதவி செய்பவர்களை அறிந்து கொள்ளல்

நீயும் போய் அந்தப்படியே செய்
(லூக்கா 10:37)

பிறருக்கு உதவி செய்பவர்கள் சமுதாயத்தில் எப்போதுமே வாழ்கிறார்கள். இதில் மூன்று முக்கிய பிரிவினராக மக்களை உள்ளடக்கலாம். முதல் பிரிவினர் சுய நலம் கருதி உதவுபவர்கள். ஆடு நனைகிறதென்று ஓநாய் கண்ணீர் விட்டது என்ற கூற்றுக்கு அமைவாக நடந்து கொள்பவர்கள். இரண்டாம் பிரிவினர் தமக்குப் பெருமையையும், புகழையும் தேடும் நோக்கோடு உதவுபவர்கள்.

மூன்றாவது பிரிவினர் முதல் இரு பிரிவினரிலிருந்தும் வேறுபட்டவர்கள். இவர்கள் எவ்வித எதிர்பார்ப்புமின்றி உதவுபவர்கள். ஆண்டவர் காட்டிய மனவுருக்கத்தினால் உந்தப்பட்டு உதவுபவர்கள். இவர்கள் ஆண்டவரோடு நெருங்கி வாழ்வதோடு, சமூகத்திலும் இலை மறை காய்களாக வாழ விரும்புவார்கள். தமது பெயரைக் கூட வெளியிட விரும்பாதவர்கள். இத்தகைய மக்களே இன்றைய திருமறைப் பகுதியில் காணப்படும் நல்ல சமாரியனுக்கு ஒப்பிடத்தக்கவர்கள். இந்த நல்ல சமாரியன் என்ற பாத்திரத்தின் மூலம் ஆண்டவர் தம் அன்பின் தன்மையை வெளிப்படுத்தினாலும் மனவுருக்கம் கலந்த உதவி எத்தன்மை வாய்ந்தது என்பது இதனூடாக வெளிப்படுகிறது.

நல்ல சமாரியனின் உதவி தன்னலமற்றது. குற்றுயிராய் கிடந்த யூதனுக்கு உதவுவதில் தனக்கு எவ்வித பிரதி பலனும் கிடைக்கப் போவதில்லை என்பது இச் சமாரியனுக்கு நன்கு தெரியும். அதே போல இச் சமாரியனின் உதவும் பண்பு இன,மத பேதத்தையும் தாண்டியது. நம் நாட்டில் போரின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிக் கரம் நீட்டிய, தம் பெயரையே வெளியிட விரும்பாத தென் பகுதி சிங்கள மக்களான சமாரியர்களை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. முன் பின் அறியாத ஒருவனுக்கு தனது நேரத்தை, பணத்தை செலவழிப்பதோடு நின்று விடாமல் தனது உயிரையே பணயம் வைத்து உதவும் பண்பை இங்கு காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவா! நாங்கள் எப்பொழுதும் சமூகத்தில் தேவையில் உள்ளோரை அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய ஏவியருளும்

திங்கள் : பிதாவே! என்னில் நான் காட்டுகிற கரிசனையைப்போன்று மற்றவர்களிடமும் கரிசனையோடு நடந்துக் கொள்ள ஏவியருளும்.

செவ்வாய் : நாங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போதோ உதவிகள் செய்யும் போதோ எந்த எதிர்பார்ப்பும் இன்றி உதவிசெய்யும் மனப்பக்குவத்தை தந்தருளும்.

புதன் : ஆண்டவரே! நாங்கள் எந்த வேற்றுமை உணர்வுகளும் இல்லாமல் எல்லா இன, மத, குல, மக்களையும் நேசிக்கிறவர்களாக பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக வாழ உதவி செய்தருளும்.

வியாழன் : இறைவா! நாங்கள் வாழும் சமூகத்தில் அநீதியான காரியங்கள் நடைபெறும் போது அவற்றைக்கண்டும் காணாதவர்களாக வாழாது உண்மையான மனித நேயத்தோடு நடந்துக்கொள்ள உதவி செய்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே! நான் எப்போதும் மற்றவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும் என்று ஆராய்ந்து என்னால் இயன்றதைச் செய்ய உதவி செய்தருளும்.

சனி : இறைவா! நான் எப்பொழுதும் உம்மைப் போல அன்பு கொண்டு வாழ உதவி செய்தருளும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாரம் 21

# சூதாட்டம்

ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது... (2 தெச 3:10)

சூதாட்டம் என்பது என்ன? ஒருமனிதன் தனது பணத்தை ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் தன்னுடைய அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பி முதலீடு செய்வதாகும். இச்செயல்பாட்டிலே பலர் தம் முதலீட்டை இழக்கும் போது சிலர் அதிர்ஷ்டத்தினால் பணத்தை பெற்றுக்கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்களாக சூதாட்டத்தை நிராகரிக்கின்றோம். இச்செயற்பாடு வஞ்சகமாக மற்றவர்கள் பணத்தை பெற்றுக்கொள்வதாகும். பணம் நமக்குதேவையாக இருந்தால் அதற்காக நாம் வேலை செய்யவேண்டும். சூதாட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் வேலை செய்வதிலும் பார்க்க சூதாட்டத்தின் மூலம் நல் வாழ்க்கையை பெற்றுக்கொள்ளலாம் என்று நம்புகிறார்கள். சூதாட்டம் சோம்பலை உருவாக்குகிறது. நமது நேர்மையையும், தகைமைகளையும், புத்தியையும் பயன்படுத்தி வாழ்க்கையை முன்னெடுத்து செல்வதை இறைவன் விரும்புகிறார். லொத்தர் சீட்டுகளை வாங்குவது, அதிர்ஷ்ட இலாப சீட்டுகளில் முதலீடு செய்வது, குதிரை பந்தயத்தில் பணம் கட்டுவது, சூதாட்ட விடுதிகளுக்குபோவது எல்லாம் வெவ்வேறு வகையான சூதாட்டங்களே. சூதாட்டத்தினால் கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி அபிவிருத்திகள், புலமைப்பரிசுகள், வைத்திய வசதிகள் போன்ற பொது சேவைகள் செய்வது நியாயப்படுத்தப் படக்கூடியது,எனசிலர் நம்புகிறார்கள். சூதாட்டத்தினால் கிடைக்கும் பணத்தை வைத்து செய்யப்படும் முதலீடு நியாயமானது என கருதப்படுவதில்லை. ஒரு நன்மையான காரியத்தை செய்யமுயற்சி செய்கின்ற போது அதற்கு செலவிடப்படும் பணம் அறவழியில் பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

11தெச3:10-12 பவுல் அடிகளார் வேலை செய்யாதவன் சாப்பிடக் கூடாது என்று கூறுகின்றார். நீங்கள் அமைதலோடு வேலை செய்து சொந்தச் சாப்பாட்டை சாப்பிட வேண்டும் என்று கற்று கொடுக்கிறார். வேதாகமத்தை பொறுத்த வரையில் வேலை என்பது மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பாக காட்டப்படுகிறது. கடவுள் நமக்கு தகைமைகளை கொடுத்திருக்கிறார். நமது தேவைகளுக்காகவும், மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், நல்ல உக்கிராணக்காரர்களாக பணியாற்ற அழைக்கப்படுகின்றோம். மற்றவர்கள் மற்றவர்களுடைய பணத்தை வஞ்சிக்காமல், நமக்கு இருப்பது போதுமானதென வாழுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நாங்கள் சோம்பேறிகளாக இல்லாமல் எங்களால் இயன்ற தொழில்களை செய்துவாழ கற்று தாரும்.

திங்கள் : இறைவா! நான் நேர்மையான வழியில் நடந்து, வேலை செய்து, அதன் மூலமாகவும் உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்த உதவி செய்தருளும்.

செவ்வாய் : ஆண்டவரே! உமக்கு பிரியமற்ற விதத்திலே வரும் அதிக இலாபமாக இருந்தாலும் அவற்றை வெறுத்து வாழ கற்று தாருங்கள்.

புதன் : இறைவா! நீர் எங்களுக்கு கொடுத்திருக்கின்ற தாலந்துகளை திறமைகளை உம்முடைய ராஜ்யத்திற்கென்று பயன்படுத்த வாஞ்சையைத் தாரும்.

வியாழன் : ஆண்டவரே! நீர் எங்களுக்கு கொடுத்திருக்கும் நேரங்களை பணங்களை வீண்விரயம் செய்யாமல் ஞானமாய் அவற்றைப் பயன்படுத்த உதவி செய்யும்.

வெள்ளி : இறைவா! நீர் எங்களுக்கு கொடுத்தவைகளிலே போதுமென்கிற மனநிலையைத் தாரும்.

சனி : ஆண்டவரே! எங்களுடைய வாழ்வில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியில் நாங்கள் சோர்ந்து போகாது உம்மில் விசுவாசம் வைத்து வாழ உதவிசெய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 22

# மெதடித்த திருச்சபையின் 200வது ஆண்டுவிழா

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று அவர்களை நோக்கி உரத்தசத்தமாய் யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்துக் கொள்வீர்களாக, என் வார்த்தைளுக்கு செவிகொடுங்கள். (அப் 2:14)

இயேசு மரித்து உயிர்த்தெழுந்து 2000 ஆண்டுகளை கடந்து வந்து விட்டோம். திருச்சபை சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும் போது இயேசு மரித்து உயிர்தெழுந்த சம்பவங்களை சீஷர்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை காணமுடிகிறது.(அப்2:14) பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு செய்த முதல் பிரசங்கம் இயேசுவின் உயிர்தெழுதலைப் பற்றியதே. ஆதி திருச்சபையில சீஷர்கள் இரத்த சாட்சியாக மரிக்கின்ற அளவிற்கான உறுதியை இயேசுவின் உயிர்தெழுதல் உண்டாக்கியிருக்கிறது. இந்த உயிர்தெழுதலில் நம்பிக்கை வைத்திருக்கும் நாமும் ஆண்டவருக்காக எங்களுடைய வாழ்க்கையை ஒப்படைக்க முன் வருவோமா? ஆண்டவருக்காக தமது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைக்க ஆயத்தமுள்ள மனிதர்களே ஆதி திருச்சபையில் ரத்தசாட்சியாக மரித்தார்கள். முதல் ரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானை குறித்து அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் கூறப்படுகிறது. இந்த உயிர்தெழுதலில் நம்பிக்கை வைத்திருக்கும் நாமும் ஆண்டவருக்காக எங்களுடைய வாழ்க்கையை ஒப்படைக்க முன் வருவோமா? ஆண்டவருக்காக தமது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைக்க ஆயத்தமுள்ள மனிதர்களே ஆதி திருச்சபையில் மரித்தார்கள். முதல் ரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானை குறித்து அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் கூறப்படுகிறது.

ஆண்டவர் கடந்த 200 வருடங்களாக மெதடித்த திருச்சபையை வழிநடத்தி வந்திருக்கின்றார். 1814ம் ஆண்டு அருட்திரு.தோமஸ் கோக் அவர்கள் தலைமையில் இலங்கைக்கு வந்த அருட்திரு.வில்லியம், ஓல்ட், தோமஸ் ஸ்குவான்ஸ், ஜோர்ஜ் இரஸ்கின்ஸ், ஜேம்ஸ் லிஞ், மார்டின் ஹவர்ட், பென்ஞ்சமின் கிளவ் ஆகியவர்களை கொண்ட மிஷனரிமார் குழு மெதடித்த திருப்பணியை இலங்கையில் ஆரம்பித்தது. 200 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் தென்பகுதியில் உள்ள காலி பிரதேசத்தின் வெலிகம என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மெதடித்த திருப்பணி பல்வேறு, பட்ட சவால்களுக்கு ஊடாக கடந்து சென்று, இன்று இலங்கையின் எல்லா பகுதிகளிலும் கால் பதித்திருக்கிறது. இப்படியான வழிகாட்டுதல் ஊடாக 200 வருடங்களை சந்திக்கும் மெதடித்த திருச்சபைக்கும், ஆதிதிருச்சபைக்கும் எப்படிப் பட்டதொடர்பு இருக்கிறது? இன்றைய திருச்சபையில் இருக்கின்ற திருச்சபை உறுப்பினர்களாகிய நாம் உயிர்தெழுந்த இயேசுவை பிரதிபலிக்கின்றோமா என்பது நாம் எழுப்ப வேண்டிய முக்கியமான வினா. இப்பயணத்தில் இணைந்து கொண்டிருக்கும் நாம் ஆதி திருச்சபையின் உற்சாகத்தோடு முன்னேறிச் செல்ல ஒளிருகின்ற விளக்குகளாக இருக்க ஆண்டவர் உதவி செய்வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் படைத்த படைப்புகள் யாவையும் சிறந்ததாக காண உதவி செய்யும்.

திங்கள். : இறைவா! உம்முடைய சமூகத்தில் எங்களுடைய பாவங்களை உணர்ந்து மனஸ்தாபப்பட ஏவியருளும்.

செவ்வாய் : தேவனே! உம்முடைய குமாரனாகிய இயேசுவின் மூலம் உம்முடைய பிள்ளை என்ற சுவிகாரத்தை தந்தருளும்.

புதன் : பரிசுத்தமுள்ள பிதாவே! அந்தகாரத்தில் இருந்து எங்களை ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தருளும்.

வியாழன் : இரக்கமுள்ள ஆண்டவரே! உம்முடைய மற்றற்ற இரக்கங்களினாலே எங்களுடைய இருதயத்தை நிரப்பியருளும்.

வெள்ளி : இறைவா! இந்த நாளிலே நான் என்னுடைய வாழ்க்கையிலே அடுத்து நான் என்ன செய்ய வேண்டும் என்று அறியாதவர்களுக்கு அவர்களுடைய உண்மை நிலையை உணர்த்தியருளும்.

சனி : பிதாவே! பாவத்தில் இருந்து விடுதலை பெற்றுக் கொள்ள முடியாது இருக்கின்றவர்களுக்கு உம்முடைய கண்களிலே இரக்கத்தை காண்பித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 23

# பிழையற்றது

அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதுமாய் இருக்கிறது. (ஆதி 3:6)

மெய்யான கிறிஸ்தவன் கிறித்துவுக்குள் இருக்கிறான். அவன் பாதுகாப்பாய் இருக்க 5 காரியங்கள் முதலாவது, பார்வையில் கவனமாய் இருத்தல். (ஆதியா3:6) ஏவாள் பிசாசினால் வஞ்சிக்கப்படும் போது தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் அழகில் கவரப்பட்டு பாவத்தினுள் வீழ்ந்து விடுகிறாள். அதற்கான காரணம் பார்வையின் ஊடாக அவள் கவரப்பட்டாள். எமது கண்கள் நல்லதை விட கெட்டதையே காண விரும்புகின்றது. எனவே தவறு அற்றதையே காண முயற்சி செய்வோம்.
இரண்டாவது, எமது பிரயாணத்தைக்குறித்து விழிப்பாய் இருப்போம். (நியாய 16:4-16) சிம்சோன் தவறான பாதையில் சென்ற படியால் தனது வாழ் நாட்களை குறுகியதாக்கி கொள்ளுகிறான். எமது கால்கள் நல்வழியில் பயணிக்கும் போது எமது வாழ்வு அழகாய் அமைவது உறுதியானது. நமது கடந்த கால வாழ்வு தீமையானதாக இருந்தாலும் அதை நல்வழி படுத்தி கொள்ளுவோம்.

மூன்றாவது, தேவையை குறித்து கவனமாக இருத்தல். ((கலா 5:16-21) மாம்ச இச்சைகளுக்கு அடிமையாகி எமது எல்லைகளின் வரவுநிலையை மீறி, வாழ்ந்து வருகிறோம். ஆனால் ஆன்மீக வாழக்கையில கீழான நிலையில் வாழ்கின்றோம். நல்வழியில் நடக்க நாம் ஆயத்தமாகுவோம்.

நான்காவது, சிந்தனை குறித்து விழிப்பாய் இருத்தல். (நீதி 16:1-2) சிந்தனையூடாக வரும் காரியங்கள் ஏராளமானவை. தீமையான சிந்தனையே பாவம் ஆகும். பழிவாங்குவது தீய மனிதனுக்கு சாதாரண விடயமாகும். இயேசு கிறிஸ்து தனிப்பட்ட முறையில் பழிவாங்குதலை எதிர்த்தார். நற்சிந்தனைகள் உள்ளவர்களாய், நற்காரியங்களை உருவாக்கி கொள்ளுவோம்.

ஐந்தாவது வாழ்வை குறித்து விழிப்பாய் இருப்போம். (1யோவா3:1-3) நாம் கடவுளது பிள்ளைகளாக வாழ வேண்டும். அவர் பரிசுத்தராக இருந்தது போல நாமும் பரிசுத்தராக இருப்போம், இவ்விதமாக நாம் ஒளியின் பிள்ளைகளாக இருக்கும் போது ஆண்டவர் நம்மை வழிநடத்துவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! சபையாக பிழையற்றவைகளை செய்து உண்மைக்காக குரல் கொடுக்க உதவிசெய்யும்

திங்கள் : ஆண்டவரே! உமது பார்வையில் கவனமாய் இருக்கவும் பிழையற்ற காரியங்களை காணவும் உதவிசெய்யும்.

செவ்வாய் : ஆண்டவரே! பிழையற்ற வழியில் செல்ல எமக்கு உதவி செய்யும்.

புதன் : ஆண்டவரே! எமது தேவைகளை சரியான முறையில் தெரிந்துகொள்ள உதவி செய்யும்.

வியாழன் : ஆண்டவரே! எமது சிந்தனையில் விழிப்பாய் இருக்க உதவி செய்யும்.

வெள்ளி : ஆண்டவரே! கடவுளின் பிள்ளையாக செயல்படவும், வாழவும் உதவி செய்யும்.

சனி : ஆண்டவரே! தவறானதை தவறாக காணவும், நீதிக்காக குரல் கொடுக்கவும், மற்றவர்களை நல் வழிப்படுத்தவும் உதவி செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 24

# திருச்சபையும் வாலிபனும்

குமாரனாகிய தீமோத்தேயுவே உன்னைக் குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின் படியே நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம் பண்ணும் படி இந்த கட்டளையை உமக்கு ஒப்புவிக்கிறேன், (1 திமோ 1:18-19)

வாலிபனாக இருந்த தீமோத்தேயுவுக்கு பரி.பவுலின் ஊடாக அநேக அறிவுரைகள் கூறப்பட்டது. அன்று திருச்சபையில் காணப்பட்ட பெலவீனங்களுக்கு விரோதமாக குரல் கொடுக்க வேண்டிய விதத்தையும், திருச்சபையைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான அறிவுரைகளும் இதற்குள் அடங்கியுள்ளது. இவ்வறிவுரைகளும் உத்தரவாதங்களும் வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு மட்டுமே உரித்தானது அல்ல. அவைகள் நிகழ்கால திருச்சபையில் ஊழியத்தில் ஈடுபாடு உள்ள அனைத்து வாலிபர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

திருச்சபையில் உத்தரவாதம் உள்ள வாலிபர்களாகிய எமக்கு பரிசுத்த நற்சாட்சி பத்திரம் உள்ளதா? என மனசாட்சியிடம் சோதித்துப் பார்க்க வேண்டும். வாலிபர்களாகிய நமது வாழ்வு பாசி படிந்த நிலத்தில் நடப்பது போன்றது என நீதிமொழிகள் நூலில் வாசிக்கின்றோம். எனவே எமது வாழ்வில் கவனமற்றிருக்கின்ற போது தவறி போவது தவிர்க்க முடியாததாக மாறி விடுகிறது. நமது வாழ்வு குறிப்பாக வாலிப காலத்தில் நெறிபடுத்தப்படாமல் போகுமிடத்து முழு வாழ்வுமே பாதிக்க படக்கூடிய சூழல் உருவாகிறது.

அன்று பரி.பவுல் வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு கூறிய இன்னொரு முக்கிய அறிவுரை என்னவென்றால் பணத்தை நாடி ஓடுகிறவனாக இல்லாமல் தேவனை கனம் பண்ணுகிறவனாகவும், தேவபயம் உள்ளவனாகவும், பூரணவிசுவாசம் உள்ள வாலிபனாக காணப்பட வேண்டும். இக்குணலட்சணங்கள் உங்களது வாலிப உள்ளங்களில் உள்ளதா என சோதித்து பாருங்கள். அப்படி இல்லை என்றால் மெய்யான மனமாற்றத்திற்குகூடாக கர்த்தரிடத்தில் வாலிபர்களாகிய எங்களை அர்ப்பணிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! உம்மைக் குறித்த உறுதியான விசுவாசத்தை எனக்குள் உருவாக்குங்கள்.

திங்கள் : ஆண்டவரே! எனது இருதயத்தை உமக்கு முன்பாக திறந்து எனது மனசாட்சிக்கு அமைய நான் வாழ்ந்து வருகிறேனா என்பதை சோதித்து பார்க்க உதவும்.

செவ்வாய் : ஆண்டவரே! என்னை உமக்கு பிரியமான பாத்திரமாக உருவாக்கும்.

புதன் : தேவனே! எந்தநேரமும் நான் கோபப்படுகிறவனாக உள்ளேன். அமைதியானவனாக என்னை மாற்றும்.

வியாழன் : ஆண்டவரே! உமக்கு பிரியமானபடி திருச்சபைக்குள்ளே மற்றவர்ளை பரிவுடன் உபசரிக்கும் ஊழியத்திற்கு என்னை பயன்படுத்தும்.

வெள்ளி : ஆண்டவரே! எனது வாழ்க்கையில் உள்ள எல்லா தீயபழக்க வழக்கங்களிலும் இருந்து மீட்டுக் கொள்ளும்.

சனி : தேவனே! என்னுடைய வாழ்க்கையில் தவறிய இடங்களை சீர்ச்செய்து புதிதாக உம்சமுகத்தில் என்னை அர்ப்பணிக்க பெலன் தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 25

# ஒரு சீடனின் உத்தரவாதம்

"அவர் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பினார்" (மாற் 3:13-15)

இயேசுகிறிஸ்து பன்னிரண்டு சீடர்களை இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் உலகத்தை அசைக்கக்கூடிய ஒரு பிரமாண்டமான செயற்பாட்டை நடப்பிக்கிறார். அவருடைய உடன் வேலையாட்களை அவர் விண்ணிலிருந்து கூட்டிக் கொண்டு வரவில்லை. எம்மை போலவே பல குறைகள் உள்ள சிலரை இந்த உலகத்திலேயே இதற்காகத் தெரிந்துக் கொண்டார்.

இயேசு இப்பூமியில் வாழ்ந்த காலத்தில் அவரோடு கூட நெருங்கி வாழக்கூடிய வாய்ப்பை அவர்கள் பெற்றனர். அவரோடு உறவு கொண்டு, அவரிடம் கற்றுக்கொண்டு அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த இணையில்லா மனிதர் நிறைவேற்ற கூடிய மூன்று உத்தரவாதங்களை குறித்து நற்செய்தி ஆசிரியர் தெளிவாக எடுத்து உரைக்கிறார். ஈராயிரம் ஆண்டுகளாக கரத்துக்குகரம் தாவி வந்த அந்த பணி இன்று நமது கரங்களில் சவாலாக கிடைத்துள்ளது. அதைநாம் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

முதலாவதாக நாம் அவரோடு கூட இருத்தல் வேண்டும். சீடருக்குக் கிடைத்த நேரடி பட்டறிவு நமக்கு இல்லை. ஆனாலும் எம் உடல்களை அவர் குடியிருக்கிற ஆலயமாக மாற்றியிருக்கிறார். அவருடைய வார்த்தைகளைத் தியானிப்பதன் மூலமும் ஜெபத்தின் மூலமும் வழிப்பாட்டின் மூலமும் அவரோடு கூட இருக்கக்கூடிய பேறு பெற்றிருக்கின்றோம். இது அவருடைய பணியைச் செய்ய நம்மைப் பெலப்படுத்துகின்றது.

அவருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள திறமையுள்ள பிரசங்கியாளராக இருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை. உங்கள் பணியின் மூலமாக உங்கள் சாட்சியான வாழ்வின் ஊடாகவும் இதை நிறைவேற்றலாம்.

கிறிஸ்துவை அறிந்து கொள்ளுதல் அவரை பின்பற்றுதல் ஆகிய சவால்களை ஏற்று முன் நோக்கி செல்லுதல் ஒரு ஊழியனின் கடமையாகும். மூன்றாவதாக பிசாசுகளை துரத்த கூடிய அதிகாரத்தை உடையவராயிருத்தல். இன்று மக்களை அழிவை நோக்கி இட்டு செல்லும் பிசாசின் அந்தகார வல்லமைகளுக்கு விரோதமாக எழுந்து நிற்க நாம் திராணியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : பிதாவே! நாங்கள் உம்முடைய பணியை செய்யும் போது சீஷர்களை உருவாக்க உதவி செய்தருளும்.

திங்கள் : உம்முடைய திருப்பணியைச் செய்ய பலவீனமான மனிதர்களாகிய எங்களை நம்பி அழைத்தமைக்காக நன்றி.

செவ்வாய் : இக்கால திருப்பணியாளர்களாக வாழ எம்மை அழைத்தீரே உமக்கு நன்றி.

புதன் : பல சவால்களை ஏற்று சீடர்களாக இருக்கும் ஒவ்வொருவரையும் பெலப்படுத்தியருளும்.

வியாழன் : சோதனை வரும் போது நிற்க திராணியில்லாதவர்களாய் பின்வாங்கிப் போகிற ஒவ்வொருவரையும் பெலப்படுத்தியருளும்.

வெள்ளி : பலகோணங்களில் எம்மிடத்தில் வரும் அந்தகார வல்லமைகளை பகுத்தறிய கூடிய கிருபையையும் அதற்கு விரோதமாக எழும்பி நிற்கவும் உதவி செய்தருளும்.

சனி : ஒரு சீடனுடைய வாழ்க்கையில் இருக்க கூடிய இருக்கக் கூடாதவற்றை அறிந்து செயல்பட கிருபை தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 26

# சலனங்களே தோல்வியின் காரணிகள்

"சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் இந்த மலையை பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே...
(மத் 21:21)

ஒரு இரவு வேளையில் இயேசுவின் சீடர்கள் படகில் ஏறிகடலில் யாத்திரை செய்தார்கள். சடுதியில் அவர்களை நோக்கி ஒருவர் தண்ணீர் மத்தியில் நடந்து வருவதை கண்டார்கள். ஆவி என்று நினைத்து அவர்கள் பயந்தார்கள். வருகிறவர் இயேசு என்று அறிந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவனாகிய பேதுரு "ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்" அவர் "வா"என்ற ஒரே வார்த்தையில் பதிலளித்தார். பேதுரு படகில் இருந்து இறங்கி ஜலத்தின் மத்தியில் நடக்க ஆரம்பித்தான்.

ஆனால் கதையின் திசை மாறியது. பலமாக அடித்த காற்றை நோக்கி பார்த்த பேதுரு கடலில் அமிழ்ந்து போக தொடங்கினான். பயத்துக்கும் தண்ணீருக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன? அவன் ஜலத்தின் மீது நடக்கும் போது அவன் விசுவாசம் எங்கே இருந்தது? அவன் ஏன் அமிழ்ந்து போகத் தொடங்கினான்? உடனே இயேசு தன் கரத்தை நீட்டி அவன் கையைப் பிடித்து ஏன் சந்தேகப்பட்டாய்? என்று கேட்டார். "வா"என்று அவர் சொன்ன வார்த்தையில் வல்லமையை அவனது சந்தேகம் முறியடித்து போட்டது.

பேதுரு சந்தேகப்பட்டிருக்காவிட்டால் இயேசுவை தாங்கி கொண்டிருந்த தண்ணீர் பேதுருவையும் தாங்கி கொண்டிருந்திருக்கும். சந்தேகம் உங்கள் உள்ளத்தில் நுழைய இடங்கொடாதிருங்கள். அது பயத்தை பிறப்பிக்கும். ஆதலால் சந்தேகம், பயம் விசுவாசமின்மைக்கு இடங்கொடாதிருங்கள். தேவனுக்காக அநேக காரியங்கள் செய்ய நீங்கள் அழைக்கப்பட்ட போதிலும் அதை செய்யவிடாமல் சந்தேகம் உங்களை தடுத்திருக்கலாம்.

இறைவனின் வார்த்தையின் மீது உங்கள் விசுவாசத்தை கட்டி எழுப்புங்கள். அது உங்களை ஒரு போதும் பெலவீனப்படுத்தாது. எந்த சந்தர்ப்பமாய் இருந்தாலும் தேவனுடைய வார்த்தையை விட்டு விலகாமல் நம்பிக்கையோடு காத்திருங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையில் சூழ்நிலைகள் உங்களை ஒன்றும் செய்ய முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! அநாதி காலமுதல் நீர் என்மேல் வைத்திருக்கும் உம்முடைய நோக்கத்திற்காக நன்றி செலுத்துகிறேன்.

திங்கள் : இறைவா! நீர் என்னில் வைத்திருக்கின்ற உமது சித்தத்தை செய்ய கிருபையை தாரும்.

செவ்வாய் : ஆண்டவரே! எங்களுடைய வாழ்வில் வரும் சந்தேகங்களில் எங்களுக்கு ஒரு தெளிவை தாரும்.

புதன் : இறைவா! உம்முடைய சித்தத்தை என்னுடைய வாழ்வில் செய்ய உதவி செய்தருளும்.

வியாழன் : ஆண்டவரே! எனது வாழ்வில் புயல் வீசும் நேரங்களில் உம்மை மாத்திரம் நோக்கி பார்க்க உதவி செய்யும்.

வெள்ளி : பிதாவே! என்னுடைய பெலவீன நேரங்களில் என்னை கரம் பிடித்து வழிநடத்தும்.

சனி : எல்லாவற்றுக்கும் ஊற்றும் காரணமுமான ஆண்டவரே! உம்மிலே நான் வைத்திருக்கும் விசுவாசத்தை என்னிலே நாளுக்கு நாள் வளரச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 27

# இறைவன் தரும் அனுமதியைத் தேடல்

"என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின் படி செயல்படுபவரே செல்வர். (மத்தேயு 7:21)

உத்தரவின்றி உட்புக வேண்டாம்" என்ற அறிவிப்புக்களை அநேக இடங்களில் நாம் கண்டிருக்கின்றோம். ஆம், இவ்வாறான இடங்களுக்கு உத்தரவு பெற்றுதான் உட்புக முடியும். அவ்வாறே தான் இறைவனின் அனுமதியையும் நாம் பெற்று கொள்ள முடியும். இறைவனின் சித்தமே இறைவன் எமக்குதரும் அனுமதியாகும்.

இறைவனைப் போல் ஆக வேண்டும் என்று எண்ணிய ஆதாம், ஏவாள் இறை அனுமதியின்றி கனி உண்டனர். எனவே இறை தன்மைக்கு ஆசைப்பட்டு, இறை அனுமதியின்றி வாழ்வில் தோல்வியையும், வெட்கத்தையும் மட்டுமே சம்பாதித்து கொண்டனர். அவ்வாறே 'பாபேல்' கோபுரத்தைகட்டி மனிதன் தனக்கு பெருமை உண்டாக்க முயற்சித்தான். இறை அனுமதியின்றி, இறை சித்தமின்றி முயற்சித்ததால் மனித இனம் பல்வேறு மொழிகளை பேசி பிரிந்து வாழும் நிலைக்குள் சென்றது.

நோவாவின் காலத்தில் தேவகுமாரர்கள் மனுக் குமாரத்திகளை திருமணம் செய்து கொண்டதை இறைவன் அனுமதிக்கவில்லை. இறைவனின் அனுமதியற்ற இவ்வாறான உறவால் பாவம் பெருகி இறைசித்தமின்மையால் அழிந்து போனதை திருமறை எடுத்துணர்த்துகின்றது. எமது நாளாந்த வாழ்வில் பல விடயங்களில் இறைவனின் அனுமதியற்ற பல செயற்பாடுகள், ஆசைகள், உணர்வுகளால் எம் வாழ்வை சிதைத்து விடுகின்றோம். அச்சந்தர்ப்பங்களில் எமது செயல், ஆசை, உணர்வுகளுக்கு இறைவனிடம் அனுமதி கிடைக்குமா? என அவரோடு ஜெபத்தில் தரித்திருந்து அறிந்து கொள்ள வேண்டும். இறை அனுமதியோடு செயற்படும் அனைத்து காரியங்களும் நம் வாழ்விற்கு வெற்றியையே தரும். இறைவனின் பார்வையில் எது சரியோ அதுவே அவரது அனுமதி இதையே நாம் தேட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! எப்போதும் உமது அனுமதி பெற்று எம் வாழ்வில் ஆயத்தங்கள் செய்ய எங்களுக்கு உதவி செய்தருளும்.

திங்கள் : உலகின் தோல்வியையும், வெட்கத்தையும் நாம் பெற்றுக் கொள்ளாமல் உம் அனுமதிப் பெற்று வெற்றி வாழ்வை வாழ உதவி செய்தருளும்.

செவ்வாய் : இறைவா! நீர் பிதாவின் சித்தத்தை அறிந்து இவ்வுலகில் செயற்ப்பட்டது போல நாமும் வாழ உதவி செய்தருளும்.

புதன் : உலக ஆசா பாசங்களுக்கு நாம் அடிமையாகாமல் உமது ராஜ்யத்தின் விழுமியங்களை காத்து கொள்ள உதவி செய்தருளும்.

வியாழன் : ஆண்டவரே! பொருற்களை தேடி அலையாமல் இருப்பதே போதுமென்ற மன பக்குவத்தை தந்தருளும்.

வெள்ளி : இறைவா! உம்சித்தம் இல்லாமல் நாம் ஆரம்பிக்கும் எந்த செயற்பாடுகளும் வெற்றி பெறாது என்ற எண்ணத்தை தந்தருளும்.

சனி : ஆண்டவரே! இறை அனுமதியற்ற உறவுகளை நாம் தவிர்த்து உமது வழியில் நடந்துக்கொள்ள உதவியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 28

# என் பின் பக்கத்தைக் காண்பாய்

என் கரத்தை எடுப்பேன் அப்போது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார். (யாத் 33:23)

ஊழியப் பாதையிலே பல தடவை கடவுளோடு போராடியிருக்கிறேன். ஊழியத்தில் இணைந்து கொண்டதே போராட்டத்தில்தான். 1991ம் ஆண்டு கா.பொ.த உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்த காலம் நாட்டில் வன்முறை போராட்டத்தின் மத்தியில் பயங்கரவாதியாக குற்றம் சாட்டப்பட்டு முகாமில் இடப்பட்ட போது மரணத்தின் விளிம்புக்கே சென்று வந்தவன் நான். வீதியில் எரியூட்டப்படும் டயர்களில் இளைஞர்கள் வீதியில் எரிந்து கொல்லப்படும் சூழ்நிலையில் முதல் தடவையாக முழந்தாலில் நின்று "ஆண்டவரே உமக்கு சித்தமானால் என்னை விடுவியும்.என் வாழ் நாளை உமக்கு அர்ப்பணிக்கிறேன்" என்ற ஜெபமே என்னை அதிசயிக்கத் தக்க விதத்தில் விடுவித்தது.

2000ம் ஆண்டு மீண்டும் புடமிடப்பட்டேன். தலையில் காணப்பட்ட சிறு கட்டியைப் பரிசோதித்து வைத்தியர் அது புற்றுநோய் என்று தெரிவித்த போது அதிர்ந்து போனேன். என் குடும்பம் உடைந்து போனது. அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளாலும் பெறப்பட்ட பரிசோதனை அறிக்கைகளாலும், உடலும் உள்ளமும் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த வேளை கண்ணீரோடு வைத்தியசாலை கட்டிலிலே அமர்ந்து ஆண்டவரை நோக்கி மீண்டும் ஜெபித்தது நினைவிருக்கிறது. "ஆண்டவரே என்னை உருவாக்கியவரே திருப்பணியில் நடத்தியவரே என் வாழ்வு உம் கரத்தில், சித்தமானால் என்னை இந்த உபத்திரவத்தில் நின்று விடுவியும்"

திருமறையை புரட்டிய போது 'ஆண்டவரே உம் முகத்தை எனக்கு காண்பியும்"என்பது மோசேயின் விருப்பம் ஆனால் ஆண்டவரோ என் பின் பக்கத்தை காண்பாய்" என்கிறார். மோசே எல்லாவற்றையும் முடித்து கடந்து செல்லும் ஆண்டவரை காண்கிறார். நாம் முன்னால் பார்க்க நினைக்கும் போதெல்லாம் முறையிட விரும்பும் போதெல்லாம் அண்டவரோ எல்லாவற்றையும் நேர்த்தியாய் முடித்து கடந்து செல்வதையே பார்கின்றோம். அவர் எனக்கு முன்னாக சென்று வழிகளை செவ்வைபண்ணுபவர் என்பது என்னைக் குணப்படுத்தியது. முன்னயதை விட அதிக பலத்தையும் ஆர்வத்தையும் ஆண்டவர் அடியேனுக்கு அருளி செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : குற்றம் சாட்டப்பட்டு விசாரணையின்றி பல ஆண்டு காலம் சிறையில் வாடும் யுவதிகளை கண்நோக்கும்.

திங்கள் : திருப்பணி வாழ்வில் போராட்டங்களைக் கண்டு சோர்ந்து போகாதிருக்க உதவிசெய்யும்.

செவ்வாய் : பல வித கொடிய நோய்களால் அவதியுறும் மக்களை விடுவித்தருளும்

புதன் : எவ்வித பயமுறுத்தல்கள் சவால்கள் மத்தியிலும் விசுவாசத்தை கைவிடாதிருக்க உதவிசெய்யும்.

வியாழன் : மனிதனை நம்புவதை பார்க்கிலும் உம்மில் நம்பிக்கையாய் இருந்து உலக சிற்றின் பங்களுக்கு விலகி நடக்க உதவிசெய்யும்.

வெள்ளி : கைவிடப்பட்டோர், நலிவுற்றோர், அவதியில் உழல்வோர் யாவருக்கும் உற்ற துணையாக இருந்தருளும்.

சனி : வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும், கிடைத்தாலும், இழந்தாலும்,நிறைவிலும், குறைவிலும் நீரே ஆண்டவர்! என்று உணரச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 29

# சில துன்பங்கள் புரியாத புதிர்களே

என்னை பற்றிய உம் அறிவு எனக்கு மிகவும் வியப்பாயுள்ளது அது உன்னதமானது என் அறிவுக்கு எட்டாதது (சங் 139:6)

ஒல்லாந்தர் காலத்திலே கட்டப்பட்ட புராதனக் கோட்டையொன்று யாழ்ப்பாணத்திலே இருந்தது. அந்த கட்டிடத்திலே நான்கு தூண்களை கொண்டு அமைந்திருக்கும் ஒரு கட்டிடம்தான் ஒல்லாந்தர்காலத்தில் கட்டப்பட்ட தூக்குமேடை. ஒல்லாந்தர் காலத்திலே எத்தனை பேர் அத்தூக்குமேடையிலே தூக்கு போடப்பட்டிருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கும் போது உடலெல்லாம் சிலிர்த்துப் போகிறது. எனது பாடசாலை நாட்களிலே பல தடவைகள் இந்த கோட்டைக்குப் போயிருக்கிறேன். இக் கோட்டையைத் தாண்டி முனியப்பர் கோவில் பக்கமாக நடந்து போனால் வீரசிங்கம் மண்டபம் இருக்கிறது. அதற்கு எதிர்புறத்தே தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் இறந்துபோன பொது மக்களின் நினைவுச் சின்னங்கள். நமது நாட்டிலே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு அதிகமாக நடந்து வருகின்ற போரும், காலத்திற்கு காலம் நடைபெற்ற இன வன்முறைகளும், சில வருடங்களுக்கு முன்பு இயற்கையின் அனர்த்தத்தால் உருவான சுனாமி பேரலைகளும் மக்கள் மனதிலே எத்தனையோ நினைவு சின்னங்களை வடுக்களாக உருவாக்கியிருக்கின்றன. இந்நிகழ்வுகளை பற்றி சிந்தித்து பார்க்கின்ற போதெல்லாம் 'ஏன்' என்ற வினா எழும்புகிறது. ஆனால் பதில் கிடைக்கவில்லை.

சில சந்தர்ப்பங்களில் நாம் எழுப்பும் வினாக்களுக்கு சுலபமாக விடைகள் கிடைத்து விடுகின்றன. இன்னும் சில சந்தர்ப்பங்கள் நமது வாழ்வில் புரியாத புதிர்களாகவே அமைந்து விடுகின்றன. யுத்தத்திலே இடைநடுவில் அகப்பட்டு இறந்து போகும் மக்கள், வாகன விபத்துகளில் பலியாகும் மனிதர்கள் இப்படி ஒவ்வொரு சம்பவத்தை சுற்றிலும் அழுகுரல்களையும், வேதனை பெருமூச்சுகளையும் கேட்க முடிகிறது. ஆனால் இவைகளுக்கும் விடைகள் கிடைக்கவில்லை.

என்னுடைய திருப்பணியிலே வைத்தியசாலை கட்டிலிலே உட்கார்ந்து நோயோடு போராடும் நோயாளிகளைப் பார்த்து வேதனை தாங்க முடியாமல் கண்ணீர் விட்டிருக்கிறேன். நமது வாழ்க்கையிலே இறைவனின் திருச் சமுகத்திலே எம்மை தாழ்மைப்படுத்த வேண்டிய ஒரு பகுதி 'துன்பம்' என்ற பகுதி தான். "இறைவன் நம்மோடு இருக்கிறார், அவர் நமது வேதனையை புரிந்து கொள்கிறார்" என்று கூற கூடுமானால் அது சிறப்பானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் எங்களை ஆராய்ந்து அறிந்து எம் தேவைகளை சந்தித்தருளும்.

திங்கள் : உம் நினைவுகள் எம் நினைவுகள் அல்ல என்பதை உணர்ந்து வாழ உதவியருளும்

செவ்வாய் : இயேசுவே! உமது திட்டங்களை அறிந்துக் கொள்ள எம்மால் முடியாது என்பதை உணர்த்தியருளும்.

புதன் : இறைவா! எம் வாழ்வில் ஆசீர்வாதங்களை பெற்று உம்மை துதிக்கும் வேளையில் துன்பங்கள் மத்தியிலும் உம்மை துதிக்க கற்று தாரும்

வியாழன் : கடவுளே! எம் வாழ்வின் சம்பவங்களை உமக்கே ஒப்புக்கொடுத்து நீர் நடத்தும் வழியில் செல்ல உதவியருளும்

வெள்ளி : இயேசுவே! எவ்வகையான துன்பத்திலும் நாம் சோர்ந்து போகாமல் விசுவாசங்களை வர்த்திக் கப்பண்ணும்

சனி : இயேசுவே! உமது சிலுவையை சுமக்கும் சீடர்களாக எங்களை மாறப்பண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 30

# கடவுளின் கோபம்

"மனிதனின் இதயத்தின் நினைவுகள் தோற்றங்கள் எல்லாம் நித்தமும் பொல்லாதது எனக்கண்டு மனிதனை உண்டாக்கியதற்காக கடவுள் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்திற்கு எரிச்சலாக இருந்தது". (ஆதியா 6:5-6)

மனிதனின் இருதயம் பொல்லாதது. அதுவே எல்லாவற்றுக்கும் பிரதான ஊற்று. மனிதர்களாகிய நாம் எமது இதயங்களைக் கட்டுப்படுத்தி காவல் செய்யவேண்டும். திருமறையில் கடவுள் நம்மை படைத்த பின்பு மனிதனை ஏன் படைத்தேன் என்று எண்ணி மனஸ்தாபப்படுகிறார். இதன் கருத்து நாம் கடவுளைக் கவலைபடுத்துகிறோம் என்பதாகும். உலகப் பெற்றார் தமது பிள்ளைகள் தங்களை மனஸ்தாபப்படுத்தும் போது கிடைக்கின்ற வேதனைகளை நாம் அறிந்திருக்கிறோம்.

எனவே பிள்ளைகள் எங்களை வேதனை படுத்த கூடாதென விரும்புகிறோம். இவ்வாறே எம்மைப் படைத்த பரமதந்தையை நாம் வேதனைப்படுத்தாது; எமது இருதயத்தை அதன் சிந்தனைகளை காத்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். எமது சமூகத்தில் எத்தனை வன்முறைகள். எத்தனை தீய பழக்கங்கள். எத்தனை துரோகச் செயல்கள் எத்தனை கொலைகள், கொள்ளைகள். இவை அனைத்தும் கடவுளின் படைப்புகளாகிய நாம் எமது இதயத்தின் தீய சிந்தனைகளினால் நடப்பிப்பவையாகவும் உள்ளன. நமது நாளாந்த வாழ்க்கையில் தொடர்பு சாதனங்கள் நமக்கு தருகின்ற செய்திகளில் ஒன்று மனிதன் மனிதனாக வாழவில்லை. மனிதன் மனிதனாக வாழாத சம்பவங்களை பத்திரிக்கைகள் தொலைக்காட்சிகள் திரும்பவும் திரும்பவும் எடுத்து காட்டுகின்றன.

இந்த நிலையை இறைவன் உற்று நோக்கி கண்ணீர் வடிக்கின்றார், வேதனை படுகின்றார். திருமறை இன்னுமொரு விடயத்தையும் கூறுகின்றது. கடவுள் கவலைப்பட்டு மனம் விசனப்பட்டார் என கூறுகிறது. இங்கு கடவுளின் கோபம் குறிப்பிடப்படுகிறது. ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் கடவுள் மனிதனை வெள்ளப் பெருக்கின் ஊடாக அழித்து விடுவதை காண்கின்றோம். கடவுள் கவலைப்படுகின்றவர் மட்டுமல்ல. அவர் கோபப்படுகிறவராகவும் எங்களை தண்டிக்கிறவர் ஆகவும் இருக்கின்றார். எனவே கடவுளின் பிள்ளைகளாக கடவுளை கோபப்படுத்தாது அவரின் தண்டனைகளை தவிர்த்து ஒரு சமாதான உலகத்தை குடும்பத்தை சமூகத்தை நாட்டையும் கட்டியெழுப்புவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! என் உள்ளங்களின் நினைவுகளை நெறி படுத்தியருளும்.

திங்கள் : நாம் மனிதவாழ்வின் விழுமியங்களை காத்துக் கொள்ள எம்மை பக்குவப்படுத்தியருளும்.

செவ்வாய் : ஆண்டவரே! எப்போதும் நாம் நிதானத்தோடு வாழ எமக்கு உதவியருளும்.

புதன் : இறைவா! உலக ஆசைகள் எம்மை நெருக்கும் போது அவற்றில் இருந்து விடுவிக்க உமது உதவிதாரும்.

வியாழன் : இறைவா! எம் மீறுதல்களை மன்னித்து உம் இரக்கத்தை எம் மீது வைத்தருளும்.

வெள்ளி : உமது நியாயதீர்ப்பு எமக்கு ஒரு எச்சரிப்பாக உள்ளது என்பதை உணரச்செய்யும்.

சனி : எந்நிலையிலும் எமது வாழ்வை காத்து கொள்ள உமது பாதுகாப்பை தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 31

# இச்சையடக்கமுள்ள சரீரம்

உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் மகிமைப்படுத்துங்கள். (1 கொரி 6:20)

இதை கருப் பொருளாக எடுத்து கொண்டால் வேதத்தில் பல இடங்களில் நம் சிந்தனையை செலுத்தலாம். கவனமாக வாசிக்கவும். (ரோமர் 12:1-2) (1கொரி 3:16-6:19-9:24-26-12:12-27)

(1கொரி 9:24-26) : பந்தயச் சாலையில் ஓடுகிறவன் கிரீடத்தை பெறும்படிக்கு சரீரத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். சரீரத்தை எந்தளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க கூடுமோ அந்தளவு வெற்றியும் நிச்சயம். அதே போல பரலோக கிரீடத்தை பெறும் படிக்கு நாம் ஆன்மீக இச்சையடக்கத்தை கடைப்பிடித்து அதன்படி வாழ வேண்டும். ஜெபம் என்னும் தேக பயிற்சி வேத வசனத்தின் போஷாக்கு பந்தயத்தின் விதி முறையான ஆன்மீக நடைமுறை செயல்பாடுகளை விரிவாக்கி அழியாத கிரீடமாகிய பரலோக கிரீடத்தை பெறத்தக்கதாக முயற்சி செய்வோம்.

(ரோமர் 12:1-2): நம் உயிர் உடல் இரண்டும் கடவுளுக்குரியது. அதை நாம் அவருக்கு தூய்மையுள்ளதாக இவ்வுலக வாழ்விலேயே ஒப்புவிக்க வேண்டும். அதை அவர் எடுத்து அவருக்கு பிரியமானபடி பயன்படுத்துவார். அதை விட மகிழ்ச்சி வேறில்லை. எம் சரீரங்களை இச்சையடக்கமாய் பாதுகாத்து பின்பு தேவனுடைய கரத்தில் ஒப்புவிப்போம்.

(1கொரி 3:16 6:19) எம் சரீரம் பரிசுத்ததேவன் வாசம் பண்ணும் ஆலயமாயிருக்கிறது. அதனை தீய காரியங்களுக்கு விட்டு கொடுப்போமானால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வசிக்க முடியாமல் போய் விடும். அது சகிக்க முடியாத வேதனையாக இருக்கும். தன் ஆசைகளை கட்டுப்படுத்த தவறிய தாவீது பாவத்தில் வீழ்ந்தான்.

(1கொரி 12:12-27) சரீரத்தில் பல அவயவயங்கள் உண்டு. ஆனாலும் அது ஒரே சரீரமாயிருக்கிறது. இங்கே பல்வகை பட்டவர்கள் மத்தியில் ஒற்றுமையை குறிக்கிறது. பல்வகை பட்ட அவயவயங்களுக்கு பல்வகை பட்டவேலைகள் உண்டு. அது ஒவ்வொன்றும் சரீரத்தின் நன்மையை கருதியே நடப்பிக்க படுகின்றது. இதுபோலவே எம் சபையும் இருக்கிறது. நாமும் பிரிந்து வேறுபட்டு இருக்காமல் சரீரமாகிய கிறிஸ்துவின் வளர்ச்சிக்காக பரிசுத்த ஆவியானவர் மூலம் ஒன்று பட்டுபணியாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : பரலோகத்தின் ஆண்டவரே! பரலோக எதிர் பார்ப்போடு வாழ உதவிசெய்யும்.

திங்கள் : பிதாவே! வேதவார்த்தையை அதிகமாக தியானிக்கின்ற கிருபையை தாரும்.

செவ்வாய் : இறைவா! உம்முடைய ஆலயமாகிய சரீரத்திலே நான் செய்த தீயதான காரியங்களை மன்னியும்.

புதன் : என்னுடைய வாழ்க்கையை பரிசுத்தமாக வாழ்வதோடு உமக்கு அர்ப்பணித்து வாழவும் உதவிசெய்யும்.

வியாழன் : கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒற்றுமை, ஐக்கியம் காணப்பட உதவி செய்யும்.

வெள்ளி : இறைவா! எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்ற பொறுப்புகளை சரிவர செய்ய உதவிசெய்யும்.

சனி : பிதாவே! நாங்கள் திருச்சபையாக உம்முடைய பணியை செய்ய, நிறைவேற்ற கிருபையை தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 32

# லேயாள் அழகற்றவள்

லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்று கர்த்தர் என் சிறுமையை பார்த்தருளினார். இப்போது என் புருஷன் என்னை நேசிப்பார் என்று அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள். (ஆதி 29:32)

பழைய ஏற்பாட்டிலே நாம் ஒரு சம்பவத்தை வாசிக்கின்றோம். லேயாள், ராகேல் என்னும் இரண்டு பெண் பிள்ளைகள் லாபானுக்கு இருந்தனர் ஆனால் லேயாளுடைய கண்கள் கூச்ச பார்வையாயிருந்தது. ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயியிருந்தாள் என்று வேதம் கூறுகின்றது. இவர்களை மணம் முடித்த யாக்கோபு ராகேலையே அதிகமாய் நேசித்தான் என்று ஆதி:29ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். லேயாள் அற்பமாக எண்ணப்பட்டாள், என்று கர்த்தர் கண்டு அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

ராகேலோ மலடியாயிருந்தாள். லேயாள் ஒரு குமாரனை பெற்று இப்பொழுது என் கணவன் ராகேலைவிட என்னை நேசிப்பார் என்று தன் மூத்த குமாரனுக்கு ரூபன் என்று பெயரிட்டாள், அவள் ஒவ்வொரு பிள்ளைகளையும் பெற்றெடுத்து கர்த்தரை துதிக்கின்றாள். ஆனால் அவருடைய கணவனோ அவளை ராகேலை போல நேசிக்கவில்லை. ஆனால் கர்த்தர் லேயாளின் வாழ்க்கையிலே பெரிய அதிசயங்களை செய்தார். ஆறு ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் கொடுத்து அவளை கனம் பண்ணினார். யூதா என்னும் லேயாளின் மகனின் கோத்திரத்தையே இந்த உலகத்தை இரட்சிக்க வந்த இயேசு கிறிஸ்து தெரிந்தெடுத்து இப்பூமியில் அவதரித்தார்.

அவ்வளவுக்கு அதிகமாய் லேயாளை கர்த்தர் நேசித்தார். சகோதரியே நீயும் உன் குடும்பத்தில் அற்பமாக எண்ணப்படுகின்றாயா? யாரும் என்னை மதிக்கவில்லையே நான் அழகில்லையே எல்லோரும் விரும்பத்தக்க உருவம் எனக்கில்லையே அல்லது தேவன் ஏன் அவ்விதமாய்ப் படைத்தார் என்று கலக்கத்தோடு இருக்கின்றீர்களா? கலங்கி திகையாதே! தேவன் உன் மூலமாக பெரிய காரியங்களை செய்ய போகின்றதினாலே நீ அவரை பாடித் துதி. தேவன் மேல் நம்பிக்கையாயிரு கர்த்தர் உனக்காக யாவையும் செய்து முடிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! தாழ்வு மனப் பான்மையோடு இருக்கின்றவர்களுக்கு வேண்டிய ஆறதலை தாரும்.

திங்கள் : இறைவா! எங்களிடத்தில் காணப்படும் மேட்டிமையான எண்ணங்களில் இருந்து விடுதலை பெற உதவிசெய்யும்.

செவ்வாய் : ஆண்டவரே! நாங்கள் லேயாளை போல எந்த சூழ்நிலையிலும் உம்மை துதிக்க உதவி செய்தருளும்.

புதன் : இறைவா! வெளியரங்கமான ஆடம்பரங்களுக்கு எங்களை விலக்கி காத்தருளும்.

வியாழன் : ஆண்டவரே! நாங்கள் இறுமாப்பு கொள்ளாமல் உம்மிலே தங்கி வாழ உதவி செய்தருளும்.

வெள்ளி : இறைவா! நாங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளும் போதும் உம்மை துதிக்க உமக்கு நன்றி செலுத்தும் மனப் பக்குவத்தை தந்தருளும்.

சனி : பிதாவே! எங்களுடைய வாழ்க்கையில் எதிர் காலத்தின் ஆசீர்வாதங்கள் எல்லாம் ஜோதிகளின் பிதாவாகிய உம்மிடத்திலிருந்து வருகிறது என்பதை விசுவாசிக்க கிருபை தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 33

# இன்னும் மயக்கமா?

அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது. (சங் 115:5)

வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படும், நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை நடைபெறுவதற்கு முன்பு அனத்தீசியா எனும் மயக்க மருந்தை கொடுப்பார்கள். இதன் நோக்கம் சத்திர சிகிச்சை செய்ய படுபவர் எவ்வித உணர்வும் அற்றவராக தனது உடலின் தசையையும் நரம்புகளையும் கூரான ஆயுதங்களினால் வெட்டும் போது நோவுகள் எதுவுமே உணரபடாமல் இருக்க வேண்டும் என்பதே. இம்மயக்க மருந்து கொடுக்கப்பட்டவர் தன்னை சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதையும் யார் என்ன செய்கிறார்கள் என்பதையும் அருகில் உள்ளவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதையும் கேட்கவோ பார்க்கவோ உணரவோ முடியாதவராக காணப்படுவார். இவ்வாறே சிலைகளும் பார்க்க முடியாதவைகளாக கேட்க முடியாதவைகளாக உணர முடியாதவைகளாக இருக்கின்றன. மேலும் மனித பிணங்கள் எந்த உணர்வும் அற்று ஒரு உடலாக காணப்படும்.

சிலவேளைகளில் கிறிஸ்தவர்களாகிய நாமும் மயக்க மருந்து உட்கொண்ட கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து வருகின்றோம். எம்மை சுற்றி சம்பவிப்பவைகளை காண்பதும் இல்லை உணர்வதும் இல்லை கேட்பதும் இல்லை. எமது கிறிஸ்தவ கீதங்களில் அன்பே பிரதானம் சகோதர அன்பே பிரதானம் எனபாடுகின்றோம். ஆனால் நம் சகோதரனில் அயலானில் அன்பு செலுத்த தவறி விடுகின்றோம். இவ்வாறே சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என திருமறையில் அருளுரை கேட்டுவிட்டு சமாதானத்தையே குழப்பிவிடுகின்ற கிறிஸ்தவர்களாக வாழ்ந்து வருகின்றோம்.

இவ்வாறான செயல்பாடுகள் எமது பாடல்களுக்கும் திருமறைக்கும் தொடர்பற்றவை. இவ்வாறான கிறிஸ்தவ வாழ்வு மயக்க மருந்துக்குள்ளான நோயாளிக்கும், உயிரிழந்த மனித உடலுக்கும் ஒப்பாயிருக்கின்றது. எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது நாம் மயக்க நிலையில் வாழும் வாழ்வு அல்ல மாறாக பொருள் உள்ளதாகவும் உயிருள்ளதாகவும் உணர்வுள்ளதாகவும் அமையவேண்டும். ஆலயத்திற்கு வந்தோம் பாடல்களைப் பாடினோம் அருளுரைகளை கேட்டோம் எனும் திருப்தி மட்டும் இல்லாது
பிற மக்கள் மீது அன்பு கொண்டு வாழும் வாழ்வாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : நல்ல ஆண்டவரே! நான் உணர்வுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ எமக்கு உதவியருளும்.

திங்கள் : இறைவா! எம்மை சுற்றி வாழும் அயலாரில் கரிசனை கொள்ள எம்மை ஏவியருளும்.

செவ்வாய் : நாம் அனலும் இல்லாமல் குளிரும் இல்லாமல் வெதுவெதுப்பாக வாழும் நிலையில் இருந்து எம்மை மாற்றியருளும்.

புதன் : இறைவா! நாங்கள் கேட்பவற்றையும், கற்று கொள்பவற்றையும்
செயற்படுத்த எம்மை ஏவியருளும்.

வியாழன் : எம் வாழ்வில் செயற்பாட்டோடே கூடிய விசுவாசத்தின் உறுதியை தந்தருளும்.

வெள்ளி : உம் திருமறையிலும் அருளுரைகளிலும் நாம் கற்று கொள்பவற்றை நடைமுறை
படுத்த உதவியருளும்.

சனி : இறைவா! வாழ்வில் உயிருள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு உதவியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 34

# விழிப்புணர்வுள்ளவர்களாக வாழ்தல்

நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?
(மத் 16:13-17)

தன்னை யார் என்று அறிந்திருந்த இயேசு தன்னை சுற்றியிருந்த சீடர்களிடம் ஜனங்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்? நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்? என்று இரண்டு வினாக்களை கேட்கின்றார். இவ்வினாக்கள் மூலம் சீடர்கள் தம்மை யார் என்று அறிந்துகொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். நமது ஆன்மீக பயணத்தில் ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்ற அழைக்கப்பட்டுள்ள நாம், நம்மை குறித்து விழிப்புணர்வு உள்ளவர்களாக(self awareness) இருப்பது மிகவும் முக்கியமானதாகும். நாம் நம்மையார் என்று அறிந்திருப்பது முக்கியமானது. அது போலவே நம்மை சுற்றியிருப்பவர்கள் நம்மையார் என்று சொல்கிறார்கள்? என்பதும் நமக்கு நெருக்கமானவர்கள் நம்மை யார் என்று சொல்கிறார்கள்? என்பதும் நம்மை பற்றி நாம் அறிந்து கொள்ள உதவும்.

தன்னுணர்வு உள்ளவர்களாக இருப்பதற்கு முதலாவது படி: எனது பலம் என்ன? எனது திறமைகள் என்ன? எனது பலவீனம் என்ன? நான் எவற்றில் குறைவுள்ளவனாக இருக்கின்றேன்? நான் இன்னும் வளர்த்து கொள்ள வேண்டிய பகுதிகள் எவை? என்று உங்களை ஆராய்ந்து பாருங்கள்.

தன்னுணர்வு உள்ளவர்களாக இருப்பதற்கு இரண்டாவது படி: உங்களைப் பற்றிசுற்றி இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதாகும். உங்கள் எதிரிகள் நீங்கள் திருத்தி கொள்ளவேண்டிய விடயங்களை பற்றிய விமர்சனங்களை சொல்லுவார்கள். உங்கள் நண்பர்கள் உங்களிடமுள்ள சிறப்பானவை பற்றிய நல்ல விமர்சனங்களைச் சொல்லுவார்கள். உங்களுடன் ஒன்றாய் வாழ்வோர் உங்கள் உண்மையான குணாதிசயங்களை பற்றி சொல்லுவார்கள்.

எனவே உங்களை சுற்றியுள்ளவர்களை கவனித்து கேளுங்கள். உங்கள் பலம் என்ன? உங்கள் பலவீனம் என்ன என்று சொல்கிறார்கள்? உங்கள் திறமை என்ன என்று சொல்கிறார்கள்? நீங்கள் வளர வேண்டிய பகுதி என்ன என்று சொல்கிறார்கள்? "தன்னுணர்வுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தங்களை மேம்படுத்தி கொள்ளுவார்கள். இறையரசில் மேன்மை அடைவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் எப்படி பட்டவர் என்பதை அறிந்து கொள்ள கூடிய விழிப்புணர்வை தந்தருளும்.

திங்கள் : இறைவா! எங்களுடைய ஆன்மீக பயணத்திலே உம்முடைய அடிச்சுவடை பின்பற்றி செல்ல உதவி செய்தருளும்.

செவ்வாய் : ஆண்டவரே! நான் என்னை பற்றி என்னுடைய பெலம் என்னுடைய பெலவீனம் எது என்பதை அறிந்து கொள்ள உதவி செய்தருளும்.

புதன் : இறைவா! நான் மற்றவர்கள் என்னை எப்படி பட்டவராக நினைக்கிறார்கள் என்பதை யோசிப்பதை பார்க்கிலும் உம்முடைய பார்வைக்கு நான் எப்படிபட்டவளாக அல்லது எப்படிப்பட்டவனாக நடந்து கொள்கிறேன் என்பதை ஆராய்ந்து பார்க்க உதவி செய்தருளும்.

வியாழன் : ஆண்டவா! நான் என்னைச் சரி செய்து கொள்ள வேண்டியவற்றில் சரி செய்து கொண்டு உம்மோடு ஒப்புரவாகி நடக்க உதவி செய்தருளும்.

வெள்ளி : இறைவா! உம்முடைய அரசின் பணிக்காக செயல்பட எனக்கு வாஞ்சையை தந்தருளும்.

சனி : ஆண்டவரே! நான் திருச்சபை என்கின்ற குடும்பத்தில் நானும் ஒரு அங்கத்தவர் என்றும் அதில் எனக்கும் பொறுப்புக்கள் இருக்கிறது என்பதை மறவாது இருக்க உதவி செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 35

# நீ எங்கே இருக்கிறாய்?

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு "நீ எங்கே இருக்கிறாய்?" என்று கேட்டார். (ஆதி 3:1-10)

ஆதாமுக்கும் அவனது வாழ்வை குறித்து ஒருநோக்கம் இருந்தது. எதைச்செய்ய வேண்டும்? எந்த இடத்திலே இருக்கவேண்டும்? என்ற இலக்கு இருந்தது. ஆனால் ஆதாம் தன்னை சுற்றியுள்ளவர்களால், சூழலால் தனது இலக்கைவிட்டு திசை திருப்பப்படுகிறான். ஆதாமின் தெரிவு அவன் இருக்கவேண்டிய இடத்தை விட்டுவிலகி, வேறு இடத்தில் மறைந்திருக்க காரணமாகியது. எனவே கடவுள் ஆதாமை பார்த்து கேட்கிறார் நீ எங்கே இருக்கிறாய்? (ஆதி 3: 1-10)

உங்கள் வாழ்விற்கும் ஒரு நோக்கம், இலக்கு இருக்கிறது. அந்த பாதையிலே எதைத் தெரிவது என்பது உங்களுக்கு முன்பாக வருகின்றது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நாளும் உங்களுக்கு முன்பாக தெரிவுகள் வருகின்றன. இப்போது இதில் எதைச் செய்வது? இதில் எதைத் தெரிந்தெடுப்பது? இதில் யாரை பின்பற்றுவது? எந்த இடத்தில்? யாருடன்? என உங்களுக்கு முன்னால் பல விருப்ப தெரிவுகள்வரும். உங்களை சுற்றி உள்ளவர்கள் அல்லது நீங்கள் வாழுகின்ற சூழல் உங்கள் தெரிவுகளில் செல்வாக்கு செலுத்த முற்படும். இவ்வாறு நீங்கள் செய்யும் சில தெரிவுகள் உங்களை, உங்கள் நோக்கத்திற்கும், இலக்கிற்கும் நேரே கொண்டு செல்லும். சில தெரிவுகள் உங்கள் வாழ்வின் நோக்கத்தையும் இலக்குகளையும் விட்டு விலக்கி வேறு பாதையிலே கொண்டு செல்ல கூடியவை.

உங்கள் தெரிவைப் பொறுத்துத்தான் உங்கள் வாழ்க்கை வடிவமைக்கப்படுகிறது. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை உங்கள் தெரிவுதான் தீர்மானிக்கின்றது. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதையும் உங்கள் தெரிவுதான் தீர்மானிக்கின்றது.ஐ போட் ( iPod, iPhone, and iPad) என்றால் நினைவுக்கு வருபவர் **Steve Jobs**(ஸ்டீவ் ஜாப்ஸ்). அவர் தனக்கு முன்னால் பல தெரிவுகளை எதிர்கொள்ளும் வேளைகளில் எல்லாம் தன்னை தானே இது என் வாழ்வின் இறுதி இரவாக இருந்தால் நான் என்ன செய்வேன்? என்று கேட்டு கொண்டு தனது வாழ்வின் நோக்கத்திற்கும் இலக்கிற்கும் பொருத்தமானதை தெரிவு செய்வாராம். நமக்கு முன் தெரிவுகள் வரும்போது நமது வாழ்வின் நோக்கத்திற்கும், இலக்குகளுக்கும் ஏற்ப தெரிவு செய்ய ஆயத்தமாயிருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : என் வாழ்வில் உம்முடைய நோக்கத்தை கண்டு கொள்ள உதவி செய்தருளும்.

திங்கள் : வாழ்வின் இலக்குகளை விட்டு விலகாமல் நடக்க கற்று தாரும்.

செவ்வாய் : இறைவா! உம்முடைய நோக்கத்தை விட்டு பிழையான வழியில் செல்கின்றவர்களை நீரே அவர்களுக்கு வேண்டிய ஞானத்தை கொடுத்தருளும்.

புதன் : ஆண்டவரே! நாங்கள் வாழ்க்கையில் நல்ல தீர்மானங்களை எடுக்க தூய ஆவியானவரின் வழிநடத்துதலை தந்தருளும்.

வியாழன் : இறைவா! நீர் என்னுடைய வாழ்வில் விரும்புகிற பாதைகளை சரியான வழியில் இனங்கண்டு கொள்ள உதவிசெய்யும்.

வெள்ளி : நாம் செய்யும் தீர்மானங்கள் சரியான உறவுகளை பெலப்படுத்த உதவிசெய்யும்.

சனி : எனது வாழ்வின் நோக்கத்திற்கும், இலக்குகளுக்கும் அமைவாக தெரிவுகளை மேற்கொள்ள ஞானத்தை அருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 36

# கடவுள் படைத்த உலகம்

கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்து கொண்டு வந்து அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். (ஆதி 2:15)

கடவுள் உலகத்தைப் படைத்து அதில் மனிதனையும் வைத்து அவர்களை பல்கி பெருக பண்ணவும் உலகத்தை ஆண்டு கொள்ளவும் கட்டளை கொடுத்தார். அதாவது மனிதர்களை அரசர்களாக இராஜாக்களாக உலகை ஆண்டு கொள்ளும் படி கட்டளையிட்டார். அரசர்கள் தம் மக்களை நல்ல முறையில் ஆட்சிசெய்தால் நாடும் அதன் மக்களும் சந்தோசமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பார்கள். தவறான முறையில் ஆட்சி நடத்தினால் நாடும் நாட்டு மக்களும் சீரழிந்து விடுவார்கள்.

இவ்வாறே கடவுள் படைத்த உலகத்தை ஆள பிறந்த நாமும் அதை நல்ல முறையில் ஆண்டு பராமரித்து வரவேண்டும். இன்று நம் வாழ்வை காவுகொள்ளுகின்ற இயற்கையின் அனர்த்தங்களைகாணும் போதும், கேட்கும் போதும் அவற்றை அனுபவிக்கும் போதும் நாம் இந்த உலகத்தை ஆண்டு கொள்ளும் முறை தவறானது எனப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஓசோன் படையில் துவாரம், சுனாமி வெள்ளப் பெருக்கு, பூமியதிர்ச்சி உலகின் பலபகுதிகள் அதிலுள்ள மக்கள் அனைவரும் சீர் குலையும் நிலையில் எமது உலகம் உள்ளது. இதற்கு காரணம் யார்? நானும் நீங்களும் தான். எனவே நாம் இவ்வளவு காலமும் கடவுள் தந்த பொறுப்பை உதாசீனம் செய்து எம்மீது இயற்கையின் சீற்றத்தை சம்பாதித்து கொண்டோம்.

எனவே இனி மேலும் இயற்கையை கோபப்படுத்தும் எமது செயல்களை விடுத்து இயற்கையை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவோமாக பிளாஸ்டிக் பொருட்களை வாங்குவதையும் மரங்கள் வெட்டுவதையும் பொது இடங்களில் குப்பை போடுவதையும் தவிர்த்து மரங்களை நாட்டி சுற்று சூழலை துப்பரவு செய்து எம்மை நாம் பாதுகாப்பதிலும், அழகுபடுத்துவதிலும், அதிககவனம் செலுத்துவது போல, எம் நாட்டையும், உலகத்தையும், இயற்கையையும் அழிவுகளிலிருந்து பாதுகாக்கவும், உலகை பண்படுத்தவும், அதனை சரிசெய்யவும் கடவுள் எதிர்பார்க்கின்ற மனிதர்களாக இராஜாக்களாக வாழ முடிவு செய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! இவ்வுலகத்தை ஆண்டு கொள்ள உம் ஆசிகளை தந்தீர், நீர் தந்த பொறுப்புக்க-ளை காத்துகொள்ள உதவி யருளும்.

திங்கள் : இறைவா! இயற்கையில் நீர் வாழ்கின்றீர் உம்மை அதில் கண்டு கொள்ள வழிகாட்டும்.

செவ்வாய் : ஆண்டவரே! நீர் தரும் உயிர் மூச்சு உம் படைப்புகளில் இருந்து உருவாகுவதை எமக்கு உணர்த்தியருளும்.

புதன் : இவ்வுலகத்தில் நாம் பலுகி பெருகி உமக்கு உதவியாய் வாழ எம்மை ஏவியருளும்.

வியாழன் : இவ்வுலகில் நம் வாழ்வை நாமே அழித்து கொள்ளாமல் அதை காத்து கொள்ளும் ஞானத்தை தாரும்.

வெள்ளி : இயற்கையின் சீற்றத்தினால் எமது சந்ததி அழிந்துவிடாமல் எம்மை பாதுகாத்தருளும்.

சனி : எம்வாழ்வு அனைத்துமே உமக்கு மகிமையாக அமைய எங்களுக்கு வழி காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 37

# கிறிஸ்தவ பெற்றோரும், கிறிஸ்தவ பிள்ளைகளும்

"இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத் 3:17)

தந்தையாகவோ, தாயாகவோ வாழ்வதென்பது வாழ்க்கையில் கிடைக்கும் நல்லதொரு அனுபவம். குடும்பம் என்பது ஆண்டவர் உருவாக்கிய அமைப்பாக வேதாகமம் கூறுகின்றது. வேதாகமத்திலே பெற்றோரை பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் போதனைகளும் கதைகளும் நிறைந்து இருக்கின்றன. ஆண்டவர் உருவாக்கிய இவ்வமைப்பிலே பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றுதான் பெற்றோரை பொறுப்புள்ளவர்களாக வாழ ஆண்டவர் அழைத்திருப்பது. பிள்ளைகள் கடவுளுக்கு உகந்தவர்களாக உருவாக்கப்படுவதற்கு பெற்றோரின் பங்களிப்பு முக்கியமானதொன்று.

அதே போல பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாராட்டக் கற்று கொள்ள வேண்டியதும் முக்கியமானதொன்று. பெற்றோரின் பாராட்டை பெறாது வளரும் பிள்ளைகள் மற்றவர்களை பாராட்ட கற்று கொள்வதில்லை. மற்றவர்கள் வாழ்க்கையில் உள்ள குறைவுகள் பெரிதாக தெரிகின்றனவே அல்லாமல் அவர்கள் வாழ்க்கையில் இருக்கும் சிறப்புகள் தெரிவதில்லை.

பிள்ளைகளில் பெற்றோர் அன்பு வைத்திருக்கின்றார்கள் என்பதை பிள்ளைகள் உணரும் வகையில் பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும். பெற்றோரின் அன்பை உணர்ந்து கொள்ளாத பிள்ளைகள் தமது உள்ளத்திலே ஆற்ற முடியாத வடுக்களை சுமப்பதினால், அவர்கள் வளர்ந்து வரும் போது உறவுகள் பாதிக்கப்படுகின்றன. இன்று இளைஞரிடையே குடும்ப சிக்கல்களும், விவாகரத்துக்களும் அதிகரித்து வருவதன் ஒரு காரணம் பிள்ளைகள் தாம் வளர்ந்த குடும்பங்களில் பெற்றோரின் அன்பை உணர்ந்து கொள்ளாதது என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

தந்தையாகிய கடவுள் "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்"(.மத்தேயு 3:17) என கூறுவதன் மூலம் தமது அன்பை உறுதிப்படுத்துகிறார். எல்லா பிள்ளைகளும் நிபந்தனையற்ற அன்புக்கு தகுதியானவர்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

பிள்ளைகள் பெற்றோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். பெற்றோர்கள் மூலம் கடவுளின் அன்பு பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. உங்கள் பெற்றோருடன் சேர்ந்து மகிழ்ச்சியை அனுபவிக்க முயற்சி செய்யுங்கள்.கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் வாழ்க்கைப் பயணத்தை வேதாகமத்தை வாசிப்பதின் மூலமும் பெற்றோருடன் கலந்து உரையாடுவதின் மூலம் ஆரம்பியுங்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் ஆண்டவர் கொடுத்திருக்கும் கொடை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் எங்களுக்கு கொடுத்திருக்கிற குடும்பத்திற்காகவும் அதன் அங்கத்தவர் ஒவ்வொருவருக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

திங்கள் : பிதாவே! நீர் கொடுத்த உறவுகளை மதித்து ஒருவரை ஒருவர் நேசித்து வாழ உதவி செய்தருளும்.

செவ்வாய் : இறைவா! பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் ஆகவே அவர்களை உமக்கு ஏற்ற விதமாக வளர்க்க உம்முடைய ஞானத்தை தந்தருளும்.

புதன் : ஆண்டவரே! குடும்பத்தில் எந்த சூழ்நிலை யிலும் நீர் கொடுத்த சமாதானத்தை இழந்து போகாத வண்ணம் காத்துக் கொள்ளும்.

வியாழன் : இறைவா! பெற்றோர் பிள்ளைகள் இடையே நல்ல புரிந்துனர்வை கொடுத்தருளும்.

வெள்ளி : இறைவா! நாங்கள் குடும்பமாக உமது அரசின் பணியை கட்டியெழுப்ப உதவி செய்தருளும்.

சனி : ஆண்டவரே! நாங்கள் குடும்பமாக அநேகருக்காக ஜெபிக்க உதவிசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 38

# இறைவன் தரும் விடுதலை

எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட.
(யோவா 5:8)

ஒழுங்காக ஆலயத்திற்கு போகின்ற வழக்கம் நம்மிலே பலருக்கு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஆலயத்திற்கு போக ஆயத்த படுகின்றபோது அன்றைய வழிப்பாட்டை பற்றி ஒரு எதிர்பார்ப்பு நமக்குள் இருக்கிறது. வழிபாட்டுக்கு ஊடாக ஆண்டவர் நம்மை சந்திக்க வேண்டும், நமது குறைகளை கேட்டு அவற்றிற்கு பதில் கொடுக்க வேண்டும். எம்மையும் எம்மைசுற்றி இருக்கும் அன்பானவர்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்புகளிலே சில.

வேதாகமத்திலே பெதஸ்தா என்ற குளத்தின் அருகே உட்கார்ந்து 38வருடமாக வியாதிபட்டிருந்த மனிதனின் கதை ஒன்றை யோவான் 5ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். பெதஸ்தா என்ற குளத்து தண்ணீர் கலக்கப்படும் போது அதில் எவன் முதலில் இறங்குகிறானோ அவனுக்கு சுகம் கிடைக்கும் என்பது அந்நாளின் நம்பிக்கை. அப்படியான இடத்தில் நீண்டகாலமாக வியாதிபட்டிருந்த இந்த மனிதன் உட்கார்ந்து இருக்கிறான். அந்த இடத்திற்கு இயேசு வந்து அந்த மனிதனை பார்த்து "நீ சுகமடைய வேண்டும் என்று விரும்புகிறாயா" (யோவா5:6) என்று கேட்கிறார்.

பெதஸ்தா என்ற குளத்தின் அருகில் உட்கார்ந்து இருந்த வியாதிபட்டவர்களை காணும் போதே அவர்கள் சுகம் பெற தான் வந்திருக்கிறார்கள் என்பது இயேசுவிற்கு தெரிந்திருக்க வேண்டும். அப்படியிருக்க உனக்கு சுகம் வேண்டுமா எனக் கேட்கிறார்.
நமது வாழ்க்கையில் சுகம் பெறவேண்டுவது போல நாம் தோற்றம் அழித்தாலும், உண்மையில் சுகம் பெறவிரும்புகிறோமா என்பதை ஆண்டவர் நம்மிடத்தில் அறிய விரும்புகிறார். ஆண்டவர் நமக்கு தரும் சுகத்தை உளரீதியாகவும், உடல்ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நமக்குள்ளே இருக்குமானால், அதன் உண்மை நிலையை ஆண்டவர் அறிய விரும்புகிறார். நாம் மனம் திறந்து ஆண்டவரிடத்தில் விடுதலையை கேட்கும் போது விடுதலையை தர ஆயத்தம் உள்ளவராக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : வழிப்பாடுகளில் கலந்து கொள்ளும் போது அவ்வழிபாடுகளுக்கூடாக ஆண்டவரே எம்மைச் சந்தியும்.

திங்கள் : எமது வாழ்வில் ஆண்டவரே நீர் தரும் சுகத்தைப் பெற்றுக் கொள்ள வாஞ்சிக்கின்றேன்.

செவ்வாய் : நான் பங்குபெறும் வழிப்பாடுகள் வெறும் சடங்காக மாறிப்போகாதிருக்கஉதவிசெய்யும்.

புதன் : ஆண்டவரே! உமது செயல்பாடு எனது வாழ்க்கையில் இருக்க, உமக்காக என்னை ஒப்படைக்க உதவிசெய்யும்.

வியாழன் : நாம் பங்குபெறும் வழிபாடுகள் உம்மோடு இருக்கும் உறவை உறுதி படுத்துகின்றனவா? என்பதை உறுதி படுத்த உதவி செய்யும்

வெள்ளி : உமது மணவாட்டியாக உருவாக்கப்பட்ட திருச்சபை பெலப்பட்டு பணியாற்ற எமது பங்களிப்பை கொடுக்க வழிநடத்த வேண்டுகின்றோம்.

சனி : திருச்சபைகளுக்குள் இருக்கும் ஒற்றுமை யின்மை. பொறாமை, சண்டைசச்சரவுகள் எல்லாவற்றையும் சுகப்படுத்தும் ஆண்டவர் நீர் என்பதை உணர செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 39

# தேவ ஜனங்களுக்கு பாவ மன்னிப்பு கொடுத்தல்

மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும் படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார். (மாற் 10:45)

இயேசு கிறிஸ்துவானவர் இந்த உலகத்தில் வந்ததிற்கான நோக்கம் தன்னுடைய ஜீவியத்தை எங்களுக்காக அர்ப்பணிப்பதற்காகவே. இந்த வசனத்தில் காணலாம். இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு அண்மித்த காலத்தில் என்று மாற்கு இந்த வார்த்தையை எழுதினார். ஏனென்றால் ஏனைய சம்பவங்கள் எரிகோவை பற்றி அதை தொடர்ந்து எருசலேமில் நடந்த சம்பவங்களை ஒன்றன் பின் ஒன்றாக சொல்கிறார். கொலோசெயர் நிருபத்தில் பவுல் இப்படியாக கூறுகிறார். கொலோ1:13-14 அந்தகாரத்தில் இருந்து நம்மை விடுதலையாக்கி ...நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் நம்முடைய பெலத்தினாலும், திறமையினாலும் பாவ மன்னிப்பை பெற்று கொள்ள முடியாது என்பதை தெளிவாக கூறுகிறார். எங்களுடைய நற்கிரியைகளினாலும்,உள்ளான பரிசுத்தத்தினாலும் பாவ மன்னிப்பை பெற்று கொள்ள முடியாது. தேவபிள்ளைகளாகிய நமக்கு பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பதற்கு தம்முடைய ஒரே பேறான குமாரனுடைய மரணம் பாவமில்லாத பலியாக எண்ண பட்டபடியால்.,
இப்படியாக நாம் இலவசமாக பெற்ற மன்னிப்பை ஒருவருக்கொருவர் இலவசமாகவும், நிபந்தனையற்றதாகவும் கொடுக்க வேண்டும். (மத் 18:21-35) இரக்கமற்ற ஊழியனின் உவமை இதற்கு நல்லதொரு உதாரணம்.

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற கொள்கையைவிட மேலான சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதின் விளைவுகளை நாம் அனுதினமும் காண்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில வாழ்கின்ற எங்களுக்கு தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற இலவசமான மன்னிப்பு ஒரு புரட்சிகரமானது. கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்துவை அறியாத சமூகத்திற்கு ஒரு சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் இருக்கின்றனர். இந்த சவால்கள் மத்தியில் எமது திருச்சபையானது 200வது ஆண்டில் கால்பதித்து உள்ளது. நாம் இலவசமாக பெற்று கொண்ட பாவ மன்னிப்பை எப்படி மற்றவர்களுக்கு கொடுத்து, மற்றவர்களை ஏற்று கொள்ளுகிறோம் என்பதில் தான் திருச்சபையின் எதிர்காலம் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையை மற்றவர்களுக்கு சொல்ல ஏவியருளும்.

திங்கள் : அன்பான தேவனே! நீர் கொடுக்கும் பாவ மன்னிப்பை உண்மையான மனஸ்தாபத்தோடு பெற்று கொள்ள உதவியருளும்.

செவ்வாய் : பாவமன்னிப்பை பற்றி அறியாமல் தங்களுடைய வாழ்க்கையை சீரழித்து கொண்டு இருக்கிறவர்களுக்கு இரக்கம் காட்டியருளும்.

புதன் : பரிசுத்தமுள்ள தேவனே! உம்முடைய பிள்ளைகளாகிய எங்களுக்கு பரிசுத்தமாய் வாழ கிருபை தாரும்.

வியாழன் : அன்பின் ஆண்டவரே! உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் ஒன்றிணைந்து சாட்சியாக வாழ மன்றாடுகிறோம்.

வெள்ளி : சிலுவையின் மீட்பை கொடுத்த இயேசுவே உம்முடைய தியாகத்தை உதாரணமாக கொண்டு வாழ உதவிசெய்தருளும்.

சனி : அன்பின் தேவனே! உம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு உம்முடைய வழிநடத்துதலையும், தரிசனத்தையும் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 40

# பிறர்குற்றங்களை மன்னித்தல்

நாம் பிறர் குற்றங்களை மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' (மத்தேயு 6:12)

மிருகக் காட்சிச்சாலை ஒன்றிலே யானைகள் பலமுள்ள சங்கிலிகளினால் தூண்களோடு பிணைக்கப்பட்டிருந்தன. ஆனால் ஒரு யானை மட்டும் ஒரு மெல்லிய நைலோன் கயிற்றினாலே கட்டப்பட்டிருந்தது. அங்கு வந்த ஒரு மனிதர் யானைகளுக்கு பொறுப்பாக இருந்த மனிதரைப் பார்த்து என்ன இந்த யானையை சிறிய கயிற்றினாலே கட்டி இருக்கிறீர்களே சற்று இழுத்தாலே அறுந்து விடுமே என்று கூறினார். அதற்கு அந்த யானைகளுக்கு பொறுப்பாக இருந்த மனிதன் இந்த யானை, இங்குதான் பிறந்தது. சிறிய குட்டியாக இருந்தபோது இப்படி ஒரு கயிற்றினாலே தான் கட்டி வைத்திருந்தோம். கயிற்றை கழற்றுவதற்காக எவ்வளவோ முயற்சி செய்தது. ஒவ்வொரு முறையும் கயிற்றை இழுக்கும் போதெல்லாம் கால்களை கயிறு வெட்டி புண் உண்டானது.

கயிற்றை இழுத்தால் அது கால்களை வெட்டி புண் உண்டாக்கும் என்பதை யானைக் குட்டி கற்று கொண்டது. இப்போது அது பெரிய யானையாக வளர்ந்தாலும் கயிற்றை இழுத்தால் கால்களிலே புண் வரும் என்ற பாடம் தான் நினைவுக்கு வருகிறது, கயிற்றை அறுத்து விட்டு ஓடிவிடலாம் என்று நினைப்பதில்லை.

நமக்கு ஆண்டவர் மன்னிப்பு கொடுத்திருக்கிறார் என்று கூறும்போது அக்கூற்று நமக்கு விடுதலையை தருகிறது. இந்த விடுதலையைப் பயன்படுத்த முடியாமல் இன்னும் கட்டப்பட்ட உணர்வில் வாழ்வது கூட்டுக்குள்ளே அடைக்கப்பட்டிருக்கும் பறவையொன்று வெளியேயிருக்கும் அழகான நீலவானத்தை பார்த்து ஏங்குவதை போன்றது.

மன்னிப்பின் சிறப்பை நம்மால் புரிந்து கொள்ள முடியாமற் போவதற்கு காரணம் நம்மால் மற்றவர்களை மன்னிக்க முடியாமற் போவதுதான். இதனால் தானோ என்னவோ நாம் பிறர் குற்றங்களை மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று இயேசுவே எமக்கு சொல்லி கொடுத்திருக்கிறார். இம்மன்னிப்பு நம்மை விடுதலை யாக்குவது மட்டுமல்ல இதை ஏற்றுக் கொண்டவர்களை விடுதலை நிலையிலேயே வைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! நீர் கற்பித்து தந்த ஜெப வாழ்வை எம் வாழ்வில் செயல்படுத்த உதவியருளும்.

திங்கள் : ஆண்டவரே நாம் வாழ்ந்த வாழ்க்கையிலே அடிமைகளாக இருந்துவிடாமல் எமக்கு கிடைக்கின்ற நல்வாழ்வை நோக்கி பயணம் செய்ய உதவியருளும்.

செவ்வாய் : எம்மோடு பகையாக இருப்பவர்களோடு மன்னிக்க, ஒப்புரவாக எம்மை ஏவியருளும்.

புதன் : பாரம் சுமப்பவர்களுக்கு விடுதலை தரும் எங்கள் இறைவா! எமது குடும்பம் இதயம் சமூகம் இவற்றின் பாரங்களை சுமந்து தீர்க்க உதவியருளும்.

வியாழன் : எம் காணிக்கைகளை உமக்கு ஒப்படைக்கும் முன்பு ஒப்புரவாகுதலின் ஆவியை எம் மீது ஊற்றியருளும்.

வெள்ளி : பாவத்தில் இருந்த எங்களை மன்னித்து விட்டீர் இதுவே உமது மாட்சிமை. அவ்வாறே நாமும் பிறர் குற்றங்களை மன்னிக்க கற்று தாரும்.

சனி : கோபம், வெறுப்பு, பிடிவாதம் எனும் இரும்பு சங்கிலிகளில் இருந்து விடுதலை பெற்று உமது வழி நடத்துதலுக்குள் வர எங்களுக்கு உதவியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 41

# புரிந்து கொள்ளமுடியாத மன்னிப்பு

ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாக குற்றம் செய்தால் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று கேட்டபோது இயேசு ஏழுதரம் மாத்திரம் அல்ல ஏழெழுபது தரமட்டும் என்றார். (மத் 18:21-22)

கெட்டகுமாரனின் கதையிலே வரும் மகன் தன்னுடைய வாழ்க்கையிலே விரும்பியவாறு எல்லாம் வாழ்ந்து, ஒரு நிலையிலே தவறு செய்து விட்டேன் என்பதை உணருகின்றான். தவறு செய்துவிட்டேனென்று உணர்கிற நேரம் அக்கால யூத சமூகத்திலே இழிவாக கருதப்பட்ட பன்றிகள் பராமரிக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறான். பன்றிகளை பராமரிப்பதிலும் பார்க்க வீட்டிற்கு திரும்பி போவது நல்லதென நினைக்கிறான். வீட்டிலேபோய் தனது தந்தையை சந்திக்கும் போது எனக்கு ஒரு வேலைக்காரனாய் வேலை போட்டு தாருங்கள் என கேட்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தனது பயணத்தை ஆரம்பிக்கின்றான்.

அவன் வீட்டை விட்டு சென்ற நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் தட்டையான வீட்டு கூரையின் மேல் ஏறி எனது மகன் வரமாட்டானா என அத்தந்தை காத்திருந்ததை மகன் அறிந்திருக்க நியாயமில்லை. வழமைபோல மகன் வருவானா என்ற ஆதங்கத்தோடு உற்று பார்த்த தந்தைக்கு மகன் தூரத்திலே வருவது தெரிகிறது. ஆர்வத்தோடு அந்த மகனை சந்திக்க ஓடி போகிறார் அத்தந்தை. மகன் அருகே வந்ததும் மகனை கட்டியணைத்து முத்தமிடுகிறார்.

"இவன் கைகளுக்கு மோதிரத்தை அணிவியுங்கள், கால்களுக்கு பாதரட்சையை போடுங்கள், பெரிய விருந்தை ஆயத்தம் செய்யுங்கள், என் மகன் மீண்டும் வீடு வந்து விட்டான்" என்று சத்தமிடுகிறார் அத்தந்தை. நமது வாழ்க்கையிலே தவறிழைத்திருக்கலாம், மற்றவர்களின் அவதூறுகளுக்கும், ஏளன சொற்களுக்கும் ஆளாகியிருக்கலாம். நாம் செய்த தவறிலிருந்து நம்மை திருத்தி கொள்ள வேண்டு மென்பது உண்மை தான்.

அதே நேரம் நாம் இறைவனின் மகன்களாகவும், மகள்களாகவும் இருக்கிறோம் என்பதை நினைத்து நமது வீட்டிற்கான பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறான மன்னிப்பு புரிந்து கொள்ள கடினமானதொன்று. நமது புத்திசாலித்தனத்தை, கல்வியைப் பயன்படுத்தி எத்தனையோ காரியங்களை எம்மால் சாதிக்க முடியும். இவையனைத்தும் நமது முயற்சியால் கிடைத்த கொடைகள். ஆனால் மன்னிப்பை நம்மால் சம்பாதிக்க முடியாது. அது இறைவனால் இலவசமாக நமக்கு கொடுக்கப்படும் கொடை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! எம் உள்ளங்களில் நிபந்தனையற்ற மன்னிப்பின் நற்செய்தியை வைத்தருளும்.

திங்கள் : ஆண்டவரே! எம் மீறுதல்களையும், குற்றங்களையும் மன்னித்தருளும்.

செவ்வாய் : இறைவா! உமக்கு எதிராக எம் உள்ளங்களை திருப்பி உமக்கு உதவாதவர்களாக எம்மை தள்ளி விடாதேயும்.

புதன் : இயேசுவே! உம் நேசக்கரங்கள் எப்போதும் எம்பக்கம் ஆதரிக்க ஆயத்தமாக இருக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

வியாழன் : நாம் எம் வாழ்வில் உமக்கு ஏற்புடையவர்களாகாமல் வாழ்ந்தாலும் எம்மை மன்னித்து உம் சமுகத்தில் ஏற்று கொள்ளும்.

வெள்ளி : ஆண்டவரே! எம் குற்றங்களை நீர் மன்னிப்பது போல நாமும் பிறர் குற்றங்களை மன்னிக்க ஏவியருளும்.

சனி : மனந்திரும்பும் எம் சகோதரர்களை மன்னித்து அவர்களோடு ஒப்புரவாக எம்மை வழிநடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 42

# நேர்மையான மனிதன் தாவீது

"மனுஷன் முகத்தைபார்ப்பான் கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்." (1 சாமு 16:7)

கடவுள் மனிதன் நேர்மையானவனாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார். மெதடிஸ்த வரலாறு கூறுகின்றது. "நேர்மையீனம் மெதடிஸ்தனுக்கு ஒத்துவராது" கடவுள் மனிதரை பார்க்கிற பார்வை ஒரு வித்தியாசமான பார்வை. மனிதனுடைய வெளித் தோற்றம் எப்படியும் இருக்கலாம். ஆனால் மனிதனுடைய இருதயத்தின் தோற்றமே ஒரு மனிதனை அளவிடக் கூடியதாக இருக்கும். தாவீது ஒரு நேர்மையானவர் என்பது அவருடைய இருதயத்தை பார்த்த கர்த்தரின் பார்வையில் வெளிக்காட்டப்படுகின்றது.

தாவீது சிறுவயது முதல் வாழ்வின் இறுதிவரை நேர்மையானவராகவே வாழ்ந்தார். அவருடைய நேர்மையான வாழ்வுக்கு அடித்தளமிட்டது அவருடைய ஜெப வாழ்வு. பெரிய தீர்மானங்களை–முடிவுகளை எடுப்பதற்கு கர்த்தரிடம் காத்திருந்து ஜெபித்து கர்த்தர் சொல்வதை கேட்டு உணர்ந்து செயல்படுவார். இதனால் கர்த்தருடைய சித்தத்தை ஜெபித்து புரிந்துகொள்வார். இது வாழ்வில் வெற்றியையும் வளமான ஆசீர்வாதத்தையும் கொடுத்தது.

கர்த்தருடைய சித்தத்தை அறிந்து வாழ்வில் நாமும் செயல் பட்டால் வளமான ஆசீர்வாதம் பெறலாம். 1 சாமுவேல் 30:8 தாவீதின் வாழ்வில் ஏற்பட்ட விழுகை பாரதூரமானது. இச்சைகொள்ளும் போது இது விழுகைக்கு வழிகோலும். அப்படியான சந்தர்ப்பத்தில் கடவுள் தமது தாசர்களை கொண்டு கண்டனத்தையும் மனந்திரும்ப வேண்டிய நேர்மையான செயல்பாட்டையும் சுட்டிக்காட்டுகின்றார்.

நாத்தான்வேல் சொன்ன வார்த்தைகளால் வெட்கி தலைகுனிந்த தாவீது தன் நிலையை உணர்ந்து கடவுளிடம் மன்றாடுகின்றான். 51 ம் சங்கீதம் இதன் பிரதிபலிப்பே. மனமுடைந்து பாவங்களை விட்டுவிட விரையும் ஒவ்வொருவரும் நேர்மையானவர்கள் ஆகுகின்றார்கள். இதனால் தாவீது "தேவனே சுத்த இருதயத்தை என்னில் சிருஸ்டியும் நிலைவரமான ஆவியை உள்ளத்தில் புதுப்பியும்."சங்கீதம் 51:10. என ஜெபிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இறைவா! நான் உள்ளத்தில் உமக்கு உண்மையாய் இருக்க கற்றுத்தாரும்.

திங்கள் : ஆண்டவா! எனது உள்ளத்தில் இருக்கும் தீய சிந்தனைகளை எடுத்து போட்டருளும்.

செவ்வாய் : இறைவா! நான் விழுந்து போகின்ற சந்தர்ப்பங்க -ளில் எனக்கு அவற்றை உணர்த்தியருளும்.

புதன் : ஆண்டவரே! நான் எந்த நிலைமையிலே விழுந்தாலும் நீர் என்னை வெறுக்காமல் நான் மனந்திரும்பி வாழவாய்ப்பு தருகிறபடியினால் உமக்குநன்றி.

வியாழன் : இறைவா! நீர் உடைந்துபோன இருதயத்தை தேற்றுகின்ற ஆண்டவராக இருக்கிறபடியால் உமக்கு நன்றி.

வெள்ளி : ஆண்டவரே! என்னுடைய இருதயத்தைநீர் வாசம் பண்ணும் விதமாக தூய்மைப்படுத்தும்.

சனி : ஆண்டவரே! நான் நேர்மையுள்ளவராக வாழ கற்று தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 43

# ஆறுதலின் கரம்

என் ஆத்துமா பால் மறந்த குழந்தையை போல் இருக்கிறது. (சங் 131:2)

எல்லா மனிதர்களும் சந்தோஷமாகவும், சுகமாகவும் வாழ்வதற்கே விருப்பம். ஆனால் இப்படி பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு சமுதாயத்தில் அநேக தடைகள் உண்டு. எங்களுடைய வாழ்க்கை ஓட்டத்திலே முகம் கொடுக்கவேண்டிய சோதனை, போராட்டம், துன்பம், வேதனை, வியாதி, இழப்பு, இப்படிப்பட்ட அனுபவங்களுக்கு ஊடாக வாழ்க்கையில் கஸ்டப்படுகிறோம்.

மாமிச இச்சைகள், சுயநலம், பெருமை இப்படிப்பட்ட காரணங்களினாலே சமாதானத்தை இழந்து குழப்பமான நிலைக்கு தள்ள படுகிறோம். இவ்விதமாக நம்முடைய வாழ்க்கை அமைதியற்று போகிறது. ஆனாலும் நாம் சமாதானமாக வாழ முயற்சிக்கின்றோம். நம்முடைய ஆன்மா கூட அமைதியை தேடுகிறது.

சங்கீதம் 131, இந்த சங்கீதம் நமக்கு ஒரு பெலனும், வழிநடத்துதலையும் கொடுக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு தாய் இருந்தாலும் தன்னுடைய கருவறையில் இருக்கும் குழந்தைக்கு எந்த பாதிப்பும் வராமல் பாதுகாக்கின்றாள். அக்கருவறையில் பூரண பாதுகாப்போடும், சமாதானத்தோடும் அமைதியாக அக்குழந்தை இருக்கிறது. அதே போல தேவனுடைய கரமும் நம்மை பாதுகாக்கிறது. இந்த உலகத்தில் யாராலும், எவற்றாலும் கொடுக்க முடியாத சமாதானத்தையும், பாதுகாப்பையும், அமைதியையும் தேவன் நமக்கு கொடுக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : தேவனே! தாயின் கருவில் அமைதியாக இருக்கின்ற குழந்தையை போன்று உமக்குள் நாங்கள் இருக்க அழைக்கப்படுகின்றோம் என்பதை எங்களுக்கு உணர்த்தியருளும்.

திங்கள் : அன்பான தேவனே! எனக்கு ஆறுதலாக இருக்க முடியாமல் இருக்கின்ற தடைகளை எடுத்து போட்டருளும்.

செவ்வாய் : இரக்கமுள்ள தேவனே! பலதரப்பட்ட பிரச்சினைகள், போராட்டங்கள், எதிர்பாராத இழப்புகள் மத்தியில் அமைதியற்று இருப்பவர்களுக்கு ஆறுதலை கொடுத்தருளும்.

புதன் : இறைவா! வாழ்க்கையில் கஷ்டங்கள் போராட்டங்களுக்கு ஊடாக உம்முடைய இரக்கத்தையும், உம்முடைய பாடுகளையும் தியானிக்க உதவிசெய்தருளும்.

வியாழன் : அன்பான தேவனே! குழப்பமான சூழ்நிலையில் இருக்கின்ற மக்கள் மத்தியில் உம்முடைய ஆறுதலான வார்த்தையை கொண்டு செல்ல எங்களது வாயையும், கால்களையும், அபிஷேகம் பண்ணியருளும்.

வெள்ளி : ஆண்டவரே! ஆறுதலற்று இருக்கின்ற உம்முடைய பிள்ளைகளுக்கு உம்முடைய ஆறுதலை பெற்று கொள்ள உதவியருளும்.

சனி : பிதாவே! நாங்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையாக இருந்து உம்முடைய திருச்சபையில் பணியை ஆற்ற உதவிசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையாக முன்செல்ல...

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை நோக்கி ஸ்தோத்தரிக்கின்றோம். (கொலோ1:13)

வாகனத்தின் சாவியை கையில் வைத்த வண்ணமாக வாகனத்தின் சாரதி இந்த வாகனத்தை முன் நோக்கி எடுத்து செல்வது எப்படி என்று ஒரு கேள்வியை கேட்பாரானால், சாவியை பாவித்து கியரை இயங்க செய்து வாகனத்தை ஓட்டி செல்லுங்கள் என்பதுதான் பதில். சபை முன் செல்ல முடியாமல் தடையாக இருக்க கூடிய விடயங்கள் பல இருக்கலாம். இதில் 3 விடயங்களை குறித்து எம் கவனத்தை செலுத்துவோம். கிறிஸ்தவ தனித்துவத்தை பற்றிய புரிந்துணர்வு இல்லாமை அந்தகார வல்லமையிலிருந்து ஒருவனை தேவன் மீட்டெடுத்து அன்பின் குமாரனுடைய இராஜ்யத்தின் பிள்ளைகளாக மாற்றுவதின் மூலம் அவன் கிறிஸ்தவன் எனப்படுகிறான். கொலோ1:13 இது சிந்தனையல்ல இது செயலாக உள்ளது மனிதனுக்காக தேவன் நிறைவேற்றிய இச்செயல் எம் ஒவ்வொருவருடைய வாழ்வில் உண்மையாய் இருத்தல் வேண்டும்.

கிறிஸ்தவ சபையானது தேவன் மூலம் இப்பூமியில் நிறுவப்பட்ட வலிமை வாய்ந்த தாபனம் இதை பற்றிய புரிந்துணர்வில்லாமை இந்தக்... (மத் 16:18-19) இப்படியான தேவனுடைய அதிகாரத்தை பெற்ற மற்றுமொரு தாபனம் இருக்க முடியுமா? ஆதலால் கிறிஸ்தவ சபை ஒரு இயக்கமோ நிறுவனமோ அல்லது ஜீவனுள்ள பாகமாக இருக்கிறது. (church is not an organization,it is an organism)இது தான் உண்மை நல்ல புரிந்துணர்வுடன் சபையின் அதிகாரத்தை வலுவடைய செய்தல் எம்மீது விழுந்த கடமையாகும். சபையானது ஆசீர்வாதத்தை கொண்டு செல்ல கூடிய சமூகம் என்ற புரிந்துணர்வு இல்லாமை.

பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவே கிறிஸ்தவன் அழைக்கப்பட்டுள்ளான். விசுவாசத்தின் பிதாவாகிய ஆபிரகாமின் அழைப்பு இதை மேலும் உறுதிப் படுத்துகிறது. ஆதி12:3 சபை ஊழியத்தை பெறுவதற்கு அல்ல ஊழியம் செய்வதற்காகவும் பூமியின் சகல குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கவும் அழைக்கப்பட்டுள்ளது. சபை விசுவாசத்தின் ஜனசமூகமாக இருக்கின்றது. சபைக்கு தலையாக இருக்கின்ற இயேசு இவ்வாறு கூறினார். நான் எமக்கு சரியான புரிந்துணர்வு இல்லாமையினால் சபை செயல் திறன் அற்று காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : உமது இராஜ்யம் இப்பூமியில் ஸ்தாபிக்க படத்தக்கதாக சபையாக நாம் ஒன்றிணைந்து முன் செல்ல எம்மை துரித படுத்தியருளும்.

திங்கள் : தேவனே! கிறிஸ்தவ தனித்துவத்தை குறித்து நல்ல புரிந்துணர்வை எமக்குத்தாரும்.

செவ்வாய் : பிதாவே! எமது தனித்துவத்தை அடைய எமக்கு உதவி செய்யும்.

புதன் : இயேசுவே! உமது அதிகாரத்தை பெற்றுக் கொள்ள எம்மை தகுதியாக்கும்.

வியாழன் : குமாரனே! எமது சபை, உங்களால் இப்பூமியில் உருவாக்கப்பட ஜீவனுள்ள சரீரமாக மாற்றியருளும்.

வெள்ளி : பரிசுத்த ஆவியானவரே! எம் ஒவ்வொருவரையும் இப்பூமியின் ஆசீர்வாதமாக மாற்றி அருளும்.

சனி : கர்த்தாவே! எமது சபையினூடாக செய்யப்படும் சகல பணிகளும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைய மாற்றியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 45

# தோல்வி வாழ்வின் பின்னடைவா?

என் கால் சறுக்குகிறது என்று சொல்லும், உமது கிருபை என்னை தாங்குகிறது. (சங் 94:18)

பேதுரு சீடர்களோடு கலிலேயா கடலிலே மீன் பிடித்து கொண்டிருக்கிறார், அப்போது இயேசு அவர்களோடு இருக்கவில்லை. திடீரென்று இயேசு கடலிலே நடந்து வருவதை காண்கிறார்கள். ''ஆண்டவரே நான் உம்மிடம் நடந்துவரவா?'' என்று கேட்கிறார் பேதுரு. ''வா'' என்கிறார் இயேசு. அந்த கணத்திலே பேதுருவுக்கு கடலோ, இருளோ எதுவுமே தெரியவில்லை. படகைவிட்டிறங்கினார், இயேசுவை நோக்கி தண்ணீரின் மேலே நடக்க ஆரம்பிக்கிறார்.

தைரியத்தோடு பயணத்தை ஆரம்பித்த பேதுருவுக்கு அரைவாசி தூரம் தான் நடக்க முடிந்தது. படகுக்குள்ளேயிருந்து எந்த வித முயற்சியுமே செய்யாமலிருந்த ஏனைய சீடரை போலல்லாது பேதுரு பயணத்தை ஆரம்பித்தார். ஆனால் அரைவாசி தூரம் நடந்து போன பேதுரு, தண்ணீரிலே அமிழ்ந்து போனார் என்பதை தான் பேசி கொள்ளுகிறோமே தவிர பேதுரு அரைவாசி தூரம் நடந்து போனதை பற்றி பேசுவது கிடையாது. முயற்சி செய்கிறவர்களின் கையிலே தான் நாளை இருக்கிறது என்பது நினைத்து பார்க்க வேண்டியதொன்று.

பேதுருவின் வாழ்க்கையிலே நடைபெற்ற இப்படியான தோல்விகள் தான் அவரை உறுதியுள்ள ஒரு திருத்தூதுவராக மாற்றியிருக்க வேண்டும். பெந்தேகொஸ்தே நாள் அன்று பல நூற்றுக்கணக்கான யூதர்கள் கூடியிருந்த இடத்திலே ஒரு பெண்ணுக்குப் பயந்து இயேசுவை மறுதலித்த பேதுரு ''நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவை குறித்து பேசுகிறோம்'' என்று அறைகூவல் விடுகிறார். இயேசுவை மறுதலித்த மனிதர், இயேசுவை பற்றி பேசுவதை நிறுத்தாமல் இறுதிவரை நற்செய்தியாளராக பணியாற்றி சிலுவையிலே தலைகீழாக அறையப்பட்டு கொலை செய்யப்பட்டதாக திருச்சபை பாரம்பரியங்கள் கூறுகின்றன.

பேதுருவின் திருப்பணியிலே, தம்முடைய விசுவாச வாழ்விலே தோற்றுப் போன பலரை அவர் சந்திந்திருக்க கூடும். அவர்களுக்கு இவர் கற்றுக் கொடுத்த அழகான பாடம் தோல்விகள் வாழ்க்கையின் இறுதி நிலைகள் அல்ல. கடவுள் வாழ்க்கையில் தோல்வியுற்ற மனிதர்களையும், பெலவீனமானவர்களையும் தமதுபணியிலே இணைத்துக் கொள்ளுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : பிதாவே! உம்முடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்தருளும்.

திங்கள் : பிதாவே! எங்களுக்கு முன் இருக்கும் பிரச்சினைகளை பார்க்காது உம்மை பார்த்து முன்னோக்கி நடக்க உதவி செய்தருளும்.

செவ்வாய் : ஆண்டவரே! எங்களுடைய இயலாமையிலே, எங்களுடைய இழப்பிலே நம்பிக்கையை தந்தருளும்.

புதன் : நாங்கள் சோர்ந்து போகிற நேரங்களில் தைரியமாக நடக்க உதவி செய்தருளும்.

வியாழன் : பிதாவே! நீரே எங்களுடைய வீழ்ச்சியிலும், இயலாமையிலும் எங்களுக்கு ஜெயத்தை தந்தருளும்.

வெள்ளி : ஆண்டவரே! எங்கள் ஒவ்வொருவரையும் நீர் உம்முடைய பணிக்காக அழைத்திருக்கிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

சனி : ஆண்டவரே! நீர் எங்களை கரம் பிடித்து வழி நடத்துகிற ஆண்டவராயிருக்கிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம்

இறைவன் தரும் கொடைகள் உம்முடைய அடியானாகிய நான் போய் இந்த பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன் (1 சாமு 17:32)

தாவீது ஒரு சிறு பையன். ஆனால் அவனுடைய மனதிலே துணிவிருந்தது. அந்த துணிவு தான் அங்கிருந்த படைவீரர்களையும் தாண்டி முன்னே போய் "நான் அரசரை காண விரும்புகிறேன்" என்று சொல்லவைத்தது. அங்கிருந்த ஒரு போர்வீரன் புன் சிரிப்போடு குனிந்து தாவீதை பார்க்கிறான். "என்ன சொன்னாய்"? அரசரைப்பார்க்க விரும்புகிறாயா"? மீண்டும் தாவீதிடமிருந்து பதில் வருகிறது. "கோலியாத்தை கொல்ல வந்திருக்கிறேன் என்று போய் சொல்லுங்கள்".

இப்போது தாவீது என்ற சிறு பையன், இஸ்ரவேல் அனைவரையும் அரசாளும் அரசன் சவுலுக்கு முன்னே நிற்கிறான். தாவீது சொன்ன கதை சவுலை திருப்தி படுத்தியதோ அல்லது எப்படி இச்சிக்கலை தீர்ப்பது என்று தெரியாத சூழலில் அவர் இருந்தாரோ, எப்படியோ போராட்டத்திற்கு போக தாவீதுக்கு அனுமதி கிடைக்கிறது.

தான் முன்னெடுக்கும் செயல்பாட்டால் தன் வாழ்க்கையையே இழந்து விட கூடும் என்ற அறிவு தாவீதிற்கு தெரிந்திருக்கவும் நியாயமில்லை. அப்போது தான் சவுல் தாவீதை பார்த்து"நீ போராட்டத்திற்கு போகலாம், ஆனால் இந்த போர் கவசத்தை அணிந்து கொள் என்று கூறுகிறார். போர் வீரனுக்குரிய கவசத்தை அணிந்து கொண்டு தனக்கு தேவையான படைக்கலங்களையும் எடுத்து கொண்டு போருக்கு போவதிலும் பார்க்கத் தன்னை அனுப்பிய இறைவனின் பெலத்தில் நம்பிக்கை வைக்க வேண்டிய முக்கியத்துவத்தை தாவீது உணருகிறார். அரசே! நீங்கள் கொடுத்த கவசத்தை என்னால் அணிந்து கொள்ள முடியாது. நீங்கள் எனக்கு கொடுத்த வாளிலும் பார்க்க இந்த கவண் எனக்கு போதுமானது என்று சவுலை பார்த்து கூறுகிறார் தாவீது.

நம் எல்லோரிடமும் பலகொடைகள் இருக்கின்றன. இக்கொடைகளில் பல இயற்கையாகவே நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாவீதைப் போல எனக்கு கொடுக்கப்பட்ட கொடைகளை இறைவனின் துணையோடு நாம் சிறப்புற பயன்படுத்தும் போது வெற்றி கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : எமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கொடைகளை இனங்கண்டு கொள்ள உதவி செய்தருளும்.

திங்கள் : இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் கொடைகள் மற்றவர்களுக்காக பயன்படுத்துவதற்கே என்ற உறுதியை தாரும்.

செவ்வாய் : நம் எல்லோருக்கும் தகைமைகள் தாலந்துகள் படைக்கலன்களாக கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள செய்யும்.

புதன் : நமக்கு மாம்சத்தோடும் ரத்தத்தோடும் அல்ல, வான மண்டலங்களில் இருக்கின்ற பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு என்பதை புரிந்து கொள்ள உதவியருளும்.

வியாழன் : எமது சொந்த பெலத்தில் நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க இறைவனின் சக்தியில் நம்பிக்கை வைப்பதின் முக்கியத்துவத்தை புரிய பண்ணும்.

வெள்ளி : ஆண்டவர் நமக்கு தரும் உறுதி நமது வாழ்க்கையில் முன்னேறி செல்ல உதவி செய்யும் என்பதை உணர்த்தியருளும்.

சனி : திருச்சபையின் 200ஆண்டு பயணத்தில் ஆண்டவரின் வழிநடத்துதல் கூட இருந்திருக்கிறது என்பதை உணர்ந்து தொடர்ந்து அவர் வழிநடத்துதலை வேண்டி நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 47

# தேவ ஊழியனின் சிந்தனைகள்

என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். (மாற் 4:19)

அன்று கலிலேயா கடற்கரையில் பேதுரு பெற்றுக் கொண்ட அழைப்பு இன்று தேவ ஊழியர்களாகிய எங்களையும் அழைத்திருக்கிறது. அன்று பேதுரு படகையும், வலையையும் விட்டு விட்டு இயேசுவின் பின் சென்றார். இன்று தேவ ஊழியர்களாகிய நாமும் அனேக காரியங்களை விட்டுவிட்டு வந்திருக்கின்றோம். அன்று பேதுரு நீர் கிறிஸ்து தானா? என்று இயேசுவை கேட்டது போல இன்றும் நாம் இயேசுகிறிஸ்துவானவர் என்று விசுவாசிக்கின்றோம்.

அன்று பேதுரு தன்னுடைய பெலவீனத்தில், வேதனை, இயலாமையில் இயேசுவை மூன்று முறை மறுதலித்து இயேசுவை எப்படி வேதனை படுத்தினானோ இதே போல இன்றும் தேவ ஊழியர்களாகிய நாம் சோதனையில் நாமும் இயேசுவை துக்கப்படுத்துகிறவர்களாக இருக்கின்றோம். அன்று திபேரியா கடற்கரையில் மறுபடியும் உயிரோடு எழுந்த இயேசு "பேதுருவே என்னை நேசிக்கின்றாயா?" அப்படியானால் என் ஆட்களை மேய்ப்பாயாக என்று சொன்னார்.

அப்படியாக சொல்லி மீண்டும் நீ என்னை பின் பற்றிவா" என்று சொன்னதுபோல இன்று நாங்களும் பிழைகளை உணர்ந்து மனந்திரும்பும் போது, ஆண்டவர் மறுபடியும் "என் பின்னேவா "என்று அழைக்கின்றார். அன்று பேதுரு விசுவாசத்தோடு இயேசுவின் பின் சென்று சுவிசேஷத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினது போல ஊழியர்களாகிய நாமும் மனந்திரும்பி நம்மை அர்ப்பணித்து ஆத்துமாக்களை அதிகமாக ஆதாயப்படுத்து-
வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : இயேசுவுக்காக விசுவாசமாய் ஊழியத்தில் ஈடுபட்டு, வயது சென்றவர்களாகி, நோயாளிகளாகி ஓய்வு பெற்று இருக்கின்ற தேவ ஊழியர்களுக்காக மன்றாடுகிறோம்.

திங்கள் : தேவனே! ஊழியத்தின் பிரச்சினைகள் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், சவால்கள் மத்தியில் ஊழியம் செய்கின்ற ஊழியர்களை பெலப்படுத்தும்.

செவ்வாய் : ஆண்டவரே! ஊழியத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளில் சிக்கி ஊழியத்தை தொடரமுடியாமல் குழப்பமான நிலையில் விரக்தியடைந்த நிலையில் இருக்கும் ஊழியர்களை பெலப்படுத்தியருளும்.

புதன் : இறைவா! ஆவி, ஆத்துமா, சரீரத்தில் சுகயீனமாக இருக்கின்றவர்களை உம்முடைய வல்லமையினால் சுகப்படுத்தியருளும்.

வியாழன் : ஆண்டவா! கஷ்டமான இடங்களில் உம்முடைய ஊழியத்தை செய்து கொண்டிருக்கும் உம்முடைய பிள்ளைகளின் தேவைகளை சந்தித்தருளும்.

வெள்ளி : இறைவா! சமீபத்தில் ஊழியத்தில் அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்காகவும், தற்போது ஊழியத்திற்காக படித்து கொண்டு இருக்கிறவர்களுக்கு நல்ல வழி நடத்துதலை தரும்படியாக உதவிசெய்யும்.

சனி : ஆண்டவரே! திருச்சபையின் வளர்ச்சிக்காக ஊழியர்களை அவர்களின் ஊழியத்திலே பயன்படுத்தியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 48

# நாமே ஜெபிக்கலாம்

கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசு கிறிஸ்து என்னும் மனிதர் (1 தீமோத்தேயு 2:5)

---

குமார்! ராணி! அடுத்த வாரம் நாம் அனைவரும் இந்தியாவுக்கு போகிறோம் தெரியுமா? என்றார்கள் குமார், ராணியின் பெற்றோர். எதற்காக? என்றார்கள் குமாரும், ராணியும். அங்கே ஒரு வல்லமையான தேவ ஊழியர் இருக்கிறார் அவர் உனக்காக ஜெபித்தால் உனக்கு பரிட்சையிலே நிச்சயம் சித்தியடைவாய் நல்ல தொழிலும் கிடைக்கும் என்றார் அம்மா. அக்காவின் திருமணத்திற்காகவும் ஜெபித்தால் நல்ல வரன் கிடைக்கும் என்றார் அப்பா.

அதற்கு ராணி அப்பா அந்த வல்லமையான ஊழியர் ஐயா யாரிடம் ஜெபிப்பார்? என்று கேட்டார் வேறு யாரிடம் நாம் ஜெபிக்கும் அந்த இயேசு சுவாமியிடம் தான் என்றார் அம்மா.

அப்படியானால் ஏன் நாம் இவ்வளவு பணத்தை செலவு செய்து இந்தியாவரை சென்று அந்த வல்லமையான ஊழியரிடம் ஜெபிக்க வேண்டும்? நாம் இங்கிருந்தே அவர் ஜெபிக்கும் இயேசுவிடம் நேரடியாகவே ஜெபிக்கலாமே என்றாள் ராணி.

பிள்ளைகளின் இந்த ஞானமான கேள்விகளுக்கு பெற்றோரால் உரிய பதில் சொல்லத் தெரியவில்லை.

ஆம் நாம் வேறு ஒருவரின் ஊடாக அல்ல, நாமே கடவுளிடம் இயேசுவின் நாமத்தில் நேரடியாக ஜெபிக்கலாம் அல்லவா? இயேசுவும் அதை தான் விரும்புகிறார். எமக்கு கற்றும் தந்துள்ளார். யாருக்கு தேவையோ அவர்களே கடவுளிடம் நேரடியாக ஜெபிப்பதே சிறந்தது. எனவே எமது ஜெப வாழ்வில் நாமே ஊக்கத்துடன் நேரடியாக கடவுளிடம் ஜெபிக்க பழகவேண்டும்.

நாம் பெலவீனர்களாக இருப்பதால் எமக்கு உதவி செய்வதற்கு தூய ஆவியானவர் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்துபேசுகிறார் என ரோமர் 8:26 வசனங்கள் கூறுகின்றது.

ஜெப நண்பர்கள் எமக்கு இருக்கலாம், அல்லது ஜெப உதவிக்காக ஊழியர்களை நாம் நாடலாம். ஆனால் நமது தேவைகளுக்காக எமது நண்பரான சர்வவல்லமையுள்ள அந்த கடவுளிடம் நாமே நேரடியாக ஜெபிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ாயிறு : ஆண்டவரே என்னுடைய வாழ்வில் உம்மோடு கூட நடக்கிற அனுபவத்தை தந்தருளும்.

திங்கள் : இறைவா எந்நேரமும் ஜெபிக்கின்ற ஒரு உணர்வை தாரும்.

செவ்வாய் : இறைவா என்னுடைய வாழ்வில் நீர் நல்ல நண்பனாக, நல்ல மேய்ப்பனாக இருந்து என்னை வழிநடத்தியருளும்.

புதன் : ஆண்டவா உம்முடைய வார்த்தையின் சிறப்புக்களை அறிந்துக்கொள்ள உதவி செய்தருளும்.

வியாழன் : இறைவா ஒவ்வொரு நாளும் நான் உம்மை சார்ந்து வாழ கிருபையைத் தாரும்.

வெள்ளி : பிதாவே நீர் என்னுடைய பெலவீனத்திலே உம்முடைய பெலத்தை தந்தருளும்.

சனி : ஆண்டவா உம்மோடு நான் ஜெபத்தின் வழியாக கிடைக்கின்ற ஆசீர்வாதங்களை எப்போதும் அனுபவிக்க உதவிசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம்
49

# புதிய ஏற்பாட்டின் ஜெபம்

நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது
(மத் 6:9-13)

வேதாகமம் ஜெபத்தை பற்றிய பல விடயங்களை நமக்கு கற்று தருகிறது. இயேசு தன் சீடர்களுக்கு கற்று கொடுத்த ஜெபம் நமக்கு முன் மாதிரியாக உள்ளது. இந்த ஜெபத்திலே ஒரு ஜெபத்திலே இருக்க வேண்டிய முக்கிய அம்சங்களை காணமுடியும். பரலோகத்தில் இருக்கிற எங்கள்பிதாவே", "உம்முடைய நாமம்", "உம்முடை-ய ராஜ்யம்", "உம்முடைய சித்தம்" போன்றவை இதற்கு உதாரணங்களாகும். இது போலவே இன்னும் சில உண்மைகளை ஆண்டவர் இயேசு கற்று தருகிறார்.

அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்கு தாரும்.

ஆதி திருச்சபையிலிருந்த மக்கள் தங்களுக்கு உரியதை பொதுவாக வைத்து செயற்பட்டார்கள். இற்செயற்பாட்டிலே ஆண்டவரில் தங்கியிருக்க வேண்டிய முக்கியதுவத்தை சொல்லி தருகிறார். எமக்கு அன்றாடம் கிடைக்கும் உணவு ஆண்டவர் தருகின்ற கொடை.

நாம் பிறர் குற்றங்களை மன்னிக்கிறது போல ...

கிறிஸ்தவ வாழ்வில் மன்னிப்பை பெற்று கொள்வதைவிட மன்னிப்பை கொடுப்பதே பிரதானமானது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவிற்குக் காரணம் மன்னிப்பு கொடுத்தலே.

சோதனைக்கு உட்பிரவேசிக்கபண்ணாமல் ...

சோதனைக்காரன் ஒரு கிறிஸ்தவனின் மாம்ச இச்சைகளை தூண்டிவிடுவதற்கு முயற்சி செய்தாலும் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலை கொண்டு இவற்றை ஜெயிக்க முடியும். நாம் ஜெபிக்கின்றவர்களாக இருக்கும் போது உலகத்தை ஜெயிக்கின்றவர்களாகவும் இருப்போம். ஆண்டவர் தனது ஜெபத்தை நிறைவு செய்கின்ற போது" ராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே" என நிறைவு செய்கிறார். ஆண்டவரின் ஜெபத்திலே காணப்படுகின்ற அம்சங்கள் நமது ஜெபத்திலே இருக்கும் போது நாம் ஆண்டவரின் திட்டத்திற்கு உட்பட்டவர்களாகவும் ஜெபவீரர்களாகவும் வாழ முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : பரலோகபிதாவே! எமக்கு சுதந்தரமாக கொடுத்த யாவற்றிற்காகவும் நன்றி.

திங்கள் : எல்லா கனத்திற்கும் பாத்திரரே, பூமியில் உம் சித்தத்ததை நிறைவேற்ற வழிநடத்தியருளும்.

செவ்வாய் : சகாயரே! உமக்குள்ளாக நாங்கள் பெற்று கொண்டவைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள உதவிசெய்யும்.

புதன் : எங்களுடைய பாவத்தின் கிரயத்தை செலுத்தினவரே நீர் எங்களை மன்னித்ததுபோல -நாமும் மற்றவர்களை மன்னிக்க உதவிசெய்யும்.

வியாழன் : உலகத்தை ஜெயித்தவரே! சகல சோதனைகளிலிருந்தும் ஜெயம் கொள்ள உதவி செய்யும்.

வெள்ளி : பரிசுத்தாவியானவரே! எங்களுடைய இரட்சிப்பின் ஜெயத்தை உறுதிபடுத்தும்.

சனி : எல்லா நாமத்தை விட உயர்ந்த நாமத்தை உடையவரே, ஜெபத்தின் வல்லமையை அனுபவிக்க உதவிசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 50

# எதிர்மறையான சிந்தனைகள்

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வை படுத்துவார்.(நீதி3:6)

வாழ்க்கையில் எதிர்மறையான சிந்தனைகள் தோன்றுவது இயல்பு. அவற்றை சரியான விதத்தில் அணுகாதவிடத்து, அவை நம்மையும், மற்றவர்களோடு உள்ள நமது உறவையும், இறைவனோடு உள்ள தொடர்பையும் பாதிக்கும். எதிர்மறையான சிந்தனைகளுக்கு நமது வாழ்வில் தொடர்ந்து இடங்கொடுக்க, இச்சிந்தனைகள் நமது வாழ்வையே கட்டுப்படுத்துகின்றனவாக மாறிவிடுகின்றன.

நேரான சிந்தனைகளால் வாழ்க்கையில் நல்ல விளைவுகளை உருவாக்க முடியும். எதிர்மறையான சிந்தனைகளால் வாழ்க்கையில் உறவு சிக்கல்களை எதிர்நோக்குகின்ற சம்பவங்கள் உங்களுக்கு எற்பட்டிருக்கலாம். ஒரு சம்பவம் நடக்கின்றபோது, அந்த சம்பவத்தில் பங்கு பற்றிய ஏனையவர்களுடன் எதுவுமே பேசாமல் நாமாகவே அந்த சம்பவம் ஏன் நடந்தது என்பதை ஆராய்ந்து அறிந்து பதில் காணமுனைவது எதிர்மறையான சிந்தனைகள் உருவாகக் காரணமாக அமைகின்றது.

எதிர்மறையான சிந்தனைகள் உருவாவதற்கு பல காரணங்களை இனங்காணலாம். வாழ்க்கையில் ஒரு முறைநடந்த சம்பவம் அதுபோலவே திரும்பவும் நடக்கும் என நினைப்பது, நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு நான் தான் காரணம் என நினைப்பது போன்றவை இவற்றில் சில. இறைவனோடு நல்ல உறவில் இருந்த ஆதாமும் ஏவாளும், சாத்தான் போட்ட எதிர்மறையான சிந்தனைகளினால் பாதிக்க படுகிறார்கள். இறைவன் மனிதரிடத்தில் சில உண்மைகளை மறைத்து வைத்திருக்கிறார் என்ற எண்ணம் அவர்களுக்குள் உருவாகிறது.

இறைவனின் நன்மைசெய்யும் பண்பு, ஞானம், உண்மைத்துவம் போன்றவற்றை சந்தேகித்தல், எமக்குள்ளே எழக்கூடிய பயங்கரமான எதிர்மறை சிந்தனைகளாகும். இப்படியான சிந்தனைகள் இறைவனோடு உள்ள உறவை முற்றாக அழித்து விடுகின்றன. இப்படியான சிந்தனைகள் எமக்குள்ளே தொடர்ந்து இருக்கும் போது இறைவனுக்காக சேவையாற்றும் பண்பு நோக்கமில்லாததாக போய்விடுகின்றது. நமது வாழ்வில் வேதாகமத்திலே இறைவனால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து முன்னோக்கி செல்ல வேண்டியது எமது பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : வாழ்க்கையில் தோன்றும் எதிர்மறையான சிந்தனைகளில் இருந்து காத்து கொள்ளும் ஆண்டவரே.

திங்கள் : உமது பெலன் பெலவீனனாகிய என்னோடு கூட இருந்து பெலப்படுத்தட்டும்.

செவ்வாய் : உறவு சிக்கல்களை நாம் சந்திக்கும் போது அவற்றை சரியான விதத்தில் ஆராய்ந்து அறிய உதவி செய்யும்.

புதன் : உலக முழுவதையும் ஆண்டு நடத்தும் ஆண்டவரே உமது சித்தத்திற்கு எம்மை ஒப்பு கொடுக்க உதவி செய்யும்.

வியாழன் : எனது வாழ்வில் ஆண்டவராகிய நீர் ஆளுகை செய்கிறீர் என்பதை கண்டு கொள்ள உதவி செய்யும்.

வெள்ளி : ஆண்டவரே! உமக்காக சேவையாற்ற நீர் எம்மை அழைக்கின்றீர் என்ற சத்தத்தை எனக்குள்ளே இருக்கும் எதிர்மறை சிந்தனைகள் நீங்கி வாழ பாதுகாத்தருளும்.

சனி : எனது வழிகளில் எல்லாம் ஆண்டவரே உம்மை நினைத்து கொண்டு செவ்வையான பாதையில் நடந்து செல்ல வழிகாட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 51

# எமது ஆயுசு நாட்கள் எவ்வளவு?

எங்களது ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் என்பது வருஷமாயிருந்தாலும்,
(சங் 90:10)

---

நமது வாழ்வு குறிப்பிட்ட சில காலங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. எல்லாவல்லமையுள்ள கடவுளின் திருவுளப்படி வாழ்நாட்கள் தீர்மானிக்கபட்டுள்ளன. பிறப்பு தன்னியக்கமாக நடைபெறும் ஒன்று. சிலருக்கு வாழ்வு ஒரு நீண்ட பிரயாணமாக அமைகிற அதே வேளையில் இன்னும் சிலருக்கு அது ஒரு குறுகிய பிரயாணமாக அமைகிறது. ஆனாலும் இந்த வாழ்க்கை பயணம் நிறைவு பெறுவதில்லை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை நீண்டகால நித்திய வாழ்வுக்கு ஆயத்த படக்கூடிய ஒரு தருணம் மட்டுமே. இந்த குறுகிய வாழ்நாட்களில் நாம் எம்மிடம் கேட்டு கொள்ள கூடிய ஒரு கேள்வி உண்டு. எம் நித்தியத்தை நாம் எங்கே கழிப்போம் என்பதாகும். நித்திய வாசஸ்தலங்கள் இரண்டு உண்டு எம் வாழ்நாள் முடிவடைவதற்கு முன்பு இந்த இரண்டு இடத்தில் ஒன்றை நாம் தெரிவு செய்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு இடத்தை விடவேறு இடம் இல்லை.

1. கர்த்தராகிய இயேசுவோடு கூட நித்திய காலமாக பரலோத்தில் ஜீவித்தல் அது பெரியசலாக்கியம்.

2. சாத்தானோடு கூடநித்தியகாலமாக நரக அக்கினியில் பயங்கர வேதனையோடு ஜீவித்தல்

இந்த இரண்டு இடத்தில் ஒன்றை நம் தனிப்பட்ட விருப்பத்துடன் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நித்தியகாலமாக இயேசுவோடு கூட பரலோகத்தில் வாழ கூடிய சரியான தீர்மானத்தை இன்றே எடுங்கள். எம் உள்ளத்தில் வாசஞ்செய்ய இயேசுவை நாம் அழைத்தால் அவர் எமக்குள் வந்து எம்மோடு வாசஞ்செய்வார். அப்பொழுது நித்திய ஜீவன் எமக்குள் வந்துவிடும். மரணத்தின் மூலம் எம் வாழ்க்கை முடிவடைவதில்லை. நித்திய நித்தியமாக ஜீவிப்போம்.

என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் ஜீவிப்பான். இப்படியாக உரைத்த இயேசுவின் கரத்தில் எம் ஜீவியத்தை ஒப்படைத்து விடுவோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஜீவியம் தேவன் மூலம் பெற்ற கொடை என்பதை நினைவு கூருவோம்.

திங்கள் : அவருடைய ஜீவ சுவாசத்தினாலே நாம் ஜீவ ஆத்துமாக்களாக மாறினதால் கடவுளைத் துதிப்போம்

செவ்வாய் : பூமியிலிருக்கும் எம்மை, நித்தியத்திற்கு வழிநடத்து கின்றபடியால் ஸ்தோத்தரிப்போம்.

புதன் : நித்திய நித்தியமாக இயேசுவோடு நாம் பரலோகத்தில் வாழபோகிறோம் அதற்காக ஸ்தோத்தரிப்போம்.

வியாழன் : இந்த நித்திய வாழ்வை மற்றவர்களும் பெற்று கொள்ளத்தக்கதாக என்னை பயன்படுத்தியருளும்.

வெள்ளி : என் முழு விசுவாசத்தையும் உம் மீது வைக்க உதவிசெய்தருளும்.

சனி : என் வாழ் நாள் முழுதும் உம்மை சார்ந்து ஜீவிக்க எனக்கு கிருபை செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் 52

# தேவசாயல்

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார்.
(ஆதி 1:26-28)

கடவுள் மனிதனை தம் உருவிலும், தம் சாயலிலும் படைத்தார். ஆற்றல் உள்ளவனாக, ஆளுகை செய்கிறவனாக படைத்தார். ஒவ்வொரு மனிதனும் தன்னை பற்றி சில மதிப்பீடுகளை (selfesteem) வைத்திருக்கின்றான். அந்த மதீப்பீடுகளின் அடிப்படையில தன்னை பற்றிய ஒரு படத்தையும் (Self image) வைத்திருக்கின்றான். இந்த் மதிப்பீடுகள் எப்போதும் சரியாக இருப்பதில்லை.

கடந்த காலத்தில் உங்களை சுற்றியுள்ளவர்கள் உங்களை பற்றி கூறிய தவறான கணிப்புகள், "உன்னால் முடியாது","நீதகுதியற்றவன்" என்ற மதிப்பீடுகளை ஏற்படுத்தியிருக்கும். நீங்கள் சந்தித்த ஏதோ சிலதோல்வியான அனுபவங்கள், 'என்னால் முடியாது', 'நான் தகுதியற்ற வன்','நான் தோல்வியடைபவன்' என்று நீங்களே உங்களை பற்றி குறைவான மதிப்பீடுகளை உருவாக்க காரணமாய் இருந்திருக்கும். இவை நீங்கள் அடைய வேண்டிய இடத்தை அடைய முடியாமல், கடவுள் உங்களுக்கு வைத்திருக்கின்ற இடத்தை பெற்றுக் கொள்ளாதபடி உங்களை தடுத்து நிறுத்துகிறது.

சில வியாபாரிகள் ஒட்டகங்களில் பாலைவனமொன்றுக்கு ஊடாக பயணம் செய்தனர். இராத்தங்கலுக்காக சத்திரமொன்றுக்கு சென்றனர். சத்திரக்காரன் ஒட்டகங்களை இளைப்பாற செய்ய இடம் காட்டினான். ஒரு வியாபாரிக்கு தனது ஒட்டகத்தை கட்ட கயிறு கிடைக்கவில்லை. சத்திரக் காரன் இவ் வியாபாரியிடம் ஒட்டகத்திற்கு தெரிய தக்கதாக கயிறு இருப்பது போலவும், கனுவில் கட்டுவது போலவும் பாவனை செய்து அவனது ஒட்டகத்தை கட்டும்படி கூறினான். ஒட்டகமும் கட்டப்பட்டதாக நினைத்து அந்நிலையிலே இருந்தது. மறுநாள் காலையில் எல்லா வியாபாரிகளும் ஒட்டகங்களை அவிழ்த்து கொண்டு பயணப்பட்டனர். இந்த வியாபாரியின் ஒட்டகம் மட்டும் அசைய மறுத்தது. சத்திரக்காரன் ஒட்டகம் தான் கட்டப்பட்டுள்ளதாக நினைத்திருக்கிறது என்று வியாபாரியிடம் கூறினான். மீண்டும் அவிழ்ப்பது போல வியாபாரி பாவனை செய்ததன் பின் அவ்வொட்டகம் பயணத்திற்கு தயாரானது.

உங்கள் தவறான மதிப்பீடுகள் உங்களை கற்பனையாக கட்டி வைத்திருக்க கூடும். கடவுள் உங்களுக்கு வைத்திருக்கிற இடத்தை நீங்கள் அடைய முடியாதபடி தடைகளாக காணப்படலாம் உங்கள் வாழ்விலே, உங்களை தடை செய்கின்ற உங்கள் மதிப்பீடுகள் எவை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மன்றாட்டுக்கள்.

ஞாயிறு : ஆண்டவரே! உம்முடைய சாயலில் படைக்கப் பட்ட நான் உம்மை மகிமை படுத்தி வாழ உதவி செய்தருளும்.

திங்கள் : இறைவா! உம்முடைய குணாதிசயங்கள் கொண்டவனாக கொண்டவளாக வாழ கிருபையைத் தாரும்.

செவ்வாய் : ஆண்டவரே! மற்றவர்கள் என்னில் உம்மை கண்டு கொள்ள உதவிசெய்யும்.

புதன் : இறைவா! என்னை குறித்து நான் தாழ்வாக நினைக்கின்ற மனப்பான்மையை என்னை விட்டு அகற்றும்.

வியாழன் : ஆண்டவரே! நான் மற்றவர்களையும் தாழ்வாக நினையாதிருக்க உதவிசெய்யும்.

வெள்ளி: : இறைவா! வாழ்க்கையில் என்னால் முடியாது என்ற எண்ணத்தை நீக்கி உம்முடைய பெலத்தினாலே எதையும் செய்ய முடியும் என விசுவாசிக்க உதவிசெய்யும்.

சனி : ஆண்டவரே! உம்மாலன்றி என்னால் யாதொன்றும் செய்ய முடியாது என்ற உண்மையை எனக்கு நினைவூட்டியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org